82

91

101

Verification completed on 19-1-1963

82

82

"அனுபவ வைத்திய கை முறை
அட்டவணை"

ஆனந்தாஸ்ரமம், (2)

ஸ்ரீதர சுவாமிகள்,

திருச்செங்கோடு,

சேலம் ஜில்லா.

(82)

அ னு ப வ வை த் தி ய கை மு றை அ ட் ட வ ணை

****

ஆனந்தாஸ்ரமம்,

ஸ்ரீதர சுவாமிகள்,

திருச்செங்கோடு

சேலம் ஜில்லா.

****

O.N.

The manuscript Note book is returned to individual on 15.12.62.

அனுபவ வைத்திய கைமுறை.

AAAAAAA

சு.சு.22.8.

16.8.62.

1. ரச கற்பூர குளிகை.

கிரந்தி லிங்கப் புற்று யோனிப் புற்று, சொறி சிரங்கு, குழிபட்ட ரணம் குழிக்கிரந்தி புண், புரை முதலிய சலக ரோகங்களும் தீரும். பூரம் வீ.5, முளை நீக்கின பூண்டு வீ.20, மிளகு வீ.30, வெற்றிலை வீ.40, பூரத்தை சுத்தி செய்து கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து அதன் பிறகு மற்ற சரக்கெல்லாம் போட்டு அரைத்து வெற்றிலைச் சாறால் 6 ஜாமம் அரைத்து சிறு சுண்டைககாய் அளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு காலை மாலை 7 நாள் ஒவ்வொரு மாத்திரை வாயில் போட்டு முழுங்கவும்.

பத்தியம்:- உப்பு, புளி ஆகாது. இரவில் மாத்திரம் பசும்பால் கூட்டிக் கொள்ளவும். 7 நாள் ஆனவுடன் மறு பத்தியம் வறுத்த உப்பு சுட்ட புளி, வறுத்த துவரம் பருப்பு சேர்க்கவும். இப்படி 15 நாள் ஆனவுடன் ஒம்ம் தேய்த்து ஸ்நானம் செய்யவும். பிறகு எண்ணை ஸ்நானம் செய்யவும். பத்தியம் தவறில் சங்கடம். கை கால் பிடிப்பு, வீக்கம் முதலியது உண்டாகும். இது அகஸ்தியர் வாகடத்திலுள்ளது. இந்த முறை அநுபோகப்பட்டது.

2. தாம்பிர குளிகை.

மெல்லிய தர்ம்பிர தகடு பலம் 2 எடுத்து புளியிலையில் கொதிப்பித்து கழுவி 2 பலம் நெல்லிக்கா, கெந்தகம், எருக்கன் பாலால் அரைத்து மேற்கண்ட தகட்டிற்கு இரு புறமும் அப்பி அகலில் சீலை செய்து 30 எருவில் புடம் போடவும். மேற்கண்ட தாம்பிரம் வெட்டையாகும். அதற்கு சம பாகம் சூதம் கெந்தகம் சேர்த்து செருப்படைச் சாற்றால் ஆட்டி முன் போல் புடமிட்டு எடுத்து அதற்கு 8-ல் ஒரு பாகம் மிளகு சுத்தி செய்த நாபியும் சேர்த்து சித்திர மூல கஷாயத்தால் 2 ஜாமம் அரைத்து பின் மிளகு கஷாயத்தில் 2 ஜாமம் அரைத்து மிளகு அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் போட்டு நெல்லுக்குள் ஒரு மாதம் வைத்து பிறகு உபயோகிக்கவும்.

அநுபானம்:- திப்பிலி தூள், இஞ்சி சார் பனவிடையில் ஒரு குளிகை தாக்கு. 13 ஜன்னி கொடி வேலி கஷாயத்தில் 18 குலையும் திரிகடுகில் சுரங்களும் தேனிலிட க்ஷயமாகும் குன்மமும் பவுத்திரமும் சகல வியாதிகளும் தீரும். தாம்பிரமானதால் அதிக தீனி கொள்ளும் இச்சா பத்தியம். நெய், பால், மோர் குளிச்சியான பதார்த்ம் விசேஷமாய் கொள்ளவும்.

3. காங் கேயன்எண்ணை.

திமிர் குஷ்டம், தடிப்பு இரணம், மேக சட்டை, மேகவூரல், முதலிய சகல ரோகங்களும் நீங்கும். அதிக சிலாக்கிய பட்ட எண்ணை.

பூவரஞ்ச பட்டை ரசம், அதிதிப்பட்டை ரசம் வெள்ளறுகு ரசம், கோவை ரசம், பீசங்கன் ரசம் வகைக்கு படி கால் வேக வைத்த முத்தெண்ணை படி 2 அமுக்கரான் கிழங்கு பலம் $2\frac{1}{2}$, பரங்கி சக்கை பலம் 3, லவுங்கப்பட்டை, கார்கோலரிசி, கடுகுரோகணி, திப்பிலி, வாய் விங்கும் வகைக்கு பலம் 1 வால் மிளகு பலம் $1\frac{1}{2}$, அரைத்து தூள் செய்து போட்டு பசும் பால்படி கால் விட்டு காய்ச்சி வடித்து வைத்துக கொண்டு பசு நெய்யை துணியில் தடவி சுத்தி செய்த பூரத்திற்கு சுற்றி கொளுத்திய பூரம் பலம் கால் தூள் செய்து போட்டு கலக்கி அரை பலம் வீதமாக 7,14,21, நாள் புசிக்கவும். சுரக்காய் பீர்க்கன் காய் முருங்கை பிஞ்சு பருப்பு உப்ப அரைக்கீரை நெய் ஆகும். புளி நீக்க வேண்டியது.

4. கெர்ப்ப சஞ்சிவி எண்ணை.

சித்தர மணக்கெண்ணை படி கால், பசும் பால் படி கால், பூண்டு பலம் அரையே அரைக்கால், கழுதைப் பால் படி அரையேஅரைக்கால், கருஞ் சீரகம் வீ. $1\frac{1}{2}$, பூண்டை உரித்து மேல் தோல் போக்கி சிறு அரிந்து சீரகத்தை எண்ணை விட்டரைத்து யாவும் ஒன்றாய் கலந்து அடுபபேற்றி எரிக்கவும். மெழுகு பதம் வரும் போது கை விட்டுப் பார்த்தால் குளிர்ந்திருக்கும். அப்பதத்தில் இறக்கி வைத்துக கொண்டு கெர்ப்ப ஸ்திரிகளுக்கு 5-வது

மாதம் பிறந்தது முதல் நாள் அரை பலம் வீதமாக கொடுக்கவும். காலை மாலை 5 நாள் கொடுக்கவும். உப்பு, புளி தள்ளி பத்தியமாயிருக்கவும். கருவை அழிக்கிற கிரந்தி சூலை கெர்ப்ப காரிகம் இவை அணுக ஒட்டாமல் கர்ப்பத்துடன் பிரசக காலத்தில் யாதொரு வருத்தமும் இல்லாமல் சிசு பிறக்கும். இதுவுமன்றி தாய் தகப்பருக்கு எவ்வித வியாதியிருந்தாலும் அப்பிள்ளைக்கு அணுகாது பூரணயிசு பெற்று வளரும், மாந்தம் கணம் கரப்பான் முதலிய யாவும் வந்து என்னைகளுக்கெல்லாம் இது மிகவும் உத்தமமானது.

5. காசம் 16-க்கும் நெய் கை கண்டது.

சகல காச ரோகங்களுக்கும், இருமலும் நீங்கும். முயல் ரத்தம் படி அரை வெள்ளாட்டு நெய் படி அரைக்கால், தூதுவளை சார், முசுமுசுக்கை சார், சீயக் கொடிச் சார், செங்கன் சார் வகைக்கு படி அரைக்கால் இச்சாறுகளும் நெய்யும் ஒன்றாய் கலந்து அதில் ஏலம், கண்டு பரங்கி கண்டங்கத்திரி, லவங்கம், கடுக்காய், வாலுளுவை வகைக்கு பலம் ஒன்று எடுத்து சூரணம் செய்து போட்டு அடுப்பேற்றி எரித்து நெய்யை வடித்து வைத்துக் கொண்டு உச்சி கரண்டிய அளவு காலை, மாலை கொடுத்து வரவும். மேற்கண்ட வியாதிகள் நீங்கும். இதில் தாளகம், தாம்பிரம், வெள்ளி ஆகிய பஸ்பங்களில் ஒன்று வைத்து சாப்பிட்டால் இரமபொவும் நல்லது.

6. அலரி தைலம்.

கால் படுவன், புண்ணுகள் கொப்புளங்கள், சிறிய பெரிய சிரங்குகள், மேக ரணங்கள் ஆறாத ரணங்கள் முதலிய கடிகளும் யாவும் நீங்கும்.

அலரி கொம்பு துண்டு துண்டாக வெட்டி குழித்தைலம் இறக்கி வைத்துக் கொண்டு தடவி வந்தால், மேற்கண்ட புண், புரைகள் யாவும் நீங்கும். மேற்கண்ட அலரி கொம்பின் மீதுள்ள பட்டையை அரைத்து தேனில் கெந்தகமும் சேர்த்து வைத்து நல்லெண்ணெயில் குழப்பி காலை சாப்பிட்ட பின் உடம்பில் பூசிக் கொண்டு மாலையில் பூவாங்காயால் தேய்த்து வென்னீர் ஸ்நானம் செய்து வந்தால் சிறு சிரங்கு, பெரிய சிரங்கு முதலியவை நீங்கும்.

7. ரச பஸ்பம்.

மாவள்ளி கிழங்கு, சாற்றில் ரசத்தை 3 ஜாமம் அரைத்து ஒரு செப்பில் போட்டு மேற்கண்ட சார் நிரைய விட்டு மேல் மூடி சீலை மண் செய்து 10 எருவில் புடம் போட பஸ்பம் ஆகும். வாய் பிடிக்காது. எரியாது. வைத்தியத்திற்கு ரொம்பவும் உபயோகம் ஆகும். கால் பிடிப்பு, கை பிடிப்பு, கீழ் வாய்வு, முதலிய சகல வாதங்களும் நீங்கும். வெள்ளை முதலியதும் தீரும். அரிசி எடை இரண்டு போதும்.

8 வெடியுப்பு பஸ்பம்.

ஒரு மொந்தையில் சோற்றுக்கத்தாழை சோற்றை கீழும் போட்டு மேல் பொட்டலுப்பு போட்டு மேலும் மேற்கண்ட சோற்றை போட்டு சீலை மண் செய்து கெஜபுடம் போட பஸ்பம். நீர்கட்டு, சோகை வீக்கம் முதலியது தீரும்.

9. ரச டம்ளர்.

மயில் துத்தம் பலம் 1, ரசம் தோலா 1 இவ்விதம் தேவையானஅளவு எடை போட்டு துத்தத்தை மாத்திரம் கல்வத்திலிட்டு நேக அரைத்து மை போலான பின் யெடுத்து தாம்பர கோப்பையில் பாதி போட்டு அதன் மேல் ரசத்தை விட்டு மற்ற பாதி மயில் துத்தத் தூள் போட்டு அதன் மேல் பழச்சார் விட்டு திரந்த வெளியில் மறப்பான ஆள் போகாத பத்திரமான இடத்தில் வைத்து விட்டு 4,5 நாளைக்கு பின் எடுத்து ரசத்தை மாத்திரம் பிழிந்து கெட்டியான உருண்டையை எடுத்து வைத்துக் கொண்டு பிழிந்த ரசத்தை துத்த தூளில் போட்டு கலந்து மறுபடியும் பிழிய வேண்டியது. இது போல் செய்தால் எல்லா ரசமும் கெட்டியாய் விடும். இந்த உண்டையை தாம்பர கிண்ணத்தில் போட்டு பழச் சாற்றை நிரைய விட்டு நிழலில் வைத்து விட்டு 4,5 நாள் பொருத்து சாற்றை ஊற்றி போட்டு ரசத்தை பாத்தால் கெட்டியாயிருக்கும். அதை எடுத்து ஒரு கிளாசில் போட்டு உள் பக்கம் முழுதும் ஒட்டி வழித்து நயமாக

பால் செய்து நிரைய பழச் சார் விட்டு 4,5 நாள் நாள் பொருத்து எடுத்து
த்தி விட்டு பார்த்தால் பிசைந்து கெட்டியாய் விடும். பின்பு கிளாசை கவுத்தி
டம்பளர் வெளியில் ~~ஆகாதே~~ வந்து விடும். அதை எடுத்து பத்திரமாய் வைத்துக்
வயான போது பாலே அதில் நிரைய ஊற்றி சற்று நேரம் வைத்து இருந்து
குடித்தால் சர்வ வியாதியும், நீங்குவதல்லாமல் தேகம் வஸ்ரம் போல்
ம் அறிவு தீட்சன்யமும் தேஜசும் பார்க்கிறமும் கல்வி சவ மாத்தியமும்
கும்.

10. இரச பற்பம்.

பில் இதசத்தை 3 ஜாமம் அரைத்து பார்த்தால் கெட்டியாய் விடும். அதை
ப்பில் போட்டு நிரைய மேற்கண்ட பால் விட்டு ஒரு மூடி சீலேமண் செய்து
டம் போட பற்பமாம்.

11. மஞ்சள், வெள்ளை, இரத்த வெள்ளை முதலியவைகள் தீர தீநீர்.

டியிலுள்ள குமிழ் நீண்டிருப்பதை கொண்டு வந்து குமிழ் நடுவில் துவாரம் செய்து
ய் கார்க்கை போட்டு வைத்துக் கொண்டு ஒரு மொந்தையில் படிகாரம் வெண்
ய் இம்மூன்றும் வேண்டியஅளவு எடுத்து ஒரு மொந்தையில் ஒன்னிரண்டாய் தட்டி
விட்டு ஊற வைத்து காலேயில் மேற்கண்ட மொந்தையில் அடுப்பின் மீது வைத்து
ர் வாய் பிரம்பின் சுற்றிலும் பொருந்திருக்கும் படி சீசாவை வைத்துசீலே
க எரித்தால் நுனி சீசாவில் அடியின் குமிழில் உள்ள ஓட்டை வழியா ஆவி கிளம்பி
போய் முட்டி நீராக மாறி குமிழ் வரையில் தங்கும். அது நிரைந்தால்
கொண்டு மறுபடியும் மொந்தையின் மீது சீசா வைத்து எரிக்கவும். குமிழின்
நீர் இறங்கி நிரைகிற வரை ஊற்றிக் கொள்ளவும். இதுபோல் 3,4 தரம்
சக்கையை எடுத்து ஊற்றி விடவும். அதற்கு மேல் செய்தால் சக்தி இருக்காது.
கத்தை கோழி குஞ்சியின் சாற்றில் 4,5 துளி போட்டு காலே மாலே 3
5 நாள் சாப்பிடவும். எப்பேர்பட்ட பாதை கடுப்புகளும் தீர்ந்து விடும்.

12. தாது புஷ்டி கை கண்டது.

கஜ்ஜூர் காய், ஜுள்ளங்கி விரை, ஜாதிக்காய், முருங்கை விதை இந்த 4-ம்
நேர் சரி எடை அபின் போட்டு அரைத்து குன்றி அளவு குளிகை செய்து
எடுத்து சாப்பிட்டு பால் சாப்பிட வேண்டியது. அன்று புளி கூடாது.
சள் கருவுடன் தேன் சரி எடை விட்டு கடைந்து அதில் ஒரு குன்றி எடை
சேர்த்து சாப்பிடவும். நீடித்து சாப்பிடுகிறவர்கள் காலேயில் மேற்கண்ட
அரைப்படியாய் வற்ற வைத்து காலே பால் சாப்பிட்டு வரவும். ஒரே
த பார்த்தால் இதன் உண்மை வெளிப்படும். கை கண்டது.

13. சரமாரி தைலம்.

கடுக்காய் விதை, தானிக்காய் விதை, புன்னே விதை, புங்கம் விதை,
5 ஆறு வித்துக்களேயும் சம பாகமாய் நிறுத்தி எடுத்து ஒரு பானைத்திலிட்டு
ர விட்டு 20 நாள் ஊரிய பின் 21வது நாள் எடுத்து நிழலிலுலர்த்தி
மிளகு கலந்துக் கொண்டு சிறியதாய் 7 தமருள்ள ஒரு பாண்டத்திலிட்டு
ப்பிற்கு ஒரு பானேயை கவுத்தி சீலே மண் செய்து உளர்த்தி அடியிலுள்ள
நேராய் சிறு பாண்டம் பொருத்தி பூமியில் புதைத்து சரக்கு உள்ள
ட்டி அடுக்கி குழி தைலம் இறக்க வேண்டும். நடு பாண்டத்திலிருந்தே
டும். மூன்று பாண்டங்களும் பூமிக்குள்ளிருக்கும்படி பெரும் பள்ளம் வெட்ட
தும் பாண்டத்திற்கும் பொருத்தமாக வறட்டிகள் அடுக்க வேண்டியது. நி
க வேண்டியது. அந்த இடத்தில் பிறர் யாரும் வரக்கூடாது.

தைலம் இறங்குமளவும் நிர்வாணி பூஜை செய்ய வேண்டியது. ஓம் கிலியும் சவ்வும் ஐயும் ரீயும் வரீயும் கிரீயும் ஆம் உளம் என குழியின் நிதானம் பார்த்து அறிந்து தைலமிறக்கவும். இந்த 9 வாக்கியமும் புருவ நிதானத்துடன் ஓதியிருந்து பிறகு தைலத்தை சீசாவில் இருத்து வைத்துக கொள்ளவும். இதனால் தீரும் வியாதி

இருத்திருந்த தைலத்தை கொஞ்சந் தொட்டு மயிர் தனியில் தடவியிட கருத்து போகும்
ஏயத்திருந்த வெடிகுலை கண்ட மாலை என்னவுரற சொறி சிரங்கு கரப்பனெல்லாம்
உய்த்திருந்து கெட்டோடும் தைலந் தன்னை ஓடி குரை நோய்களுக்கு பூசிப்பாரு
மோய்த்திருந்த நோய்களெல்லாம் ஓடிப் போகும் முழுத்திருந்து தைலத்தை முழுங்குவாயே.

முழ்கையிலே விஷ நீரு முடி சிரங்கு
மூர்க்கமுள தலை வெட்டி மேகந் தீரும்
மாய்கையிலே புழு வெட்டி ரோகந் தீரும்
மகிமையிலே மயிர்தவும் கருத்தேப் போகும்
மூழ்கையிலே சாத்திய நோய் நடுக்கந் தீரும்
முடி சிரங்கு குருந்தடிப்பு விளையும் தீரும்
ஆழுகையில் பரம் பரனை கட்டியுந் தீரும்
அரனை கடி, சிலந்தி கடி வாளம் போமே.

போமென்ற குழிவாழைமுட்டு வாழை
புடைத்தெழுந்த தடை வாழை முதுகு வாழை
ஆழமையடி ஊமையடி சிலந்தி வாழை
அப்பனே சொல்லுகிறேன் அன்பாய் தானே
வேமென்ற கண்ணோடு யிடுப்பு சிட்டை
இரு பிடரி தனி நாசி சிலந்தி பூத்து
தானுச்சி பிளவை யிமை கண்மேல் வாதம்
சரி நேத்ர பிளவையிதில் தணியும் பாரே.

தனியான பெண் குறி மேல் கரப்பான் கட்டு
தடர் சிலந்தி படர் சிலந்தி யல்குல் பூத்து
பிணியான பவுத்திரமும் மூலை மூலந்தான்
பின் கரப்பான் முன் கரப்பான் அண்டப் பூத்து
சடிவாத உந்திப் புண் தடையில் பூத்து
சடி குலையடி குலை மேக குலை
கெணியாத அலை கடி மேல் யிலை மேற் புண்கள்
கீழ் நாக்கு மேல் நாக்கு பூத்து போமே.

பூத்து போம் யிருபிளவை நகத்தின் குலை
புரை விழுந்த படுஞ் சிரங்கு நிரத்தும் பாரு
அத்துப் போம் நரக் குண்ணி மூக்கின்ட புண்ணறு
அகலாத நோய்களெல்லாம் அகன்று போமே
வெத்துப் போம் மூலையான நோய்களெல்லாம்
விழி முழிங்கி யிமை முழுங்கி வெகு நாள் புண்கள்
செத்துப் போம் இத்தனைக்கும் பூசும் போது
தீர்ந்து போம் இன்ன முண்டு சொல்லக் கேளே.

சொல்லக் கேள் நல்ல ரவம் விரியன் பாம்பு
குழெலிகள் குருட்டெலிகள் புடையன் மூக்கான்
வெல்லக் கேள் தேளோடு நட்டு வாக ரவி
விஷ முள்ளு தைத்தாலும் பூசு பூசு
இல்லைக் கேள் தொலைந்து விடும் விஷங்களெல்லாம்

இத்தைலம் வெகு சுருக்கு மெத்த நன்று
சொல்லக் கேள் விடீங்களோடு நோய்கள் யாவும்
இக்கல்ல* கொல்ல வென்றே இத்தைலம் கூறினேனே.

கூறினேனே புகையிலையும் புளியும் தன்னு
கூறிய பச்சை மீன் தன்று நன்று
மீரியே தின்னுதே அசனந் தன்னே
முழுங்காதே யுரங்காதே மிகச் சொல்லாதே
ஏறினேன் யென்ற வரை யிகழ்ந்திடாதே
யேகாதே வையாதே திட்டாதே நீ
ஆரியே பதமாக வுண்டால் மைந்தா
அமர் தமத தன்னிலையாய் நிலைக்குந்தானே.

14. சகல யேக ராஜாங்க ரசகெந்தி மெழுகு.

இரசம், ஜாதிக்காய், நீர்பூண்டு, கெந்தி, மிளகு, கொள்ளு, அரிதாரம், சீரகம், ரசகற்பூரம், மி தேங்காய், அரிதாரம், கார்கோலரிசி, சின்னி வேர், காந்தம், மாசிக்காய், சங்கம் வேர், துருசு, தேவதாரம், பரங்கி சக்கை, துத்தம், தேவ தாரம், வாய்விளங்கம், சேங்கொட்டை, மூர்தார்சிங்கி, வசம்பு கடுககாய் தோல், சுக்கு, லவுங்கம், சிறு தேக்கு, ஓமம், அரத்தை, தாளிசம், மஞ்சள், கோஷ்டம், எட்டிவிதை, திப்பிலி, கருஞ் சீரகம், தேத்தான் வித்து, வாலுவை, காட்டு சீரகம், எள்ளு, சோம்பு, முந்திரிக்கை, அமுக்கிரா வேர், ஏலம், பிரம்மி மூலம், சித்திரமூலம் கொப்பரை கொல்லங் கோவை இவைகளை வகை ஒன்றுக்கு ஒரு விராகன் இடையாக நிறுத்தி எடுதது கல்லுரலில் போட்டு இடித்து வஸ்திர காயம் செய்து அத்துடன் இரண்டு கோழி முட்டைகளை உடைத்து ஊற்றி பிறகு நிறுத்தெடுத்து அது இருக்கும் எடைக்கு சரி எடை புழையதாக இருக்கும் பனை வெல்லம் சேர்த்து கல்லுரலில் போட்டு புனறு இல்லாத மரவுலக்கை மை போல் இடித்து எடுத்து வைத்துக் கொண்டு இதனால் தீரும் வியாதிகள்.

குத்தப்பா யிது நேரே பனை வெல்லந் தான்
ணுமாக நால் ஜாமம் யிடித்துத் தீரு
பெய்தப்பா வழித்தெடுத்து சிமிழ் வைத்து
பேதயில் லை சுண்டைக்காயளவு கொள்ள
மூத்ப்பா மோருஞ் சோறுண்டு முன்னே
முசியாமல் மருந்துண்ணு நண்டலந்தான்
சித்தப்பா முழுகு நாள் மருந்துண்ணுதே சிறப்பாக பத்தியந் தானிலை தானே
தானென்ற வெட்டி சூலை மேக சூலை

வானென்ற துடிவாத சூட மோடு
வளமான கால் குடைச்சல் கரணை தீரும்.

மானென்ற ஆம் விப்பருதி மாலை
மதியாத குட்ட மொடு விடீ நீர் தீரும்
கோனென்ற குறை நோயும் சிரங்கு தீரும்

ஊமான புழு வெட்டு தடியும் தீரும்
போமேரு போனி தன்னில் லிங்கந் தன்னில்
பொலிவான ஆமையடி சிலந்தி மேகம்
ராமே நீ செங்கிரந்தி கருங் கிரந்தி
தயவான அரி கிரந்தி பொரி கிரந்தி
வாமேரு பருங் கிரந்தி யிடி கிரந்தி
வளமான யிடி விழுந்த புரை மேல் புண்கள்

ஆமேரு அரைக் கடியும் தண்டில் புண்ணும்
அடைவான குன்னி மாதேவிப்ராமே.

ஆமேரு கடை வாழை மூட்டு வாழை
அடைடுழி வாழைமுருடு வாழை
சேமேரு புழு வாழை வீலாவீல் வாழை
செக்கை செயலான தமக்காள சிலந்தியோடு
ஓமே நீ குரிப்புற்ற போளிய புற்று
தாமே நீ பல் சிலந்திக் கன்னத் தோசை
சதை வளரும் கன்ளூசை போடும் பாரே
யான் சான ராஜனென்ற பிளவை போடு
கரடா நேத்திர மேல் பிளவை யோடு
கோடிதான் நடி சிலந்தி புகை சிலந்தி
தேபடா பவத்திரங்கள் மூளை மூலங்கள்
நெடியமத் மெட்டு சக்கரத்திலேடு
வீரடா வினை யெல்லாம் தீரும் தீரும்
வீதமாக போகருட செயலால் தானே.

15. மேருவின் என்ணை.

என்னெண்ணையில் ஓர் படியில் தும்பை மலர்ச்சார் படி எரித்து பதமாய் வடித்த
இன்பமுடன் மூன்று முறை முழுகி யதின் விபரமும் எடுத்துறைக்க கேளுமே
கன்ன மர கீரசு மட்டாக அதை தேய்த்தமே காய்ச்சியே சீக்காய்த ணை
கருத்துடன் வெந்நீரில் பச்சை ஜலமின்றியே கணக்குடன் மூழ்கி யன்று
தள்ளிவிடு புளி மோர் குளிர்ந்த ஜலமின்றியே ஸ்நானமது கொள்ள வல்லிலார்
தன்னதா தள்ளாத சிரகடிகள் பீனிசமு நேத்திர நோய் தான் பயந்தோடுமிதில்
வன்னி தெய்வ பாலை அறனூர் கிருபைமத்த பொதி மாமலை அகஸ்தியரிதை
வரிசையுடன் மேருவின் தைலமதை கவிதயாய் வகுத்துறைத்தனர் பாருமே.

16: காது புன் தீர உருத்தல் குடைச்சல் கனத்த நோவு பாபறம்

இறைச்சல் தீர என்ணெய்.

முசுருமுட்டை, பூநாகம், நண்டிறைச்சி, புண்டு இந் நான்கு சரக்கும் வகைக்கு விராகன் ஒன்றரை சமமட்டம் நல்லெண்ணெய் ஒன்றெ முக்கால் பலம் இதில் போட்டு புண்டு மாத்திரம் நசுக்கி போட்டு கடுகு பதமாய் காய்ச்சி பஞ்சில் தொட்டு 4,5 வேளை காதில் இடவும். மேற்கண்ட நோவுக்ள் தீரும்.

17. வெள்ளி பற்பம்.

தேவையான அளவு ஊதின வெள்ளியை ராவி மேற்கண்ட ராவின பொடியை கல்வத்திலிட்டு நாயுருவி உப்பு போட்டு நாயுருவியின் சாற்றால் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் அகலிலிட்டு மூடி சீலைமண் செய்து உலர்த்தி அரைகஜம் புடம் போட்டு ஆறினபிச் வித்தி எடுக்க பஸ்பம் அல்லது சுன்னமாகும். மஞ்சளுக்கு சிவக்கும்.

(வேறு)

மேற்கண்ட ராகு பொடியை ஆத்துப் பூசுத் சாற்றால் அரைத்து மேற்கண்ட தனடிவை யை அரைகவசம் செய்து அல்லது அடை தட்டி அதன் நடுவில் வைத்து அதன் மேல் மர்க்கின் மாவின் அடை ஆதுந் மேலும் வைத்து முக்கால் கீழும் புடம் போடவும். அப்படியே வைத்தால் அச்சு அழியாமல் அலம்ப மாகும்.

18. லோக பஸ்பம்.

அயப் பொடியை முறைப்படி சுத்தி செய்து தேவையான அளவு கல்வத்திலிட்டு சேமந் தண்டை இடித்து சார் பிழிந்து அதில் மூன்று நாள் அரைத்து சாளுக்கில் மெல்லியமாய்

தசடு மேல் பரப்பி மேல் மூடி சீலை மண் செய்து கெஜம் புடம் போட பஸ்பம்.

17.8.62. 19. நீர் அழிவு தீர மாத்திரை.

சுத்தி செய்த கார் ஈயம் வி 1, ரசம் வி 1, ஈயத்தை உருக்கி அதில் ரசத்தை சேர்த்து ஊசி காந்தம் வி 6, லிங்கம் வி 2 கூட்டி பசுவின் மோரால் அரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து நிழல் உளர்த்தி வைத்துக் கொண்டு இரு வேளையும் ஒவ்வொரு மாத்திரை மேற்கண்ட மோரில் இழைத்து உள்ளுக்கு கொடுக்கவும். இவ்விதம் ஒரு மண்டலம் கொடுக்க நீர் அழிவு தாகம் தீரும்.

20. செக்கு சொட்டு மூத்திரம் வெகு மூத்திர பற்பம்.

கருவங்கம், வெள்வங்கம், நாகம், இம் மூன்றும் சுத்தி செய்து வகைக்கு இரண்டு தோலா எடுத்து ஒன்றுப் உருக்கி உருக்கு முகத்தில் எடுத்து இரண்டு தோலா வாலை ரசத்தைவிட்டு தொந்தித்து எடுத் கல்வத்திட்டு பொடித்து அப்பிர பற்பம் தோலா இரண்டு கர்ப்பூரம் தோலா ஒன்று சலா சத்து தோலா ஒன்று போட்டு பழச் சாரால் நேக அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து ஒரு மூடி சீலை மண் செய்து இருவகை எருவில் அரை கெஜ புடம் போடவும். இந்த படி புடம் மூன்று போட்டு பின்பு தேள் கொடுக்கின் சாரால் நேக அரைத்து மூன்று புடம் போட்டு வைத்துக் கொண்டு அரிசி எடை நெய்யில் 3 நாள் அல்லது 7 நாள் கொடுக்கவும். மேல்கண்ட வியாதி தீரும். பத்தியம் புளி, எண்ணை கடுகு பெண் ஆகாது.

21. பெரு மூத்திரம்தீர கஷாயம்.

ஆவாரை ஆலாம் வில்வை இதன் மூன்று பட்டைகள் இரண்டிரண்டு பலம் ஒருபடி நீரில் போட்டு கால் படியாக காய்ச்சி வற்றவைத்து கஷாயம் இரு வேளையும் மூன்று நாள் கொள்ள மேற்கண்ட வியாதி தீரும்.

22. காச்சலில்லாத பளவரலைக்கு அல்லது சார நோவுக்கு.

மாலை 6 மணிக்கு இரண்டு இளநீரை புது மொந்தையில் ஊற்றி கால் தோலா படிகாரம் பொடித்துபோட்டு பனியில் வைத்து காலையில் குடிக்கவும். 2 மணி நேரத்தில் குணமாகும். ஆனால் 3 நாள் கொடுக்க வேண்டும்.

23. நீர் பேதி - கல் மணல் வெளிபடும்.

சீனம் தோலா, கால், பூங்காவி தோலா கால், ஏலக்காய், அரிசி, தோலா கால் இம்மூன்றையும் பொடித்து கரைத்து 3 இளநீர் வெட்டி ஊற்றி புது மந்தையில் ஊற்றி அதில் போட்டு பனியில் வைத்து காலையில் சாப்பிடவும். இந்தபடி 7 நாள் சாப்பிடவும். அதற்கு பின் ஒரு மாளம் பசும் பாலில் இரண்டு பலம் மரு தோன்றியிலை நேக அரைத்து போட்டு கலக்கி வடிகட்டி அதில் அரை தோலா வெடியுப்பு தூள் செய்து போட்டு 3 நாள் காலையில் சாப்பிடவும். ஆகாரம் பாலும் சோறுந்தான். மாலை 4 மணிக்கு கால் மாளம் வேண்டுமானால் சாப்பிடலாம். இரவில் பெய்கிற மூத்திரத்தை ஒரு ஏனத்தில் பிடித்து காலையில் வடித்து பார்த்தால் அடியில் மனல் நிரைந்திருக்கும். அநுபோகம் கை கண்டது.

24. தோலை பற்றிய சகல வியாதிகளுக்கும் ஞானி புடம்.

ஒரு மனிதன் குக்கி உட்கார்ந்தால் கழுத்தளவு ஆழமுள்ள குழி தோண்டி வைத்து விட்டு பிற்பு கண்ணுக்கு தோன்றக் கூடிய மரங்களின் பட்டையும் அதின் தழையும் ஒவ்வோர் பிடி கொடி செடி முதலிய சகல மூலிகைகளையும் ஒவ்வோர் பிடி எடுத்து கொள்ள வேண்டியது. கள்ளி எருக்கன் நீங்கலாகு சகல மூலிகைகளும் சேர்ந்து 4 சாக்கு பை நிரைய கொண்டு வந்து பெரிய எட்டுமிடாக்களில் அரை வாசி அரைவாசி போட்டு நிரையசுத்த ஜலம் விட்டு அடுப்பேற்றி எரித்து வரவும். நீர் சுண்டி வற்ற வற்ற ஜலம் ஊற்றிக் கொண்டே வர வேண்டியது. இந்படி இரவெல்லாம் எரித்து கஷாயமாக்கி காலையில் 8 மூஜள முடாவிலுள் கஷாயத்தை மேல் கண்ட குழியில் ஊற்றி நிரைக்க வேண்டியது. நிரையாவிட்டால் வெந்நீராவது ஊற்றி நிரைக்க வேண்டும். பின்ப உடன் எருமை சாணி நாலு தட்டி கொட்டி

கொட்டி கரைந்து குழம்பாயிருக்கும் பதம் பார்த்து மனிதனை உட்கார வைத்து கழுத்தளவு இருப்பதா என அறிந்து சரி படுத்தி விட்டு அவன் உச்சியில் கையை வைத்துக் கொண்டிருந்தால் வேர்வை தட்டும். அந்த சமயத்தில் அவனை குழியை விட்டு வெளியில் கொண்டு வந்து வென்னீரால் கழுவி ஸ்நானம் பண் வைத்து தயிரும் சோறும் சாப்பிட வைத்தவுடன் படுக்கையில் படுக்க வைத்து கம்பளிகளாலும் துப்படிகளாலும் ரப்ப போர்த்தி விட்டு பார்த்தால் வேர்வை அதிகமாய் புறப்படும். புறப்படுகிற வரையில் துவைத்துக் கொண்டே இருந்து வேர்வை நின்றுல் விட்டு விடவும். பின்பு அவனுக்கு தேவையான ஆகாரம் கொடுக்கலாம். இதனுல் உண்டாகு வன்மையாவது தோல், நரம்பு சதை முதலியவைகளைப் பற்றிய புண், புரை கரப்பான் குஷ்டம் கீல் வாதம், சிரங்கு கடி விஷம் பருவன் முதலியவைகள் நீங்கி சுகமாகும். இது அனுபவ முறையில் பரம்பரையாய் அநேகருக்கு செய்து பார்த்துக் கொண்டு வருகிறது.

25. கெந்தக தைலம்.

இரும்பு சட்டியை வெள்ளியைப் போல் இலக்கி அதில் நீலி தழையை இடித்து பிழிந்த சாற்றை ஊற்றி அதில் ஒரு பலம் நெல்லிக்கா கெந்தகத்தை போட்டு மேல் பீங்கான் கோப்பையால் மூடி வாய்க்கு உளுந்து மாவு அல்லது கோதுமை மாவால் அடைத்து விட்டு வந்த ஜலத்தை ஊற்றி விட வேண்டும். உள்ளிருக்கும் சார் வெளி வராமலும் வெளியிலுள்ள ஜலம் உள்ளுக்கு போகக் கூடாத விதமாய் செம்பு விட்டு பார்த்துக் கொண்டும் கோப்பையின் மேல் 4,5, நெல்லு போட்டு பார்த்துக் கொண்டிருந்தால் நெல் பொரியும் அப்போது நீரை ஜாக்கிரதையாய் அப்புறப்படுத்தி விட்டு கோப்பையை எடுத்து பார்த்தால் தைலமாய் இருக்கும். அதை எடுத்து வைத்துக் கொண்டு ஒவ்வோர் துளி தைலம் வியாதிக்கு தக்க அநுபானத்தில் கொடுக்க மேகம், ரணம் முதலியவைகள் நீங்கும். லோகத்தில் தடவி புடம் போட்டால் வர்ணிக்கும்.

26. வெள்ளி சுன்னம்.

முத்தின பச்சை வாரை ஒரு கணுவை வெட்டி அதற்கு மேல் ஆச்சா நாரினை புளியன் கொட்டையை அரைத்து கா.ய்ச்சிய கூழில் நனைத்து சுற்றி உளர்த்தி அதற்குள் அரை சேர் அவல் அரக்கை போட்டு அதன் மேல் ஒரு பலம்இந்துப்பு தூள் போட்டு அதன் மேல் ஒரு பழைய ரூபாய் ஒன்றை கொஞ்சம் அகலமாய் தகடு தட்டி பழச் சார்றிலாவது திருகுகள்ளி பாலிலாவது முள்ளு கீரை சாற்றிலாவது 100 அல்லது வெட்டியாகிற வரையில் சிவக்க காய்ச்சி துவைத்து அதை மேற்கண்ட உப்பின் மீது வைத்து மேலும் ஒரு பலம் மேற்கண்ட உப்பு தூள் போட்டு அதன் மேல் அரை சேர் அரக்கை போட்டு கெட்டித்து அதன் வாய்க்கு சரியான புளியன் கட்டம் அடித்து மேற்கண்ட அச்சர நாரினை மேற்கண்ட கூழில் நனைத்து கெட்டியாய் சீல் செய்து குழி தோண்டி போட்டு எடுத்து பார்க்க கடுங்கார சுன்னமாகியிருக்கும்.

27. சரக்கு நீற்ற ஒரு திராவகம்.

மயில் துத்தம் தோலா 1 கெந்தகம் தோலா 20, சவுக்காரம் தோலா 40, ஒரு சீசா சாராயம் கொண்டு மேற்கண்ட மூன்று சரக்கையும் அரைத்து கொட்டைப் பாக்களவு பில்லை செய்து நிழலிலுலர்த்தி காய வைத்து ஒரு பானையின் அடியில் சிறு துவாரம் செய்து பானைக்குள் பச்சை தென்னங் குச்சிகளை பரப்பி அதன் மேல் மேற்கண்ட பில்லைகளைப் பரப்பி பானையின் வாய்க்கு ஒரு ஓட்டால் மூடி சந்தில்லாமல் சீலை மண் செய்து ஒரு பள்ளம் தோண்டி அடியில்சாணியை போட்டு அதன் மேல் பீங்கான் கோப்பையை வைத்து அதற்கு மேல் தமர் உள்ள பானை வைத்து பானையின் அடி துவாரத்திலிருந்து ஒவ்வோர் தென்னங் குச்சி கோப்பையில் பொத்திக் கொண்டிருக்கும் படி வைத்து சுற்றி சீலை மண் செய்து கொஞ்சம் சுத்தி மண்ணை தள்ளி மூடி அதன் மேல் வரட்டி அடுக்கி புடம் போடவும். ஆறி எடுத்து தைலத்தை சீசாவில் ஊற்றி பத்திரம் படுத்தி வைத்துக் கொண்டு நிற்கும் சரக்குகளை தடவியும் அரைத்தும் நீறறவும்.

28. சரக்குகள் கட்ட ஐய நீர்.

சுத்தி செய்த முட்டை ஒடு சுத்தி செய நண்டோடு சுத்தி செய்த கிளிஞ்சல், சுத்தி செய்த நத்தை ஒடு, கடல் நுரையின் அடி ஒடு இந்த 5-ம் சிவகைக்கு 5 பலம் நிறுத்தி தனித்தனி பொட்ணம் கட்டி புளிரும் கல் சுன்னமும் தண்ணீரில் கலக்கி தெளிவிருத்தி இதை அடுப் பேற்றி ஒவ்வொரு பொட்டணத்தை 3 தரம் வேக வைத்து எடுத்து அப்பு தண்ணீரில் கழுவி உலர்த்தி தனித் தனி ரட்டில் வைத்து ... சீலை மண் செய்து உலர்த்தி ...

காலையில் வேக வைத்து இந்த சுன்னமும் ஒரே நிரையாக நிறுத்தி சேர்த்து பொடித்து அரைத்துக் கொண்டு இந்த சுன்னம் 6 தோலா எடுத்து கல்வத்திலிட்டுவீரம் பலம் 1, பூரம் பலம் 1, கல் சுன்னம் பலம் 1, கட்டி பொடித்தரைத்து மாசி பங்குனியில் எடுத்த புனீர் ஜலம் வாங்கி ஒரு புட்டிக்குள் முன் மருந்தை போட்டு கலக்கி கார்க்கு பலமாக போட்டு கம்பி சுத்தி 3 நாள் ரவியில் வைத்து எடுத்து வைத்துக் கொண்டு சிறு பீங்கானில் இந்த ஜய நீர் விட்டு தாளகம் பூரம், வீரம் லிங்கம் அருசு சாரம் பாஷாணம் முதலிய ஏதாவது ஒன்றை பீங்கானில் உள்ள ஜய நீரில் போட்டு ஒரு ஓட்டில் மணல் கொட்டி அதன் மேல் பீங்கான் வைத்து சிறு தீயாய் எரித்து குச்சியால் கிளரி நீர் சுண்ட செய்து வெய்யிலில் 3 நாள் வைத்து பார்த்தால் கட்டிப் போகும். எந்த விதமாகது புத்தி கூர்மையினால் கட்டிக் கொள்வார்கள். வாத வைத்திய விஷயங்களுக்கு ஆகும்.

29. மார் சளி பிடித்தால் தீர கஷாயம் நாம் செய்து கொடுக்க வேண்டும் முறை காண்பிக்கக் கூடாது. கை கண்டது.

மேல் தோல் போக்கி சுத்தி செய்த அதமதும் மேல் தோல்போக்கிய சுக்கு வகைக்கு தோலா 1. இதை பொடித்து அரைப்படி நீரில் போட்டு காய்ச்சி அரைக்கால் படியாய் வற்ற வைத்த கஷாயம் தூங்கும் போது குடித்து படுத்துக் கொள்ளவும். இந்த படி 3 இரவு புதியதாய் கஷாயம் செய்து குடித்தால் சுகமாகும். மேற்கண்ட நோவு எந்த வைத்தியனும் தீர்ப்பது அசாத்தியமானதாலும் சீக்கிரத்தில் தீராமல் அதிக பயங்கரமான கஷ்டத்தில் கொண்டு வந் விட்டு விடுகிறபடியாலும் இதை வசப் படுத்த வைத்தியர்கள் திகைத்து விடுகிறார்கள் ஆனதால் இக்கஷாயத்தை உடனுக்குடன் அப்போதைக் கப்போது புதியதாய் செய்து குடிப்பாட்டி வர வேண்டியது. மூன்றே நாளில் உடைத்து நெஞ்சிலுள்ள கோழையை முத்தடைத்து வெளிப்படுத்தி ஆபத்திலிருந்து தப்பி மீளும்படி செய்து விடுகிற இக்கை கண்ட கஷாயமாகும். சுபம்.

30. வாந்தி பேதிக்கு கை கண்ட முறை. பூ நீர் போக்கு.

மாசி, பங்குனியில் எடுத்த பூ நீரை உடன் சீசாவில் போட்டு ரவியில் வைத்து ~~ஒருகு~~ நீரானவுடன் வடி கட்டி பிழிந்து வேறு சீசாவில் ஊற்றிக் கொண்டு கார்க் போட்டு பத்திர மாய் வைத்து விட வேண்டியது. 10, 15 நாள் போன் பின் பார்த்தால் அடியில் கற் கண்டைப் போலும் மேலே எண்ணெயைப் போலிருக்கும். எண்ணெயைப் போலிருப்பதை வேறே வடித்து வைத்து விட்டு கல்லைப் போல் அடியிலிருக்கும் பூ நீர் கட்டிகளை வேறே எடுத்து வைத்து விட்டு வெடியுப்பு ஒரு வீசை வாங்கி வாழை கிழங்கு சாற்றில் 9 தரம் காய்ச்சின உப்பு பலம் 2, மேற்கண்ட சீசாவின் அடியிலிருந்து எடுத்த பூ நீர் கட்டி ஒரு பலம் ஆக இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு தைலமாயிருக்கும் புனீர் தைலத்தை விட்டு அரைத்து பில்லை செய்து நன்றாக உணர்த்தி ஓட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் செய்து உலர்த்தி 30 எருவில் புடம் போடவும். இந்த படி மேற்கண்ட தைலம் விட்டு அரைத்து 11 தரம் புடம் போட்டு தீர்ந்த பின்பு அதிலிருந்து ஒரு பலம் எடுத்து ஒரு பானையில் அல்லது ஒரு சட்டியில் புது சுண்ணும்பு 5 பலம் போட்டு பரப்பி அதன் மேல் வைத்து மேலும் 5 பலம் சுண்ணும்பு கொட்டி நிரைய அல்லது முக்கால் சட்டி தண்ணீர் ஊற்றி அடுப்பின் மீது வைத்து எரித்து பொங்கு வரும் போது எரிப்பை நிறுத்தி பொங்கு அடங்கின பின்பு எரித் தும் இந்த படி அரை சட்டி நீர் வற்றிய பின்பு மேலிருக்கும் தெளிவு நீர சீசாவில் இறுத்தி ஊற்றி வைத்துக் கொண்டு சட்டியிலிருக்கும் குழம்பில் மறுபடியும் சுத்த ஜலம் ஊற்றி எரித்து அரை பாகம் வற்றிய பின் மேலிருக்கும் தெளிவை இறுத்தி வைத்துக் கொண்டு இந்த நீரால் முன் காய்ச்சிய வெடியுப்பை அரைத்து மெழுகாக்கி இதை கெவுரி சங்கு லிங்கம் வீரம் இந்த 4 சரக்குகளையும் கவசம் செய்து ஓட்டி வைத்து ஒடு, மூடி சீலைமண் செய்து உணர்த்தி 3 எருவில் புடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு இதில் ஒவ்வொன்றிலும் அரைக்கால் பலம் எடுத்து ஆனை நெருஞ்சி சாறு 2 படியில் போட்டு கலக்கி அடுப்பில் வைத்து எரித்து குழம்பான தருணத்தில் அரைக்கால் பலம் முதல் தர கஸ்தூரி போட்டு கிளரி லேகியமாக்கி பீங்கானில் எடுத்து வைத்துக் கொண்டு வாந்தி பேதி கண்டவுடன் கடில் பிரமாணம் முதல் அவரை கொட்டை அளவு வரையில் கொடுக்க வேண்டியது. ~~கொ~~ கொடுத்து மருந்து வாந்தியில் வந்து விழுந்து விட்டால் மறுபடியும் மிளகு அளவு

கொடுக்கவும் குணமாகும். இதற்கு பத்தியம் நான் ரொட்டியை கஷாயம் வைத்து அந்த நீரை குடிபாட்டவும் அல்லது அவுல்கஷாயம் கொடுக்கவும். மறுநாள் கஞ்சி குடிப்பாட்டவும் வயிறு ஊறந்த்தல், வயிறு வலி முதலியது குணமாகும். இம் மருந்து அதிக அகோரமானதும் தவிர கை கண்டது.

32. முலை விழுந்து தொங்கு முலையானால் குத்து முலை யாக்க.

ஏலக்காய், பூ மாதளம் பூ, காசு கட்டி வகைக்கு தோலா 1 பசுவின் நெய் விட்டு அரைத்து முட்டு ஆன முதல் நாளிலிருந்து முலையில் பூசி ~~[illegible]~~ முலைக்குச் சரியாக நாகத்திலல் செய்த கிண்ணியை கட்டி கவுத்தி வைக்கவும். இந்த படி 7 நாள் கட்ட பஞ்சு முலையானதும் கல்லைப் போல் நிமிர்ந்து நிற்க்கும்.

32. சுரங்களுக்கு வயது செல்ல சொல்லல்.

வாத சுரத்திற்கு 7 நாளும் பித்த சுரத்திற்கு 6 நாளும் சிலேத்ம சுரத்திற்கு 8 நாளும் தொந்த சுரங்களுக்கு 10 நாளும் ஆகும் இந்த நாட்கள் கழிந்தால் அதன் பின்பு மருந்தை கொடுத்தால் சீக்கிரம் மருந்து பிடித்து சுரங்கள் தீரும்.

33. மண்டை குலைக்கு கை கண்ட முறை.

திரிகடுகு, ஓமம், கசகசா, தாளிச பத்திரி, லவுங்க பத்திரி, கஸ்தூரி மஞ்சள், புண்டு வகைக்கு காசிடை 2 வீதம் எடுத்து பச்சை பத்திரி சார் விட்டு (படி கால்) அரைத்து நல்லெண்ணை அரைபடியில் கலந்து எரித்து வடித்து தலை முழுகி வர தீரும் நோய் மண்டை பிடி ஒரு தலை நோவு ஜன்னி முதலியவை தீரும்.

34. இருமல் மூச்சு தீர தாளக பற்பம் கை கண்டது.

ஒவ்வொரு தோலாவாக இருக்கலான தாளகம் 2 பலம் வாங்கி சுண்ணக் கல்லில் வைத்து பனங் கள்ளால் நீற்றி சுத்தி செய்து எடுத்து இரண்டு புடி கொண்ணைப் பட்டை சாம்பல் பேர் பாதி ஒரு சட்டியில் போட்டு அமுத்தி அதன் மேல் தாளகம் வைத்து மேலும் பாதி சாம்பலை கொட்டி அமுத்தி அடுப்பேற்றி சிறு விறகு இரண்டால் 4 ஜாமம் எரித்து ஆறின பின் கட்டிகளை எடுத்து கல்வத்திலிட்டு நல்லமுலத்தால் அரைத்து பில்லை செய்து உலர்த்தி ஒரு ஓட்டில் சாம்பல் போட்டு நடுவில் பில்லையை வைத்து மேலும் சாம்பல் போட்டு மேல் ஓடு மூடி சீலை மண் செய்து உலர்த்தி மெல்லிய 15 எருவில் புடம் போட்டு எடுக்க பஸ்பமாகும். அதை எடுத்து வைத்துக் கொண்டு குன்றியிடை போட்டுக் கொண்டு மிளகு கஷாயத்தை குடிக்கவும். காலை மாலை சாப்பிடவும். புளி, மீன் நல்லெண்ணெய் கடுகு முதலிவை நீக்கி பதத்தியமாயிருக்கவும். கை கண்டது.

35. வாந்தியாகிற வியாதி தீர கை கண்டது.

உப்பும், சித்தாமணக்கு இலையும் சமம் கூட்டி கசக்கி நீர் விட்டு காய்ச்சி இறுத்தி வாந்தியாகிற பேர்கள் பிள்ளைகள் முதலியவர்களுக்கும் ஒரு தோலா முதல் அரை தோலா வரையில் கொடுக்க வாந்தி மாறிப் போகும்.

36. சுரம் 64-ம் தீர ஆர்த்த நாரி குளிகை.

சுத்தி செய்த வெள்ளை பாஷாணம் நல்ல கோரோசனை இரண்டும் சமமாய் கூட்டி இரு முலையிலிருந்த கரந்த முலை பால் நேக அரைத்து பயிரளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக கொண்டு ஒரு மாத்திரையை வலது முலைப் பாலில் உரைத்து கொடுக்க வலது பாரிசம் மாத்திரம் சுரம் நீங்கி குளிர்ந்து இருக்கும். இடது முலைப் பாலில் உரைத்து கொ கொடுக்க இடது பாரிசம் உள்ள சுரம் நீங்கி குளிர்ந்து தணிந்து போகும். இரு முலையிலிருந்து கறந்த பாலில் உரைத்து ஒவ்வொரு மாத்திரையை 3 நாள் 3 மாத்திரையை கொடுக்க சுரமில்லை. பாலும் சோறும் பத்தியம்.

37. நல்ல முறை பெரியோர் சிறியோர்களுக்கு சுரம் தீர கை கண்ட மருந்து.

நல்ல மிளகு, கடுகு ரோகணி கழற்சிபருப்பு இம் மூன்றும் சரி சமமாய் கூட்டி ஜூர்ணம் பூக்காத தருணமுள்ள பிரம தண்டின் சமூலத்தை இடித்து பிழிந்த சாற்றால் நேக அரைத்து

குன்றி அளவ மாத்திரை பிடித்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு பயிரளவு மாத்திரைகளாயும் பிராதி செய்துக் கொள்ளவும். அனுபானம் பெரியோர்களுக்கும் சிறியோர்களுக்கும் முலைப் பாலிலும் சுக்கு கஷாயத்திலும் இஞ்சி கஷாயத்திலும் வெந்நீர் தண்ணீரிலும் ஒவ்வொரு மாத்திரை கொடுக்க சகல சுரங்களும் தீரும். பாலகர் பாலகர்களுக்கு முலைப் பாலில் கொடுக்கவும். கை கண்டது.

38. போஜன சஞ்சீவி மாத்திரை.

முசரம்-பரம், நஞ்சு நீக்கி கழற்சி பருப்பு சுத்தி செய்த ரச கற்பூரம் சுத்தி செய்த முட்டை தோல் அல்து அல்லது சுக்கு. வெங்கார பொரி, இந்துப்பு வகைக்கு வீ 1, சுத்தி செய்த வாளம் வீ 7, முன் சரக்குகள் 7-ம் கல்வத்திட்டு நய்ய அரைத்து எடுத்துக் கொண்டு பின் வாளத்தை போட்டு வெண்ணை போல் அரைத்து எல்லாம் ஒன்றுய் கலந்து பழச் சாற்றுல் ஒரு ஜாமமரைத்து வட்டமாய் சுண்டைக்காய் அளவு மாத்திரைகள் பிடித்து நிழலிலுலர்த்தி வைத்துக கொண்டு இராக் காலம் புசித்து தூங்கும் சமயத்தில் வாழைப் பழத்தில் ஒரு மாத்திரை வைத்து சாப்பிட்டு படுத்துக் கொள்ள வேண்டியது. காலை 7 மணிக்குள் 3,4,5 தரம் விரோசனமாகி வாத பித்த நீர் யாவும் கழன்று திரேகம் மிகுந்து ஆரோக்கியமா இருக்கும். ஸ்நானம் செய்து காப்பி முதலிய பானங்கள் சாப்பிட்டு சுகமே அவரவர் குற்ற உத்தியோக தொழில்களுக்கு போகலாம்.

39. பெரியவர்க்கும் சிறியவர்க்கும் பேதிக்கும் சுரத்திற்கும் மாத்திரை.

திரிகுடுகு, கடுகு ரோகணி, ஏலம், சண்பகப்பூ, அதிமதுரம் கோஷ்டம் அக்கரகாரம் வகைக்கு பலம் கால் கடுக்காய் தோல் தலாம் அரை, கிராம்பு பலம் அரைக் கால், நிலாவாரை தழை பலம் அரைக்கால் இந்த 12 சரக்கையும் இளம் வருப்பாக வருத்து வைத்துக் கொண்டு கெந்தகம் பொரித்த வெண்காரம் இரசம் இம்மூன்றும் வகைக்கு பலம் கால் லிங்கம் பலம் அரைக்கால் வாளம் பலம் இரண்டே கால் இவ்வைந்து சரக்கும் சுத்தி செய்து முதலில் 12 சரக்கையும் பொடித்து நேக அரைத்து எடுத்துக கொண்டு பின்பு ரசகமும் கெந்தகமும் சேர்த்து அரைக்க கருப்பாகும். பின்ன வெண்கார பொரியும் லிங்கமும் சேர்த்தரைத்து எடுத்துக் கொண்டு வாளத்தைப் போட்டு நேக வெண்ணை போல் அரைத்து எல்லா சரக்குகளையும் ஒன்றுய் கட்டி பழச் சாற்றுல் ஒரு ஜாமமரைத்து குப்ப மேனி சாற்றுல் ஒரு ஜாமமரைத்து குப்ப மேனி சாற்றுல் ஒரு ஜாமமரைத்து குன்றி அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு சிறியோர்க்கு 1 பெரியோர்களுக்கு 1 முதல் 2,3 மாத்திரை வரையில் முலைப் பால் சர்க்கரை சுக்கு கஷாயம் இதுகளில் கொடுக்க சுரங்கள் நீங்கி விடும்.

40. பக்க பளவரை தீர எண்ணை.

ஆகாச கெருடன் கிழங்கு அப்புக் கோவை கிழங்கு, காட்டுச் வரை கிழங்கு, முடக் கொத்தான் வேர் நன்னுரி வேர், நிலப்பனைக் கிழங்கு, கண்டங்கத்திரி வேர், கோரைக் கிழங்கு, சுக்கு, திப்பிலி, வசம்ப, அரத்தை கடுகு வாய் விளங்கம், சீந்தல் கொடி இந்த 15 திருசுகள் வகைக்கு பலம் 1 கூட்டி இடித்து ஒரு படி நல்லெண்ணையில் போட்டு காய்ச்சி வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு வேளை காலை வேளையில் மாத்திரம் ஒரு கரண்டி வீதம் 7 நாளைக்கு கொடுக்கவும். அல்லது 16 நாளைக்கு கொடுக்கவும். இசசா பத்தியம், மேற்கண்ட பளவரை அள்ளை குத்து சுரம் முதலியவை தீரும்.

41. பலவித வியாதிக்கு சீதாமிர்த குளிகை.

வாளம், தாளகம், மனோசிலை இம்மூன்றும் சுத்தி செய்து திரிகடுகு வகைக்கு தோலா ஒன்று கல்வத்திட்டு பொடித்து நேக அரைத்து வைத்துக் கொண்டு தாளகம் மனோசிலையும் கல்வத்திலிட்டு நேக அரைத்து எடுத்து வைத்துக கொண்டு வாளத்தை போட்டு வெண்ணை போல் அரைத்து தார முஞ்சிலையுங் கூட்டி அரைத்து திரிகடுகு, தூளும் போட்டு அரைத்து முத்தின வேப்பம் பட்டை கஷாயத்தால் நாலும் அரைத்து பச்சை கடலை பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி பரணியில் போட்டு பத்திரப் படுத்தி வைத்துக் கொண்டு அநுபானம் காது வலிக்கு எருக்கன் பழுப்பை வாட்டி பிழிந்த சாற்றில் ஒரு மாத்திரை உரைத்து காதில் விட

தலை நோய்க்கு:- நொச்சியிலை சாற்றிலரைத்து நசியமிடவும்.

கண்ணோய்க்கு :- பழச் சாற்றில் கடுகளவு உரைத்து கண்ணில் தீட்டவும்.

ஜன்னி தோஷம் தீர:- இஞ்சி சாற்றில் ஒரு மாத்திரை இழைத்து உள்ளுக்கு கொடுப்பதும் தவிர கண்ணிலும் தீட்டவும்.

சீத சுரம், காமாலை, நரை வாயில் வந்து மன பைத்தியத்திற்கு இஞ்சி சாற்றில் ஒரு மாத்திரை இடித்து கொடுக்கத் தீரும்.

குன்மம் பாண்டு சுரம்* காசம் சுவாசம் பித்த காமாலைக்கு நெல்லிக்காய் சுரசத்தில் ஒரு மாத்திரை கொள்ள தீரும். மார் நோவு சுக ஜன்னிக்கும் பரி நாம சூலை நாபிக்கட்டு சூலை வயிருப்பல் கடுப்பு வாய் நாறுதல் விசுவாச அக்கினி மந்தம் விக்கல், சோபை தீர இஞ்சி சார் கடுக்காய் கஷாயம் இதில் ஒரு மாத்திரை இழைத்து கொடுக்க நீங்கும் வெந்நீர் சாப்பிடவும்.

கிரந்தி குஷ்டத்திற்கு வேப்பம் பட்டை சார் அல்லது கஷாயத்தில் கொடுக்கத் தீரும்.

புண் புரைகள் தீர வேப்பன் தழை அரைத்து அதில் குளிகை சேர்த்தரைத்து பூசத் தீரும்.

விசர்க்கைப் புண் மண்டை குடைச்சல், நெஞ்சு வரண்டியம் தாகமும் தீர வேப்பம் பட்டை சாரில் கொடுக்கத் தீரும்.

சுவரண்டியும் தாகமும் தீர வேப்பம் பட்டை சாரில் கொடுக்கத் தீரும்.

பல் வலிக்கு வேப்பன் இலையில் ஒரு மாத்திரை வைத்து அரைத்து தேய்க்க தீரும்.

42. குஷ்டம், கருமேகம், முதலிய சர்வ மேகங்களும் பவுத்திரம் ஒட்டை அடையவும் பிள்ளை இல்லாதவர்க்கு பிள்ளை உண்டாகவும் கை கண்ட முறை.

சித்தா மணக்கெண்ணை படி 1, கரிசலாங் கண்ணி சார் படி ½அரை, சித்திர மூலம் இலை சார் படி ½, குப்ப மேனி சார் படி ½, பொன்னாங்கண்ணி சார் படி ½ இதுகளை ஒன்றாய் கூட்டி சங்கன் வேர் பட்டை பலம் 1½ பட்டு போல் இடித்து போட்டு எல்லாம் சேர்த்து காய்ச்சி என்ணெயை இறுத்தி வைத்துக் கொண்டு ஒரு வேளைக்கு உச்சி கரண்டி அளவு 7 நாள் அல்லது 14 நாள் அல்லது ½ மண்டலம் கொள்ள தீரும். குஷ்டத்திற்கு ஒரு மண்டலம் கொள்ளவும். பத்தியம் புழுங்கல் அரிசி, சோறு பருப்பும் சாருமாம். அரை பலம் நெய் சாப்பிடவும். ஒவ்வொரு வேளைக்கு வேளைக்கு சாப்பிட வேண்டியது.

43. கண்ணுக்கும் சிரசை பிடி சகல வியாதிக்கும் கண்ணில் விடவும். தைலம் கைக் கண்டது. இதனால் அரை தலைவலி, இரு தலை வலி, மூளைச் சூடு, முழுவதுக்கும் கண் சூடு சிகப்பு, நீர் வடிதல் குடைச்சல், நீர் வடிதல், புருவத்தின் வலி, சாளேஸ்திரம் முதலியதும் தீர்ந்து கண் பார்வை யுண்டாகும். ஒரு வாரத்திற்கு இரண்டு துளி கண்ணில் விடவும். தலைக்கு எண்ணெ ஸ்நானம் செய்ய வேண்டியதில்லை. இவ்வுயர் குணங்கள் தரும் பெருமை திறமை வாய்ந்த அருந்தைலமொன்றே போதுமானது. நல்லெண்ணை மானம் 2, பசுவின் பால் மானம் 3, பழச் சார் பலம் 3, பிரம தண்டு செடி சமூலம் ஒரு பிடி கருஞ் செம்பை பூ ஒரு பிடி இடித்து சார் எடுத்து வெள்ளை மிளகு பலம் 1. நற்சீரகம் பலம் 5, கூட்டி பசுவின் பாலால் அரைத்து எல்லாம் ஒன்றாய் கலந்து அடுப் பேற்றி காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும். கை கண்டது.

44. வெள்ளி பற்பம்.

பழையதானதும் அகலமுள்ளதும் இருக்கும் ரூபாய் அல்லது அதின சுத்தமான வெள்ளியை கொஞ்சம் கனமுள்ளதாய் தகடு தட்டி பழச் சாற்றில் சிவக்க காய்ச்சி தவைக்க வேண்டும். இப்படி அத்தக்கு வெட்டை ஆகிற வரையில் தவக்க வேண்டும். அதாவது 100 தரத்திற்கு மேல் 10,20 தவைத்தால் தான் சரியான வெட்டை யாகும். அப்பொழுது வெட்டை ஆன தாயில்லை யாவென சோதித்து பாத்து தன் மனதில் போதுமான தீர்மானம் செய்துக் கொண்டு பிற்பு மருதாணி வேர் பட்டையை தேங்காயளவு அரைத்து தேற்கண்ட தகட்டை

உள் வைத்து உருண்டை செய்து சீலை மண் மூன்றுஞ் செய்து கெஜபுடம் போட்டு புடம் குளிர ஆறின பின் எடுக்க பஸ்பமாயிருக்கும். அரிசி பிரமாணம் போதும்.

45. வெள்ளி பஸ்பம்.

வெள்ளி அரப் பொடியை நல் கோவை சாற்றால் 3 நாள் அரைத்து வில்லை செய்து ஓட்டிவிட்டு உணர்த்தி ஒரு மூடி சீலை மண் செய்து கெஜபுடம். மறுபடி கெஜபுடம். பஸ்பம், அரிசி எடை போதும்.

46. மூச்சு, இருமல், காசம், சுவாசம், முதலியவைகள் தீர முத்து கிளிஞ்சல் பற்பம்.

முத்துக் கிளிஞ்சல் பின்புறம் கருப்பில்லாததாக பொறுக்கி பார்த்து வாங்கி வந்து நறுக்கி ஒரு கலையத்தில் போட்டு நீர் விட்டு வேக வைத்து எடுத்து கருப்பு இருப்பதை எ எல்லாம் சுரண்டி எடுத்து சுத்தப்படுத்தி கலையத்தில் போட்டு சதுர கள்ளி பால் விட்டு சீலை மண் செய்து 34 எருவில் புடம் போடவும். இந்த படி புடம் 3 போட சுண்ணமாகும் கருப்பு வெற்றிலை அரைத்து அதில் ஒரு உளுந்து மணி எடை வைத்து சாப்பிடவும். 3 நாள் பத்தியம் துவரம் பருப்பு கிச்சடி நெய் பாலாகும்.

47. சுரம் 64-ம் ஒரே நாளில் தீர கை கண்டது.

வாலை ரசம் வீ 8, சுத்தி செய்த நாபி வீ 7, சுத்தி செய்த கெந்தி வீ 7, சுத்தித்த தாளகம் வீ 1, வெங்கார பொரி வீ 1, சுக்கு, மிளகு, திப்பிலி, சுத்தி செய்த வாளம் வகைக்கு வீ 1 அதிங்ஙு ஒன்பதும் கட்டி கல்வத்தில் ரசம் கெந்தி இது இரண்டும் போட்டு நேக அரைக்க கருத்துப் போகும். பின்பு தாளகம் பொரியும் போட்டு அரைத்து எடுத்துக் கொண்டு சுக்கு, மிளகு, திப்பிலி, இம்மூன்றையும் பொடித்து நேக அரைத்து எடுத்துக் கொண்டு வாளத்தை போட்டு வெண்ணை போலரைத்து பின்பு எல்லாம் ஒன்றாய் கலந்துக் கொண்டு சித்திர மூலச் கொண்டு வந்து சட்டியில் போட்டு 16 படி சுத்த ஜலம் ஊற்றி 2 படியாய் வற்ற வைத்த கஷாயத்தால் இரவு பகலும் விடாமல் அரைத்து பயிர் அளவு குளிகை கட்டி நிழல் உணர்த்தி சீசாவில் எடுத்து வைத்துக் கொண்டு அனுபானம் இளநீரிலாவது, பழைய சோற்று நீரிலாவது மோரிலாவது ஒரு மாத்திரை இழைத்து கொடுக்கவும். பத்தியமில்லை: கரிபால், தயிர், மோர், நெய் ஆகும். இம்மருந்தினால் இராஜ ராஜாதிகள் முன்னிலையில் பந்தியம் போட்டு கொடுக்கவும்.

48. கஸ்தூரி குளிகை-கை கால் எரிவுக்கும் காந்தாரி வாய்வுக்கும் மூல கடுப்புக்கும்:

வீளாதே அண்ட ரண்ட வியாதிக் கெல்லாம் விதமான மருந்தொடனை விளம்பக் கேரு
விளம்பவே கஸ்தூரி திரிபலை யேலம் மிளகுடனே ஜாதிக்காய் மதுரம் சீரகம்
தனம் பெறவே வகையொன்று கழஞ்சி யொன்று இதனையெல்லாம் ஒன்றுக்கி கல்வத்திட்டு
வளமுயறும் பனை மரத்தின் கள்ளு கள்ளு உடனிரக்கி கொண்டு வந்து துரிதமாக.

பனங் கள்ளாய் புளியாமல் இருக்க வேண்டும் பரிவுடனே வர்த்தரைப்பாய் வெண்ணை போலே
மணம் பெறவே அரைத்தவுடன் மிளகு போலே மயமாக குளிகை கட்டி நிழலிலுலர்த்தி
கனம் பெறவே மறு முறையும் கல்வத்திட்டு குளிகைதனை அரைத்து விடு ஆவின் நெய்யால்
இனம் பெறவே மிளகளவு மாத்திரையாக்கே இயலாக நிழலுலர்த்தி கல்வத்திட்டு .
மனமான மாதுளையின் பழத்தின் சாற்றால் மகிழவே அரைத்து தூதுவளையின் காயே.

தூதுவளை காயளவு குளிகை கட்டி தகுதி பெற நிழலுணர்த்தி எடுத்துக் கொண்டு
சார்துவாய் பரணி தனில் போட்டு வைத்து சாற்றுகிறேன் கஸ்தூரி குளிகை யொன்றே
நாததனையாயிருந்து காக்கும் வைத்தியர்க்கு நவிலுகிறேன் அனுபானம் மாதுளையின் காயே
பாதி அழுத்துள் கிராம்பு வைத்து மூடி பரிவாக சீலை செய்து இசை பொதிந்து சுட்டு.

சுட்டு அதன் கவசம் நீக்கி போட்டு சாது வாய்ம்மி தனில் போட்டரைப்பாய்
பொட்டனவே அரைத்து நீரில் கரைத்து புகழான கஸ்தூரி குளிகை தானே

திட்டமுடனொரு குளிகை சேர்த்துக்கொண்டால் தீர்ந்துவிடும் கடுப்பு முதல் மூலந்தானே
அட்டியில்லா மூலமறு கடுத்தாலும் குடலை பற்றி அதி முச்சு தீ கொளுத்தி மேகந்தானே.

மேகந்தான் சூழ்ந்து அடுக்கடுக்காய் கோபம். மிகுந்த சூடு கால் கடுப்பு தீ கொளுத்தும்
மாக முரு காந்தாரி வாய் வோடய்யம் தீக் கடுப்பராதுயிர்கள் சிவலோகம் போம்
வேகமுகுங் கஸ்தூரி குளிகையப்பா வீரிட்ட வியாதிகளை நிர் தூளாக்கும்
ஆகூ முருங்கால் கடுப்பு கை கடுப்பு அலறவைக்கும் நீர் கடுப்பு அகன்று போகும்.

ஈவில்லாத கடுப்பெல்லாம் இதிலே தீரும் நீக்கி நின்ற வியாதி தவக் கூறுபாலன் கேள்
ஒசூாலல்லாது மேக வெட்டை கபாலச் சூடு கூர் விழியினில் புகைச்சலினுள் கோப்ந் தீர
அல்லாரைச் சாருரியில் என்ணை நாழி வைத்தெரித்து ஆற வைத்து ஒரு பொழுதக்கு
நல்லோருக் கொரு குளிகை என்ணையில் தாக்கி நறுஞ்சிரசில் லப்பிட்டு வென்னீர் மூழ்கே.

மூழ்க விட்டு அசனத்தின் மேலே கேளுமுன்ற தளி நற நெய்யை உள்ளங் கையில் போகும்
தாழ்க விட்டு குளிகை யொன்று தான் குழைத்து சாப்பிடவே வெட்டை யெல்லாம் தகர்ந்தே
மீழ்க விட்டு பத்தியமே புளியைத் தள்ளி மிக்க வுண்டான வகை விரும்பித் தின்னு
மாழ்க விடப் போகாதே எமனும் வாரான் மறவாதே அவ பத்தியம் மாற்று மாற்றே.

மாற்றென பிவிசமு மிதிலே தீரும் மற்ற மற்ற மண்டை யிடி மண்டை குத்து
யேற்ற ஜன்னி சுரங்களுக்கு குளிகை யொன்று யேற்றிப் பார் முலைப் பாலில் இஞ்சிச் சாற்றில்
ஏலாற்றென்ன வோடிவிடும் வியாதி யெல்லாம் விட்டழிந்து தட்டழிந்து விழலாய்ப் போகும்
மாற்றென்ன பண்டிதரே நோய் தீராத பரியாரி பரியாரி இல்லை தானே.

இல்லை யென்று வந்த கப மீளை யெல்லாம் இறந்திடவே ஆவின் வெண்ணை சுரதம் பண்ணி
வல்லிய வெற்றிலை சாறும் சூரணதம் பண்ணி மறுபடி தேன் சுரதம் பண்ணி மூன்றும் சேர்த்து
அல்லடா இந்த வித்தை வொன்றங் கட்டி அன்பாக மூன்று நாளருந்தச் செய்து
உலகிலே கமமீளை வொழிந்து போச்சு உத்தமனே செய்பாகம் வியாதி சாதி.
சாதியிலே பருகுலமாய் வந்த நோய்கள் தளிர் வெடித்து களித்து

49. கெந்தி மெழுகு. மல்லோ வெல் வேபிச்சு

அடுர்த சலை கெந்தி பலம் 4, சிறு சுண்டை சார் படி 2 இந்த சாரால் சுருக்கு
காடுக்கவும். சிறு சுண்டை விறகால் எரிக்கவும். எல்லா வியாதிக்கும் குன்றி மணி பனை
மல்லத்தில் கொடுக்கவும். மற்றதற்கும் ஆகும்.

50. தாம்பர சுத்தி நல்லதாம்.

கண்டங்கத்திரி பழச் சார் படி கால், இரசம் பலம் ஒன்று, விட்டு அரைக்க
மெழுகாகும். இம்மெழுகை தாம்பிர காசுக்கு தடவி நெருப்பில் சுட்டெடுக்க சுத்தியாகும்.
மலது புவரசின் பழுப்பு அல்லது வாதமடக்கியிலை சாற்றால் அரைத்து கவசம் செய்து
கஜபுடம் போடவும்.

51. வெள்ளி பர்பம்.

வெள்ளி ராத்(விரா) பொடி தோலா 5, முள்ளி கீரை சாற்றால் 2 ஜாமம் அரைத்து
வில்லை செய்து ஓட்டில் வைத்து மூடி சீலை மூன்று செய்து முழப்புடம் போடவும். இந்த
படி 3 புடம் போட்டு ~~வீடு~~ தோளை(தொளை)யிலை சாற்றால் அரைத்து உணர்த்தி முன் போல்
டம் 1 கருப்ப ஊமத்தின் பூ சாற்றால் புடம் 1 போட பூரணமான பஸ்பம் ஆம்.
செந்தூரமாக வேண்டுமானால் வெள்ளை காட்டாமணக்கின் பட்டை சாற்றால் 1 புடம் போட்டு
ப்பு பழச் சாற்றால் 1 புடம் போட செந்தூரமாகும். தீரும் வியாதி காச சுவாசம்
இருமல், க்ஷயம், வாய்வு தீரும், தாது கட்டும் பசு வெண்ணையில் குழப்பி கொடுக்கவும்.
நரி இடுப்பு சூலை நீங்கும். பர்பம் குன்றியிடை 1, சலாசத்து குன்றியெடை 4, சிங்கி
குன்றியெடை 2 மூன்று பஸ்பத்தையும் ஒன்றாய் கட்டி வெண்ணையில் கொடுக்க தீரும்.

52. கர்ப்பம் தரிக்க மருந்து கை கண்டது.

வீட்டிற்கு தூரமாகு முன் 3 நாள் கொடுக்க வேண்டும். அதாவது வெள்ளருகு தழை

பிடி ஒன்று குரு மிளகு 7, பூண்டு 3, பால் இம்மூன்றும் ஒன்றாய் சேர்த்தரைத்து 4 மாத்திரை செய்து வேப்பன் எண்ணெயில் ஊற வைத்துக் கொண்டு ஒரு மாத்திரை வாய்க்கு காட்டி கிழக்கு புரம் எறிந்து விட்டு பின்பு மூன்று நாள் மூன்று மாத்திரை காலை காலை முழுங்க வைக்க வேண்டும். சோறு, கிச்சடி, ஆகும். வெந்நீர் குடிக்கவும். கெர்ப்ப விப்புருதி மாறும். மறுபடி வீட்டுக்கு தூரமான 19-வது நாள் முன் போல் முன் போல் கொடுத்து முன் ஆகாரமே கொடுக்கவும். பிள்ளை யுண்டாம்.

53. மேக சஞ்சீவி எண்ணெய்.

தீரும் நோய்களாவன மேக பிரமேக சட்டைப் புண் பறங்கிப் புண், பறங்கிச் சட்டை சொரி சிரங்கு, முதலிய நோய்கள் தீர்ந்து விடும். பத்தியம் இவ்வெண்ணை 5 நாள் கொடுத்து வெறும் சோறும் வெந்நீரும் கொள்ளவும். சித்தாமணக்கெண்ணை மானம் 1, ராகாசாச் கிழங்கு, கீழ் நெல்லி வெள்ளறுகு பெறு நெருஞ்சி, கொடி துத்தி, இதன் தழைகள் வகைக்கு 14 பலம் எடுத்து அரிசி கழுவின நீரால் இடித்து பிழிந்த சார் கூட்டி காய்ச்சி நீர் சுண்டிய பின் லவுங்கப்பட்டை, சுக்கு, மிளகு, கஸ்தூரி மஞ்சள், கருஞ் சீரகம் நறுக்கு மூலம் வகைக்கு ஒவ்வொரு தோலாவாக வெந்தியம் இரண்டு தோலா, கசகசா தோலா இரண்டு கூட்டி இத இடித்து சூரணித்து இந்த எண்ணெயில் போட்டு கிளறி வடிகட்டி வைத்துக் கொண்டு ஆள் திடம் பார்த்து ஒரு தோலா முதல் இரண்டு தோலா வரையில் கொடுக்கலாம்.

54. சவ்வீர பற்பம்.

சவ்வீர கட்டி 1 மாங்காபூவை யிடித்த சார் ஒரு குகையில் போட்டு அதில் வீரக் கட்டியை போட்டு 7 சீலை மண் செய்து உலர்த்தி 3 எருவில் புடம் போட்டு எடுக்க மணியாகும். இதை இஞ்சி சாற்றில் உரைத்து கொடுக்க ஜன்னி சுரம், வாதம் முதலிய ரோகங்கள் யாவும் தீரும். மேற்கண்ட வீர மணியை மேற்கண்டபடி இன்னொரு புடம் போட்டால் பற்பமாகும்.

55. ஜாதிலிங்க கட்டு புகையாது.

பொன்னரி தாரம் பலம் அரை, எருக்கன் பாலால் அரைத்து அரை பலம் செம்புக்கு கவசம் செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை செய்து முழப் புடம் போட்டு எடுத்து பழச் சாறால் அரைத்து ஓ பலம் லிங்கத்திற்கு கவசம் செய்து உலர்த்தி அதன் மேல் 3 சீலை மண் செய்து உலர்த்தி காற்றில்லாத இடத்தில் ஒரு சாண் பள்ளம் வெட்டி அதில் 32 தோலா பச்சை நெல்லு குத்தின உமி கொட்டி பரப்பி நடுவில் கவசத்தை வைத்து மேலும் உமி கொட்டி நெருப்பு வைத்து புடம் ஆறின பின் எடுக்க மணியாகும். தூக்கிலுல் உருகும். அனுபானத்தில் கொடுக்க சுரம், ஜன்னி பாரிச வாய்வு, மூச்சு இருமல் சுவாச காசம் முதலியவை யாவும் நீங்கும்.

56. நவசார மணி.

சதுர கள்ளியின் உலர்ந்த பட்டையைச் சுட்டு சாம்பலாக்கி அதின் பால் விட்டு பிசைந்து நவசாரக் கட்டிக்கு கவசம் செய்து மேற்கண்ட சாம்பலை கீழும் மேலும் ஒரு சட்டியில் வைத்து இரண்டு ஜாமம் எரிக்க உருகி கட்டும். இதை தக்க அனுபானங்களில் கொடுக்க மகோதரம் பெருவயிறு குன்மம் முதலிய உதர ரோகங்கள் யாவும் தீரும். பிரமாணம் அரிசியெடை இரண்டு பழை வெல்லத்தில் கொடுக்கவும். பஸ்பமும் செய்யலாம்.

57. வாந்தி பேதிக்கு கை கண்ட மருந்து.

வல்லாரை வேர், குரு மிளகு, மிளகாய் வகைக்கு சேர் அரை கூடன் பலம் ஒன்று, ஒரு மொந்தையில் போட்டு குழி தைலமிறக்கி வைத்துக் கொண்டு நல்ல ஜலத்தில் 4 முதல் 6 துளி வரையில் விட்டு கொடுக்கவும். 3 நாள் கொடுக்க சீதளம் ஏறாது. வயிறு ஊதாது. ஓலம் ஜலம் சுடாது (கட்டாது). கீரைப்பச்சி வந்து விழுந்துக் கொண்டேயிருக்கும். ஆகாரம் அவல் நான ரொட்டி கஷாயம் 3 நாள் கொடுக்கவும்.

58. சரக்குகள் நீற்ற ஜய நீர் இது.

குமுழ் கம்பியுப்பு தோலா 4 செம்மண்ணில் நோண்டி எடுத்து மோரில் போட்டு சுத்தி செய்த பூ நாகம் தோலா 4 ஆக இரண்டும் கூட்டி அரைத்து பீங்கான் கோப்பையில் போட்டு தண்ணீர் ஓரம் மண்ணுக்குள் புதைத்து மறுநாள் நீராய் இருக்கும் எடுத்துக் கொள்ளவும். எந்த சரக்கையும் மேற்கண்ட ஜெய நீர் விட்டு அரைத்தும் அல்லது தடவியும் புடமிடலாம்.

59. வாத எண்ணெய்.

பாரிச வாய்வு முகம் வாய் கோணல் கீழ் வாய்வு முதலியவைகளுக்கு கை கண்டது.

விளக்கெண்ணெய் படி ஒன்னேகால், மெருகன் கிழங்கு பலம் 4, பூண்டு பலம் 5, பரங்கி சக்கை பலம் 2 கூட்டி இடித்து எண்ணெயில் போட்டு காய்ச்சி வடித்து ஒன்னேகால் வீ ரசகற்பூரம் பொடித்து நேக அரைத்து போட்டு கலக்கி வைத்துக் கொண்டு காலையில் ஒரு உச்சி கரண்டி அளவு கொள்ளவும். மாலையில் அரைக் கரண்டி அளவு கொள்ளவும். இந்த படி 3 நாள் கொடுக்கவும். 5 நாள் வரையில் கடும் பத்தியம். வெறும் சோறும் வெந்நீரும் ஆகும். பின்பு பத்தியம் முரிக்கவும்.

60. தாதுபுஷ்டியாக கை கண்ட வடை.

சற்று நேரம் பாலில் போட்டு எடுத்து கழுவிய பூநாகம் வீ 4, லவுங்கப்பட்டை வீ ஒன்றும் அரையும், லவுங்கம் 13 கூட்டி அரைத்து வடை தட்டி நெய்யில் விட்டு சிவக்க விட்டு காலையில் இரண்டு வடை மாலையில் இரண்டு வடை சாப்பிடவும். இந்த படி 3 நாள் கொடுக்கவும். (பூ நாகம் வீ 4, லவுங்கப் பட்டை வீ 2, லவுங்கம் வீ 2, இந்த எடைபடி சேர்த்தரைத்து 4 வடை தட்டி நெய்யில் சுட்டு வேளைக்கு 2 வடை இரண்டு வேளையும் 3 நாள் இருந்த தாது புஷ்டியுண்டாகும்.

61. பர்பங்களை சுன்னம் ஆக்கும் வேலை.

எந்த பர்பங்களையும் எடைக்கு எடை இரசத்தைச் சேர்த்து (செம்மேலியிலை) அல்லது ஊசி மல்லி இலை சாராலரைத்து வில்லை செய்து ஒட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் செய்து அரை கெஜபுடம் போடவும். சுன்னமாகும். தாளகம், தாம்பரம் வங்கம் முதலிய எந்த பர்பங்களானாலும் சுன்னமாகும்.

62. காரிய சுத்தி.

பிரண்டை கிழங்கை இடித்து ஒரு மொந்தை நிறைய அழுத்தி அரை வாசி வரையில் மொந்தையின் குழியில் நடுவில் பள்ளம் செய்து அதில் காரியம் உருக்கி சாய்க்கவும். 3, 4, 5 தரம் உருக்கி சாய்க்கவும். இரண்டொரு தரம் அதிகம் உருக்கி சாய்த்தாலும் இது ரொம்பவும் மேலானது. இவ்வியபத்துடன் ரசத்தை சேர்த்து தொந்தித்து மேற்கண்ட கிழங்கின் சாற்றுல் அரைத்து ஓட்டில் வைத்து திருப்பி திருப்பி பில்லையை உலர்த்தி ஒடு மூடி சீலை மண் செய்து உலர்த்தி அரை கெஜம் புடம் போடவும். இந்த படி 3, 4 புடம் போட்டால் சுத்தமான பஸ்பமாம்.

63. வீரிய விர்த்திக்கு.

கரடியின் லிங்க நரம்பின் பற்பம்.

கரடியின் ஜீவ உயிர் நாடி நரம்பினை வாங்கி உலர்த்தி சீவி எடுத்து, முட்டையின் வெள்ளைக் கருவை நீக்கி அதற்குள் போட்டு நிரப்பி முட்டை ஓட்டால் வாய் மூடி சீலை மண் செய்து கெஜபுடமிடவும். அதை எடுத்து தேன் விட்டரைத்து ஏழு பாகம் செய்து 7 நாள் தின்னவும். மேற்கண்ட புடம் குதிரையின் லத்தியால் போடவும். ஒவ்வொரு முட்டை 7 நாள் சாப்பிடவும். இது இராஜ வைத்தியம் ஒருவன் ஆயிசு வரையில் இம்மருந்தை உண்டவனின் தாதுவின் பலத்தின் சக்தி போதுமானது.

~~64. வீர [illegible]~~.

64. வீர செந்தூர முறை.

மானம் அல்லது என்ன?

வீரமானதை ஒரே கட்டியாக 4 பலமெடுத்து கால் மானம் முலைப் பாலில் முழுக வைத்து ரவியில் வைத்து வந்தால் பால் முழுதும் சுண்டி விடும். பின்னும் கால் மானம் பால் வார்த்து ரவியில் வைக்க வேண்டும். இந்தபடி 3 தரம் செய்த பின் மைலாரை துரைத்தலை 4 ஜாம மரைத்து தேங்காயளவு உருண்டை செய்து அதற்கு உள் வீரக் கட்டியை வைத்து சீலைமண் 5 செய்து உலர்த்தி ஒரு பானையில் மணல் கொட்டி அதன் மேல் கவசம் வைத்து அதன் மேல் மணல் கொட்டி 4 விறகால் 4 சாமம் சாமம் எரிக்கவும். ஆறின பின் எடுத்து பிரித்த வீரக்கட்டியை எடுத்துக் கொண்டு அநுபானங்களில் சன்னி சுரம் முதலியவைகள் தீர்ந்து விடும். அரிசி எடை (வெ)க்கு கொடுக்க வயது 8 ராஜ முறை சர்வ வியாதிக்கும் ஆகும். அரிசியிடை.

65. கருவங்க சுன்னம்.

சுத்தி செய்த கருவங்கம் பலம் 1, ராவிய தூளை கல்வத்திலிட்டு பெரியாநங்கை சாறாலரைத்த வெண்ணை போலான பின்பு பில்லை செய்து உணர்த்தி மேற்கண்ட இலையை அரைத்து கவசங் கட்டி சீலை மண் செய்து 5 செய்து முழப் புட மிட சுன்னமாகும்.

66. வாந்தி பேதிக்கு கௌரி பாஷாண எண்ணெய்.

கழற்சி பருப்பை நஞ்சை நீக்கி கொஞ்சம் பெரிய துண்டுகளாக செய்து சீசாவில் போட்டு ஒரு தோலா தவுரி பாஷாணத்தை மை போல் அரைத்து சீசாவில் போட்டு சீசாவின் வாய்க்கு குதிரை மயிரை சொருகி சீசாவுக்கு ஏழு சீலை மண் செய்து உணர்த்தி ஒரு முடாவின் அடியில் ஓட்டை செய்து சீசாவை கவத்தி துவாரத்தில் நுழைத்து 2 அங்குலம் சீசா வாய் வெளியில் இருக்கும் படி முடாவில் அரைவாசி மணல் கொட்டி முடாவின் அடியில் ஒரு பீங்கான் கோப்பை வைத்து முடாவுக்குள் எருமுட்டை நிரைய போட்டு நெருப்பு வைக்க பீங்கானில் தைலம் விழும். எடுத்து வைத்துக் கொண்டு பேதி கண்டால் வுடன் தண்ணீரில் 3 சொட்டு விட்டு கொடுத்தால் மேற்கண்ட வியாதி தீரும். 3 நாள் கொடுக்கவும்.

67. முர்தார் சிங்கி பற்பம் கை கண்டது.

முர்தாங் சிங்கி பலம் 4, வேப்பன் பழம் 208 சார் பிழிந்து கல்வத்திட்டு அரைத்து வில்லை செய்து ஓட்டில் வைத்து உணர்த்தி ஓடு மூடிச் சீலை மண் செய்து 20 எருவில் புடம் மறுபடியும் ஒரு பலம் சார் விட்டரைத்து முன் போல் செய்து புடம் போடவும். இந்த படி 5 புடம் போட பற்பமாம். எடுத்து வைத்துக் கொண்டு அனுபானம் தேன் நெய் வெண்ணை குன்றுமணி எடை பற்பம், நவமூலமும் மேகங்கள் யாவும் தீரும்.

68. பாஷாண பற்பம்.

ஒரு பலம் வெள்ளை பாஷாணத்திற்கு இரண்டு படி பெருந்து மட்டி சார் சுருக்கு கொடுத்து மேற்கண்ட திப்பிலியை அரைத்து கவசம் செய்து அதன மேல் மருதாணி தழையை அரைத்து கவசம் செய்து 7 சீலை செய்து உணர்த்தி 15 எருவில் புடம் போடவும். அதை எடுத்து வைத்துக் கொண்டு சுரம், சன்னி, குளிர் காச்சல் முதலான வியாதிக்கும் குஷ்ட வியாதிக்கும் அதனதன் அநுபானத்தில் கொடுக்க தீரும். தாது இல்லாதவர்க்கு முந்திரி பருப்பு, வாதுமை பருப்பு, அசல் பவங் கற்கண்டு கட்டி அரைத்து கழற்ச்சி அளவு எடுத்து அதில் அரிசியெடை பற்பம் வைத்து கொடுக்கவும். 5, 7, 8 நாள் கொள்ளவும். சாதாரண முள்ளவர்களுக்கு பாலில் சாப்பிடவும்.

69. இருமல் தீர மிளகாதி மாத்திரை.

எருக்கன் பூவிலுள்ளிருக்கும் மொட்டை எடுத்து சரி எடை மிளகு கூட்டி தேன் விட்டரைத்து மிளகளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு தேனிலிரு வேளையும் ஒரு மாத்திரை கொடுக்க இருமல் தீரும்.

70. காசாதி கிருதம் இருமல் காச சுவாசாதிகள் தீரும்.

P.T.O.

ஆடா தோடை சார் பால் நெய், வகைக்கு படி கால் திரிகடுகு, திரிபலாதி, கிராம்பு லவுங்கப்பத்திரி, லவுங்கப்பட்டை, நாகப்பு, கஜ்ஜீர் காய் கர்கடகசிங்கி நறுக்கு மூலம் சித்தரை மூலம் அதிமதுரம் கொத்தமல்லி, சீரகம் திராக்ஷி, கச்சூர் கிழங்கு வகைக்கு வீ 1 கட்டி சூரணித்து மேற்கண்ட திரவங்களில் போட்டு குழம்பாக காய்ச்சி கால் படி தேனும் விட்டு கிளறி ரசாயன மாக்கி 3 நாள் காலை ஒரு கொட்டைடை கொடுத்து வரவும். சுவாச காச வாதாதி சிலேர்_பன வியாதிகள் யாவும் தீரும்.

71. சுவாசம் கூஷயம் தீர பொடி.

சுண்டு பிரண்டை சுண்டை கண்டங்கத்திரி பிரகரணை, துளசி, நாய் துளசி, சங்கம் வேர், முசுமுசுக்கை வேர், வல்லாரை வேர், நிலாவாரை வேர், தூதுவளை வேர், பிரப்பன் கிழங்கு அக்கிராகாரம், திப்பிலி, மாசிக்காய், பிஞ்சி கடுக்காய்; அதிமதுரம் இவைகள் வகைக்கு சரி சம எடை நல்ல மிளகை கொல்லையில் முளைக்கும் கரிசலாங் கண்ணி சாரால் 1 நாள் ஊர வைத்து எடுத்து உலர்த்தி அரைத்து சூரணஞ் செய்து வைத்துக் கொண்டு சூட்டால் வரும் இருமலுக்கு அவை தம்பிடி எடை சூரணமும் அரை தம்படி எடை சீனி சர்க்கரையும், சேர்த்து 6 நாள் கொடுக்கவும். சீதளத்தால் வரும் இருமலுக்கு தேனிலும் வாய் பன் அச்சரம் முதலிய இருமலுகளு வெண்ணையில் கொடுக்கவும்.

72. நவச் சாரக் கட்டு.

முங்கிலுப்பு பலம் 4, வெள்ளையாக பார்த்து தூள் செய்து சிறு குழியில் பாதி போட்டு அல்லது மண் கடாவில் போட்டு அதன் மேல் இரண்டு பலம் சாரக் கட்டியை வைத்து மேலும் மற்ற பாதி தூள் போட்டு அழுத்தி அடுப்பேற்றி 2 விறகால் 1 ஜாமம் எரிக்கவும். பிறகு 4 விறகால் 2 ஜாமம் எரிக்கவும், மேல் வெடிப்புண்டானால் மூங்கிலுப்பு தூள் போட்டு அழுத்தி விடவும். இந்தபடி ஜாக்கிரதையாக செய்து எடுத்து கொஞ்சம் கிள்ளி நெருப்பின் மீது போட்டு பார்த்தால் புகையாதிருந்தால் சரி புகைந்தால் கட்டு ஆகவில்லை என்று அறிந்து மறுபடியும் முன் போல் செய்து எரிக்கவும். நெருப்புக்கு ஜெயித் தால் சரியான கட்டு என அறிந்து எடுத்துக் கொள்ளவும். பனை வெல்லம் முலை பால் முதலிய அநுபானங்களில் கொடுக்க குன்மம், அஜீரணமும், பாண்டு, உதர ரோகங்கள் யாவும் தீரும். இக்கட்டை பற்பமும செய்துக் கொள்ளவும்.

73. ஜாதிலிங்க கட்டு.

முலைப் பாலில் ஊரப் போட்டு கழுவி உலர்த்தி எடுத்து அதமையோடு ஒரு தலை வெ வெள்ளைப் பூண்டு மிளகு, சமம் கட்டி குறிஞ்சலயிறக்கி 4 ஜாமம் சுருக்கு கொடுத்து எடுக்கவும். நெருப்பில் புகையாது சுரம் ஜன்னி முதலியவைகள் அநுபானங்களில் கொடுக்க தீரும்.

74. ஜாதி லிங்க கட்டு.

முலைப் பாலில் சுத்தி செய்த லிங்கம் ஒரே கட்டியாக பலம் 1 கற்பூரம் தோலா 10 பளிங்கு சாம்பிராணி தோலா 10 இவ்விரண்டையும் அரைத்தால் மெழுகு போலாகும். இதை 3 பாகம் செய்து ஒரு பாகத்தை மேற்கண்ட லிங் கட்டிக்கு கவசம் செய்து 3 சீலை மண் செய்து 8 எருவில் புடம் போடவும். இந்த படி 3 புடம் போட கட்டும மூச்சு இரும் பல் ஜன்னி சுரம் முதலியவைகளுக்கு தக்க அநுபானங்களில் கொடுக்க அநேக வியாதிகள் நீங்கும். அநுபானத்தின் பாட்டு.

பொல்லாத நெஞ்சடைப்பு வாய்வு மூர்ச்சை தீர்மப்பா வயிறு பேதி வயிறு நோதல்
போமப்பா சூலை மொடுபித்தப் பாண்டு பொல்லாத வயிற்று வலி குன்மம் சோகை
போமப்பா கொடு வேலிக் கஷாயத்தில் பரக்குமடா வெகு ரோகம் அறிந்து பாரே.

75. லிங்க கட்டு.

உலர்ந்த லிங்கம் கார்த்திகை கிழங்கின் சாற்றில் 4 ஜாமம் சுருக்கு கொடுத்தால் நல்ல கட்டாகும். ஆனால் லிங்கம் மெழுகு ஆகிற வரையில் சுருக்கு கொடுத்தால் மெழுகு ஆகும். கொஞ்சம் கொஞ்சம் கிள்ளி நெருப்பில் போட்டு பார்த்து சோதித்து வந்தால்

புகைந்தால் சரியாக ஆகவில்லை என்பதாய் அறிந்து சருக்கு கொடுத்து கொண்டே நெருப்பில் போட்டு பார்த்துக் கொண்டே சருக்கு கொடுக்க வேண்டும்.

வெ. 1, ரவி 2, தங் 1, மெழுகு 1 வகைவரு.

18.8.62.

76. தாம்பிர செந்தூரம்.

தாம்பிர ராகு பொடி தோலா 1, பழச் சாரில் 3 நாள் ஊரப் போட்டு கழுவி குழந்தைகள் சிறு நீரில் 3 நாள் பிரமமண்டியின் இலை சாரில் 3 நாள் ஊரப் போட்டு கழுவி பிரம தண்டின் பூ சாரால் 1 நாள் அரைத்து வில்லை செய்து உலர்த்தி மேற்கண்ட இலை அரைத்து வெளாங்காயளவு. பில்லைக்கு கவசம் செய்துமுழப் புடம் போட செந்தூரமாம். சரியாய் ஆகாமல் போனால் மேற்கண்ட சாரால் அரைத்து 1,2 புடம் போட ஆகிவிடும். செந்தூரம் ஆகி விட்டாலும் அதிக புடம் போடுவதில் அதிக காரமும் குணமும் கொடுத்தும் அன்றி அதிலுள்ள களிப்பு இல்லாமல் சுத்தமாயும் அமிர்தமாயும் இருக்கும் சுபம்.

77. தாளகச் கட்டு.

ஒரே கட்டி தாளம் தோலா 3 சிகப்பு கொடி வேலி இலையில் சிறுவர்கள் சிறுநீர் விட்டு இடித்த சார் பிழிந்து ஒரு ஜாமம் சருக்கு கொடுத்து மேற்கண்ட இலை அரைத்து கவசம் செய்து சீலை மண் ந் 7-ம் செய்து 5 எருவில் புடமிட கட்டும் சுரம் முதலியவைகளுக்கும் மேல் வேலைகளுக்கும் ஆகும்.

78. அப்பிரக செந்தூரம், பவுத்திரம் ஓட்டை அடைய.

சுத்தி செய்த கிருஷ்ணை அப்பிரகம் புலம் 1, மிதி பாகல் இலை சாரால் மை போலரைத்து பில்லை செய்து உலர்த்திஆலாம் பால் 2 பலம் விட்டு உலர்த்தி ஓட்டில் வைத்து சீலை மண் செய்து குக்குட புடம் போட்டு பணவிடை பற்பம் பசு வெண்ணெயில் கொடுக்கவும். பவுத்திரம் ஓட்டை அடைபட்டு போகும். குணமாகும். இம்முறை பற்பமாகும்.

79. கருவங்க செந்தூரம்.

சுத்தி செய்த கருவங்கத்தை ஓட்டில் போட்டு வருத்து பொன்னுவாரை வேர் வெடியுப்பு. துத்தி வேர், இவைகள் வகைக்கு பலம் 2 கட்டி தூள் செய்து கொஞ்சங் கொஞ்சமாய் தூவி வருக்கவும். 4 ஜாமம் வருத்தால் செந்தூரமாம். பணவிடை தேனில் கொடுக்க வெண்ணெயிலும் கொடுக்க பித்தம் மேகம் முதலியவை நீங்கும்.

80: வீர செந்தூர முறை.

சுத்தி செய்த நாகம் பலம் 1, பொடித்து ஒரு குடுவையில் போட்டு நிறை வெள்ளெருக்கம் பால் விட்டு சீலை மண் 7-ம் செய்து கெஜபுடம் இட சுன்னம் அரி எடை வெண்ணெயில் கொடுக்க மேகம் 21, மூலம் 9, கிராணி முதலிய சகல வியாதிகள் நீங்கும். தாது வளரும். பல முண்டாகும்.

81. வீர செந்தூர முறை.

4 பலமுள்ள ஒரே வீர கட்டி எடுத்து கால் மானம் முலைப் பாலில் போட்டு ரவியில் வைக்கவும்.

82. குன்மம் தீர நாக செந்தூரம்.

சுத்தி செய்த நாகம் ஓட்டிலிட்டு பருப்பு கீரை போட்டு வருத்து மேற்கண்ட இலை சாரால் அரைத்து வில்லை செய்து உலர்த்திஓட்டில் வைத்து சீலை மண் செய்து 60 எருவில் புடம். மறுபடியும் மேற்கண்ட இலை சாரால் மேற்கண்டவையை போல் புடம். இந்த படி புடம் 7 போட திவ்வியமான செந்தூரம் ஆகும்.

83. பெரும் பாடும் வயிறு கடுப்பும் தீர.

தேவையான அளவு காசி கட்டி தூள் செய்து ஒவ்வொரு வேளை வெண்ணெயில்

குழப்பி காலையிலும் மாலையிலும் கொடுக்க தீரும்.

84. எது பற்பம்.

எதுகவ ராவின ான் பலம் 1, வெள்ளை எருக்கன் பாலால் அரைத்து ஊர்த்தி ஓட்டில் வைத்து சீலை மண் செய்து 125 எருவில் புடமிட பஸ்பம். ஆகாது போனால் இன்னொரு புடம்-பஸ்பம் அரிசிஎடை வெண்ணெயில், தேன், பனைவெல்லம், அநுபானம் பித்தம் சோபை, பாண்டு, காசிரோகம், இருமல், தீரும். தாது கட்டும்.

85. செந்தூரமாக்க வேண்டுமானல்.

சேம்பின் தண்டின் சாரில் 3 நாள் ஊரப் போட்டு பழச் சாரால் 3 நாள் ஊரப் போட்டு அப்படியே அரைத்து பில்லை செய்து ஊர்த்தி ஓட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் செய்து முன் போல் புட மிட்டால் செந்தூரமாகும்.

86. வெள்ளி பஸ்பம்.

ஒரு பழைய ரூபாயை பிரம தண்டில் பாலில் பிரட்டி பிரட்டி 3 நாள் கொடுத்து மேற்கண்ட இலையை அரைத்து சார் பிழிந்து நீக்கி விட்டு அதன் திப்பியை அரைத்து கவசம் செய்து அதன் மேல் சீலை மண் செய்து 50 எருவில் அல்லது முழப்புடமிடவும் பஸ்பமாகும்.

87. கடி விஷம் 18-க்கு குழம்பு.

வெள்ளைப் பாஷாணம் ரசம் கெந்தி மனுசிலைதுருசு வேப்பன் பருப்பு, பெருங் காயம், வகைக்கு வீ அரை இதற்கு சம எடை வாளப் பருப்பு சுத்தி செய்து சேர்த்து வெள்ளை எருக்கன் பாலில் விட்டு அரைத்து பின்பு வேப்பெண்ணை விட்டு அரைத்துக் கொண்டு பயிரளவு வெத்திலையில் தடவி ஒள் கொள்ளவம். பின்பு தயிரும், சோறும் சாப்பிடவும். பல் பட்ட விஷமும தீரும்.

88. தேள் விஷந் தீர.

நரியிலை அரைத்து சிறு சுண்டைக்காய் பிரமாணம் கடி வாயில் தடவி ஒரு மாத்திரை தின்ன கடி விஷந் தீரும்.

89. வீரிய விர்த்தி லேகியம்.

வருத்த கடலை மாவு தோலா 40 இளநீர் தோலா 5 விட்டு பிசைந்து ஊர்த்தி கசகசா பால் விட்டு அல்லது கசகசா எண்ணெய் கால் தோலா போட்டு வைக்கவும். கற்கண்டு பலம் 7, பாதாம் பருப்பு பலம் 1, பிஸ்தா விரை பருப்பு பலம் 1, தோசக் காய் விரை, தர்பூஜ் விரை, முருக்கன் பிசின் இவைகள் வகைக்கு பலம் 1, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ருமஸ்தகீ இவைகள் வகைக்கு தோலா 1 கஉறரூபா தோலா கால் முதல் தர கஸ்தூரி பணவிடை 8, பொன் ரேக் தோலா அரைக்கால் கூட்டி பாகப்படுத்தி காய்ச்சி நுரை நீக்கி சுத்தி செய்த தேன் தோலா 60 விட்டு பிசைந்து இரு பொழுது உண்ண மகா தாது வீரியமுண்டாம். கண் பார்வை யுண்டாம். நெஞ்சு நோவும் மாறும். மூலச்சூடு மூர ரத்தம், மூலமும் தீரும். தாது கட்டும. சூட்சமம்.

90. வீரிய விர்த்தி லேகியம்.

பாதாமி, சாலாமி, சிரி சீரகம், சுக்கு, வகைக்கு தோலா 1 சாலா மிசிரியை ஒரு பலமாக சேர்த்துக கொள்ளவும். நீர் முள்ளி விரை தோலா 4, திராக்ஷி தோலா 5, கூட்டி அரைத்து நுரை போக்கி சுத்தி செய்த தேன் தோலா 8, கூட்டி பிசைந்து வைத்துக் கொண்டு 11 பாகம் செய்து 11 நாள் தின்னவும். தாத்து பக்ஷி, வீரி விர்த்தியுமுண்டாம் அதோடு தங்க ரேக்கு வெள்ளி ரேக்கும் சேர்த்துக கொள்ளலாம்.

91. கடுக்காய் லேகியம்.

கடுக்காய் தோல், சிவதை, கரிப்பான் வல்லாரை, புளியாரை, சுள்ளமாக்கி வகைக்கு பலம் 2, கடுகு ரோகணி கிராம்பு, திரிகடுகு, சிறு நாகப்பூ, வாருவையரிசி,

கடுக்காய் பூ, கருஞ்சீரகம், தான்றிக்காய், கொத்தமல்லி, தாளிச பத்திரி, இவைகள் வகைக்கு பலம் கால் ஊர்த்தி சுமார் 3 மணிக்கு இடித்து சூரணித்த சம பாகம் சீனு கல்கண்டு சேர்த்து நெய் தேன் விட்டு பிசைந்து லேகியம் செய்து வைத்துக் கொண்டு வேளை 1-க்கு கொட்டைப் பாக்கு அளவு இருபொழுது உண்ணவும். இதில் வெள்ளி, தங்கம், ரேக்கு சேர்த்தால் மிகவும் நல்லது. தீரும் வியாதி மலம் ஜலம் , கபக் கட்டு, உஷ்ணம், மேகச் சூடு, கை கால் எரிச்சல், ஈளை இருமல் பிரட்டல், பகைச்சல், நாவரகூடி, சோபை தீரும்.

92. இருமலுக்கு லேகியம்.

அதிமதுர தாள் அல்லது பால் பலம் 2, கல்கண்டு பலம் 2 கூட்டி நெய்யில் பதமாக பாகம் செய்து கழற்சிகாய் பிரமாணம் தின்ன தீரும்.

93. தலைவலிக்கு ஏனாதி கிருதம்.

புழுங்கல் அரிசியை ஊர வைத்து கொப்பரை ஏலரிசி ஓர் எடை எடுத்து அரைத்து பசு வெண்ணெயில் சேர்த்து நல்ல வெல்லம் பாகு செய்து போட்டு கிளறி எடுத்து வைத்துக் கொண்டு கால் தோலா கால் தோலா சாம்பிராணி பூவும் மேற்கண்ட மருந்தில் சேர்த்து பதமாக காய்ச்சி லேகியம் செய்து கழற்சிக்காய் அளவு தின்ன தலை வலி வியாதி நீங்கும்.

94. தூக்கமுண்டாக மூளையின் சூடுமாற தாது கட்ட லேகியம்.

போஸ்த்துக்காய், பலம் ஒன்றரை சிதைத்து ஒன்றரை படி நீரில் போட்டுஇராபகல் காய்ச்சி அரை படி ஜலமாக்கி இறக்கி பிசைந்து வடி கட்டி பாதாம் பருப்பு பலம் ஒன்றரை கசகசா பலம் ஒன்றரை மேற்கண்ட கஷாயத்தால் அரைத்து கலக்கி குங்குமப்பூ, தோலா கால், பனை நீர் பலம் மூன்றரை கூட்டி அரைத்து கலக்கி காய்ச்சி தேன் சர்க்கரை சேர்த்து லேகியம் செய்து இரவு தூங்கும் போதுமுக்கால் தோலா எடை லேகியம் சாப்பிட்டு தூங்க தூக்கம் சுகமாக வரும்.

95. பூண்டு லேகியம் தாது கட்ட.

ஒர தலை பூண்டு தோலா 40 பால் மானம் 1 தண்ணீர் மானம் கால் கலந்து மேல் தோல் உரித் பூண்டு போட்டு காய்ச்சி கரண்டின பின் முக்கால் மானம் தேன் விட்டு நன்றாக கடைந்து வெடித்துக் கொண்டு கரபுனி, கடுக்காய், மிளகு, அக்கல்காரம், சுக்கு, கிராம்பு, திப்பிலி, சித்தரத்தை, லவங்கப்பட்டை, தூள், தி அகில் இவைகள் வகைக்கு வீ 2¼ கால் கூட்டி இளவருப்பாய் வருத்து இடித்து சூரணமாக்கி 20 தோலா நெய்யும் சேர்த்து பதமாக காய்ச்சி பின் இரு தோலா நெய் விட்டு பக்குவமாய் காய்ந்து வரும் போது மஷ்த்தக்கி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலம் முன் எடை சேர்த்து இள வருப்பாய் வருத்து இடித்து குங்குமப்பூஒன்றரை சேர்த்து மை போல் அரைத்து சேர்த்து லேகியமாக்கி தினம் ஒரு வேளை 1 தோலா எடை உண்ண வீரிய விர்த்தியுண்டாம். கசை வாதம், வாய்வு, பித்தம், அய்யம், சீல் வாய்வு குடைச்சல் கை கால் சுருக்கு முதலியவை தீரும். பலம் உண்டாம்.

96. தேகம் தடிக்க பெருக்க பலம் பெருக சுரக்காய் லேகியம்

சுரக்காயை சுரண்டின சோர் சேர் 3 பாதாம் பருப்பு சேர், கல்கண்டு சேர், 4, தேன் சேர் 2, நெய் சேர் 3, கஜ்ரீர் காய், கசகசா வகைக்கு பலம் 3, குலாயி நீர் பலம் 2 குல்கந்து பலம் 2,
கரு பூத் விரை, தரு பூத் வனிர கங்கடி விரை, சுரக்காய் விரை வகைக்கு பலம் ஒன்ற கூட்டி வேக வைத்து லேகிய மாக்கி இரு வேளையும் ஒவ்வொரு தோலா தின்னவும்.

97. மேகநாத குழம்பு.

பதமரு குலைப் பன்கள் பகர்ந்திடும் கடி விஷங்கள்
இதமுரு பெரு வியாதி யிசைந்திடும் குஷ்ட ரோகம்

சூதமுரு தேமல் மேனி தகர்ந்திடும் காங்கை வெள்ளை
நீக்மொரு சொறி சிரங்கு நிகழுத்திட மருந்த கேளே.
நிமத்து ரேன் எட்டி வித்து நேர்படும் சூதம் லிங்கம்
சத்த நெல்லிக்காய் கெந்தி தாரமுந்துருசு துத்தம்
புகழ்ந்த நெய் வார்த்தரைத்து பொருந்து நாற்பது நாளுண்ண
தீர்ந்திடுஞ் சாம்பிராணி தைலஞ் செய்நட விற் பூசே.

98. குழந்தைகளுக்கு மாந்த எண்ணெய்.

விளக்கெண்ணெய் படி அரை, துரிஞ்சி பட்டை அருகன் வேர், இந்த இரண்டும் எலுமிச்சங் காயளவு அரைத்து சேர்த்து கலக்கி ஒரு தம்மட்டி கர்ளை அறுத்து போட்டு காய்ச்சி வந்த பாகத்தில் பதத்தில் இறக்கி வடி கட்டி வைத்துக் கொண்டு 3 நாள் 3 கரண்டி கொடுத்து வந்தால் மாந்தம், சுரம், இரைப்பு, பேய் மாந்தம் பொருமலும் போமே.

99. பரிமள சாம்பிராணி எண்ணெய்.

நல்லெண்ணெய்யாவது, தேக்காயெண்ணெயாவது வீசை-1, பெரிய பீங்கானில் விட்டு வாய் வட்டமுள்ள பானையின் நடுவில் மேற்கண்ட பீங்கான் வைத்து அப்பீங்கான் சுற்றிலும் 10 பலம் பளிங்கு சாம்பிராணி பொடித்து போட்டு பானையின் வாயில் ஒரு மண் தாலத் தால் மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி சிறு நெருப்பாக எரிக்கவும். புகை அடங்கின பின் ஆறி எடுக்கவும். இதை தலையில் தடவினால் சுகந்த பரிமள வாசனை வீசுவதும் தவிர பல நோய் தீரும்.

100. சாம்பராணி பூ எடுக்கும் பாகம்.

வாய் வட்டமுள்ள பானையில் 3 சிறு கல் கொண்டு வைத்து அதன் மேல் பீங்கான் நிற்கும் படி அடுப்பு செய்து அடுப்புக்கும் நடுவில் பளிங்கு சாம்பராணியைப் பொடித்து போட்டு பீங்கானை அடுப்பின் மேல் கவுத்தி பானை வாய்க்கு செம்பு வைத்து செம்பில் முக்கா பாகம் செம்புக்கும் சேர்த்து சுற்றி சீலை மண் செய்து காற்று யேறி வெளியில் வராமல் மண் அப்பிக் கொண்டு பத்திரமாய் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுப்பெரித்து வரவும், செம்பிலுள்ளிருக்கும் ஜலம் சூடேறினால் அகப்பையினால் மொண்டு ஊற்றி விட்டு குளிர்ந்த தன்னீர் விட வேண்டும். இந்த படிக்கு தன்னீர் மாற்றியான பின் நெருப்பு ஆற்றி ஆறின பின் எடுத்து பீங்கானிலுள்ள பதங்கத்தை சுரண்டி எடுத்துக் கொள்ளவும்.

இன்னொரு விதம்.

ஒரு சட்டியில் தேவையான சாம்பராணி தூள் போட்டு சட்டி வாய்க்கு ஒரு பெரிய மொட்டாகாயிதத்தை கோமாளி குல்லாவை போன்றும் கடைசில் சர்க்கரை கட்டி கொடுப்பதைப் போன்றும் சுருளாக சுற்றி காற்று போகாத வாறு ஒட்ட வைத்து சட்டியின் பிரம்புக்கு பத்திரமாக போட்டு காற்று போகாத வாறு பிரம்பிலும் பசை தடவி ஒட்ட வைத்து வீச வேண்டும். இந்த டப்பி ஒரு முழு நீளம் இருக்க வேண்டும். பின்பு அடுப்பு நிதானமாய் அதாவது ஒரு பெரு விரல் கனமுள்ள கொழுந்து விட்டு எரிகிற அளவு எரிக்க வேணும். வாசனை வீடெல்லாம் வீதி எல்லாம் வீசும். வாசனை அடங்கினால் அடுப்பாற்றி சட்டி ஆறின பின் மேலிருக்கும் காகித தொப்பி அல்லது குல்லாவின் மேல் தூ ரில் நிரைய பிடித்திருக்கும். அதை சுரண்டி எடுத்துக் கொள்ளலாம்.

101. அசல் பச்சை கற்பூர வைப்பு.

வெடியுப்பு, படிகாரம், ஏலக்காய், லவுங்கம், பட்டை கஜ்ஜீர்காய், புநீர் கோரைக் கிழங்கு வகைக்கு விராகன் 2 சூடன் விராகன் ஒன்றரை கச்சூர் சுக்கு, வால் மிளகு, இவை யனைக்கு வீ 1 கட்டி சூரணித்து சந்தன தைலத்தால் குழப்பி பீங்கானில் போட்டு மறு பீங் கான் மூடி உளுந்த மாவால் வாய்க்கு சீலை செய்து பெருஞ் சட்டியில் மணல் போட்டு அதன் மேல் பீங்கான் வைத்து மேலும் நிரைய மணல் கொட்டி மூடி அடுப்பேற்றி எரித்துக் கொண்டு வந்தால் கற்பூர வாசனை கண்டவுடனே இறக்கி ஆற வைத்துக் எடுக்க கற்பூரமாகும்.

102.

102. இரச வைப்பு.

இரசம் தோலா 3, வீரம் தோலா 3, கட்டி 120 தோலா நாகத்தை இடித்து தூள் செய்து அல்லது உருக்கி தூளாக்கி ஒரு பெரிய சீசாவில் கொஞ்சம் தூள் போட்டு அதன் மேல் இரச வீர மிரண்டின் தூள் கொஞ்சம் தூவி அதன் மீது நாகத்தூள் போட்டு அதன் மேல் இரச வீர தூள் போட வேண்டும். இதுவே போன்று எல்லாம் போட்டு ஆன பின் சீசாவாய்க்குள் காற்று பேர்காத வாறு கெட்டியாய் கார்க்கு போட்டு வாய்க்கு சீலை மண் செய்து சாணி குப்பையில் 40 நாள் புதைத்து எடுக்க இரசமாச்சுது.

103. அசல் சூடன் வைப்பு.

படிகாரம் பலம் 20, வெடியுப்பு பலம் 2, சூடன் பலம் 8 வெள்ளை குங்கிலியம் பலம் 8 கட்டி தூளாக்கி கொஞ்சம் நீர் விட்டு குழப்பி பெருங் குண்டா சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து சிறு சூடேற்றி மறு சட்டி மூடி வாய்க்கு சீலை செய்து 40 நாள் குழியில் புதைத்து எடுக்க சூடன் கற்பூரமாச்சுது.

104. கஸ்தூரி வைப்பு.

உலர்ந்த முயல் ரத்தம், பழுப்பு ஊசி மிளகு உளர்ந்தது கருப்பு கல் மதம் காசி கட்டி புழுகு மரம் பிசின் வகைக்கு தோலா கால் கட்டி மை போல் அரைத்து பின்பு வெள்ளை எருக்கன் பாலால் அரைத்து முதல் தர கஸ்தூரியும் அரிசியெடை கட்டி அரைத்து இளம் வெயிலில் வைத்துக் கொஞ்சம் உளர்ந்த பின்ப எடுத்து கையால் நெருடி தூளாக்கி விற்க்கவும். விலையாகும்.

105. கஸ்தூரி வைப்பு.

சிகப்பு மூசாம்பரம், காசு கட்டி, ஊசி மிளகாய், விரை நீக்கி விடவும், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு தோலா அரை தூள் தனித் தனியே பண்ணி எடை போட்டு கலவத்திட்டு சுண்ணாம்பு நீரால் 4 ஜாமம் அரைத்து வில்லை கட்டி கொஞ்ச முளர்த்தி பின்பு பட்டு துணி துண்டில் வைத்து உளர்த்தி பின்பு அரை விராகனிடை புழுகு கால் விராகனிடை முதல் தரமன கஸ்தூரியும் போட்டு, கையில் போட்டு நிமுட்டி ஆட்டின் தோலில் பொட்டணங் கட்டி அதாவது புனுசம் போல் செய்து நிழலில் தொங்க போட்டு உளர்த்தி எடுத்துக் கொண்டு தோல் வாயை அறுத்து உருண்டை போலாக்கி விற்கவும். விலையாகும்.

106. கஸ்தூரி வைப்பு அசலானது.

எருமை அட்டை நீரிலிருந்து பிடித்து வந்து பூனையின் வயிற்றில் கடிக்க வைத்து இரத்தம் நன்றாக குடித்த பின் பட்டு நூலால் அட்டையின் வாயைக் கட்டி எடுத்து எரவாணம் முதலிய பத்திரமாக இருக்கபட்ட இடத்தில் தொங்கப் போட்டு தூக்கி கட்டி விடவும். நன்றாக காய்ந்த பின்பு அப்படியே விற்ககவும். மேலான கஸ்தூரியாம்.

107. பருப்பு கெந்தக பற்பம்.

சிறு சின்னியிலையை அரைத்து குகை செய்து ஒரு பலம் கெந்தகத்தை வைத்து சீலை மண் மூன்றுஞ் செய்து 10 எருவில் புடம் போட பற்பம். பிரம தண்டின் இலை அரைத்து குகை செய்து மேற்கண்ட கெந்தத்தை வைத்து சீலை மண் செய்து 20 எருவில் புட மிட பற்பம். ஆம் பணவிடை பற்பம் வெண்ணெயில் கொடுக்க மேகம், சொரி சிரங்கு முதலானதும் தீரும்.

108. இரச பற்பம்.

மூங்கில் குருத்தை ஒரு முழமளவு வெட்டி நடுவில் துளைத்து ஒரு பலம் வாலை ரசம் விட்டு மேற்கண்ட குருத்தால் வாயை மூடி எழு சீலை மண் செய்து ஒரு சாண் அகல ஓட்டில் நிற்க்க வைத்து அதன் உரம் 200 எரு முட்டை அடுக்கி புட மிட பற்பமாகும். வெள்ளை பனை வெல்லம் அனுபானம் அரிசியெடை போதும். 5 அல்லது 7 நாள் போதும். மேகம் 21-ம் தீரும்.

~~109~~.

109. தாளக செந்தூரம்.

சுத்தி செய்த தாளகம் ஒரு கட்டி கன்னி எருமை சாணியினால் ஒரு முசை பண்ணி அதில் புளிய மரப் பட்டை சாம்பல் போட்டு தாளகம் வைத்து மேலும் சாம்பல் கொட்டி மேல் மூடி சாணியினால் செய்து உளர்த்தி அரை மூடி சீலை மண் செய்து ஒரு சாண் அகல கூட்டில் நிற்க வைத்து எருவு அடுக்கி அதாவது 18 எருவில் புடம் போட்டு எடுத்துக் கொண்டு காட்டா மணக்கின் பட்டை அரைத்து கவசம் செய்து சீலை மண் 3-ம் செய்து 3 எருவில் புடம் இந்தபடி 3 புடம் போட பற்பம் எடுத்து வைத்துக் கொண்டு அரிசியெடை வெண்ணை தேனில் கொடுக்க இருமலும், காசத்திற்கும் திரிகடுகு, லேகியத்திலும் 12 நாள் கொடுக்க நீங்கும்.

110. தாளக மணி.

சிப்பி வாயில் கற்பூரம் போட்டு பிங்கானில் வைத்தால் நீர் வடிந்து நிற்கும், அந் நீரில் 3 நாள் ஊரப் போட்டு 4 வது நாள் எடுத்து வெந்த சுண்ணும்புகல் ஒன்று வேகாத சுண்ணும்பு கல் ஒன்று கற்பூர சலாசத்து கிளிஞ்சிலுள்ள சதை எல்லாம் சரியெடை கல்வத்திலிட்டு மேற்கண்ட கிளிஞ்சல் நீரால்அரைத்து 2 பலமுள்ள தாளகக் கட்டிக்கு கவசம் செய்து ஒரு சட்டியத்தில் பாதி மணல் கொட்டி நடுவில் கவசத்தை வைத்து மேலும் மணல் கொட்டி வாய் மூடி சீலை மண் செய்து ஒரு சாண் அகலமுள்ள முழம் ஆழம் பள்ளம் வெட்டி அதில் பச்சை நெல்லின் உமி போட்டு கலயம் வைத்து மேலும் உமி கொட்டி நிறைந்த பின் புடமிட்டு ஆறி எடுத்து வைத்துக் கொண்டு சுரம், ஜன்னி, இருமல், மூச்சுக்கும், இஞ்சி முலைப் பால் தேன் வெண்ணை நெய் இதுகளில் அநுபானமாக கொடுக்கவும். இருமல் சுரம் ஜன்னி முதலியவை தீரும் பஸ்பமும் செய்யலாம்.

111. ரச கற்பூரம் மணியாகும் முறை.

3 நாளைக்கு ஒரு தரம் முலைப் பாலை ஊத்தி விட்டு புது பாலை ஊற்றி வைக்க வேண்டும். இந்த படி 10 நாள் ஊரப் போட்ட பூரக் கட்டியை தத்தி வேரை வெண்ணை போல் அரைத்து கவசம் செய்து மேற்கண்ட தத்தி வேரை அரைத்து சூரணம் கலயத்தில் பாதி போட்டு கட்டியை வைத்து மேலும் மேற்கண்ட தூள் கொட்டி அமுத்தி சீலை மண் செய்து உளர்த்தி 3 எருவில் புடமிடவும். எடுத்து வைத்துக் கொண்டு மேக வாய்வு, ரணம் பயிர ஊதல் முதலி வியாதி நீங்கும். இஞ்சி முலைப் பால் அநுபானம் பஸ்பமும் ஆகும்.

112. லிங்க கட்டு கை கண்டது.

முலைப் பாலில் சுத்தி செய்த லிங்கம் பலம் 1, ஒரு முற்றின தேங்காயை துளைத்து நீர் போக்கி நிறைய எருக்கன் பால் விட்டு அதில் மேற்கண்ட லிங்கத்தைப் போட்டு ஆட் பிடித்து 7 சீலை மண் செய்து உளர்த்தி பூமியில் பள்ளம் தோண்டி அதில் 15 நாள் புதைத்து எடுத்து ஒரு சட்டியில் மணல் போட்டு நடுவில் மேற்கண்ட கவசத்தை வைத்து அடுப்பிலேற்றி இராப்பகல் 3 நாள் எரித்து ஆறின பின் பிரித்து லிங்கத்தை எடுத்து வைத்துக் கொண்டு அரிசியெடை வெற்றிலையில் வைத்துக் கொடுக்க ஜன்னி சுரம் குளிகை, கை கால் முடக்கு புண் பவுத்திரம் லிங்கப்புற்று, பிரமியம் 21 மேகம் முதலிய எல்லாம் தீரும். இதுகை கண்டது.

113. லிங்க கட்டு பாஷாணமும்.

வீர லிங்கத்தை காட்டு முருங்கை சாற்றால் 4 ஜாமம் சுருக்கு தாக்கி கால் அரிசியெடை லிங்கத்தை எடுத்து நெருப்பின் மீது போட்டு பார்த்து புகைந்தால் இன்னும் 2 ஜாமம் சுருக்கு தாக்க புகை அடங்கட்டும். இதை ஜன்னி சுரம் தீ முதலியவைகளுக்கு முலைப் பாலில் அநுபானம் அரிசியெடை போதும். பாஷாணமும் இதுவே போல் கட்டிக் கொள்ளலாம்.

111. வீர ரச கட்டு.

வீரம் ரசம் சமனிடை முள்ளங் கி கிழங்கு சாற்றால் 4 ஜாமம் அரைத்து உருண்டை செய்து

கொஞ்சம் உளர்த்தி புன்னையில் பொதிந்து கட்டி 3 நூலால் கட்டி 2 பெரு விரல் பூசம் போட வேண்டும். இந்த படி 3 புடம் போட கட்டும். எடுத்து வைத்துக் கொண்டு இஞ்சி முலைப் பால் அநுபானத் தேன் நெய், ஜன்னி சுரம் முதலிய நோய்களுக்கு இழைத்து கொடுக்கத் தீரும்.

115. தாளக பஸ்பம்.

தாளகம் பலம் 2, வாழைப்பழத்தால் அரைத்து செம்பு கிண்ணத்தில் போட்டு மறு செம்பு கிண்ணத்தால் மூடி வாய்க்கு 5 சீலை மண் செய்து அதன் மேல் களி மண்ணால் பூசி 50 எருவில் புடம் போட்டு புடமாறி பிரித்து பார்த்தால் மேல் கிண்ணத்தில் பதங்க மேறி இருக்கும். சுரண்டி எடுத்து உருக்க கம்பி யாகும். அதை சுரத்திற்கு இஞ்சி சாறில் உரைத்து கொடுக்க ஈளை இரும்பலுக்கு தேனிலும் கொடுக்கலாம்.

116. ரச கற்பூர கம்பி.

ரச கற்பூரம் ஒரே கட்டி ஒரு பலம் முலைப் பாலில் ஊறப் போட்டு 3 நாளைக்கு ஒரு தரம் புதிய பால் ஊற்ற வேண்டும். பழைய பாலை ஊற்றி விட்டு லிங்கத்த கழுவி துடைத்து போட வேண்டும். இதை கழுவி எடுத்து உளர்த்தி குப்பைமேனி சாறால் 2 ஜாமம் அரைத்து கூழ்ம்க்காய் போல் 4 கம்பி செய்து 3 நாள் நன்றாக உளர்த்தி 3 பலம் சூடன் 2 பலம் பளிங்கு சாம்பிராணி கூட்டி அரைத்து ஒரு மண் தாளத்தி போட்டு நடுவில் மேற்கண்ட கம்பிகள் வைத்து மற்ற பாதி தூள் மேலும் போட்டு கொளுத்தவும். நெருப்பு அவிந்தவுடனே பிரட்டி பிரட்டி கொடுக்கவும். ஆறின பின் கம்பியை எடுத்து வைத்துக் கொண்டு கடலை பிரமாணம் எடுத்து தூளாக்கி 6 தோலா முலைப் பாலில் கலந்து குடிப்பாட்டவும். அதன் மேல் வெள்ளாட்டின் எலும்பின் குப்பில் நெய் விட்டு சாப்பிடவும். இப்படி 3 நாள் 3 வேளை 5 நாள் 5 வேளை ம் உண்ணவும். புளி இல்லாத பத்தியம். தீரும் வியாதி இருமல், க்ஷயம், மேகம், புண், விரணம் லிங்கப் புண், சொட்டு மூத்திரம், பவுத்திரமும் தீரும். இந்திரியம் அதிகரிக்கும்.

117- வீரக் கட்டு தீராத ஜன்னிக்கு.

வீரம் ஒரு கட்டி விளாங்கா வெட்டி இரு பிளப் பாக்கி நடுவில் வைத்து மறு பிளப் பால் மூடி வாய்க்கு மேல் மெழுகால் நீர் ஏராதபடி கெட்டியாக ஒட்டி குமுதை நீரில் 7 நாள் ஊறப் போட்டு 8 வது நாள் எடுத்து 7 சீலை மண் செய்து 10 எருவில் புடம் போட்டு புடம் ஆறி எடுத்து மறுபடியும் வேறு வேல்ளாங்காயிலும் இந்தபடி செய்யவும். இந்த படி 3 தரம் செயது எடுத்துக் கொண்டு முலைப் பால், இஞ்சி தேன், அநுபானத்தில் கொடுக்க பேசாத ஜன்னியும் பேசவைக்கும். சாக போகிறவனும் பேசி விட்டு சீவன் விடுவான்.

118. லிங்க செந்தூரம்.

ஒரே கட்டி ஒரு பலம் ஜாதிலிங்கம் தலை முலைப் பாலில் 10 நாளில் ஊறப் போட்டு சூடான ஜலத்தால் கழுவி உளர்த்தி சரக் கொன்னை பட்டை எடுத்து மாவு போலிடித்து குண்டாவில் படி தூள் போட்டு நடுவில் லிங்கக் கட்டியை வைத்து மேலும் படி தூள் போட்டு அமுத்தி வாய் மூடி சீலை மண் வாய்க்கு செய்து அடுப்பேற்றி ஒரு ஜாதி ஜிங்கால் 2 ஜாமம் எரிய விட்டு ஆறிய பின் எடுத்து வைத்துக் கொண்டு அரிசி பிரமாணம் தேன், இஞ்சி முலைப் பாலில் அநுபானமாய் கொடுக்க ஜன்னி சுவாச காசம் தீரும்.

119. ரச கற்பூர கட்டு.

ஒருபலமுள்ள ரசக் கட்டியை ஒரு பலம் முலைப் பாலில் 3 நாள் ஊறப் போட்டு பாலை ஊற்றி விட்டு புது பால் ஊற்றி 3 நாள் வைத்து பின்பு பாலை ஊற்றி விட்டு புது பால் ஊற்றி அதில் லிங்கக் கட்டியைப் போட்டு 3-வது நாள் எடுத்துநீரில் கழுவி உளர்த்தி வெள்ளருகுயிலை அரைத்து தேங்காய் பிரமாணம் கவசம் செய்து புடம் போடவும்.

சீலை மண் 7 செய்து புடம் போடவும். இந்த படி புடம் 3 போட்டு எடுத்து வைத்துக் கொண்டு இஞ்சி ரசத்தில் அரிசியெடை கொடுக்க சுரம், காச்சல், வயிறா ததல் முதலியவை தீரும். இதை பற்பம் செய்யலாம். இன்னும் அதிக சிரேஷ்டம் ஆகும்.

120. பூரக் கட்டு புண் விரணம் தீர.

முலைப் பாலில் சுத்தி செய்த பூரக் கட்டியை பிரம தண்டின் பாலில் பிரட்டி உணர்த்தி விடவும். இந்த படி 3 நாள் செய்யவும். பினப ருடன் தூள் செய்து பாதி போட்டு மேல் பூரக் கட்டியை வைத்து மேலும் ருடனிட தூள் கொட்டி எரித்து கொருத்தி விட்டார் எரிந்து அவின் பின் பிரட்டி பிரட்டி கொடுத்து வரவும், மறுபடியும் இதேபடி 3 தரம் செய்து எடுத்து வைத்துக் கொண்டு இதை 5 அரிசியெடை எடுத்து 5 நாள் கொடுக்க புண் புரைகள் தீரும். வெள்ளையில் தின்னவும்.

121. வீர மெழுகு.

வீரக் கட்டி பலம் 1, முலைப் பால் முருங்கைப் பூ சார் வகைக்கு அரைக்கால் மானம் கள்ளிப் பழுப்பை வாட்டி பிழிந்தநீர் காலே அரைக்கால் மானம் கூட்டி கலக்கி வீரத்தை ஓட்டிர் அல்லது பீங்கானில் அல்லது அப்பிர தகட்டின் மேல் வைத்து சுருக்கு கொடுத்து வரவும். மேற்கண்ட திரவத்தை அதிகமாய் விட்டால் கரைந்து போகும். தடவிக் கொண்டு வரவும். இப்படி பால் மாறாமல் செய்தால் மெழுகு ஆகும். எடுத்து வைத்துக் கொண்டு பயிற் அளவு பனை வெல்லத்தில் கொள்ள சுரம், பக்க சூலை, சன்னி முழங்கால் வாதம் வாய்வு முதலிய சகலமும் தீரும்.

122. வீர மெழுகு.

மேற்கண்ட படி சுத்தி செய்த வீரக் கட்டியை கள்ளிப் பழுப்பை வாட்டி பிழிந்த நீரில் அரைக்கால் மானம் ஓட்டில் வைத்து வீரக் கட்டிக்கு சுருக்கு தாக்கம் கிாரி கொடுத்துக் கொண்டு வரவும். பின்பு கொஞ்சம் எடுத்து பித்தளை பாத்திரத்தில் தேய்த்தால் வெளுமை வராதிருந்தால் பதம் வெள்ளியைப் போல் ரசம் படியாதிருந்தால் சுருக்கு கொடுத்து வரவும். ஆக இப்படி செய்த வீர மெழுகை குன்று மணி எடை பனை வெல்லத்தில் கொடுக்க 7 நாள் 14 வேளையில் வாதம் வாய்வ ரணம் முதலியவை தீரும்.

123. தாம்பிர மெழுகு சர்வ வியாதி தீரும்.

good specific

சுத்தி செய்த பழைய தட்டு பலம் 4 ஆர மாத காடியில் 40 நாள் ஊரப் போட்டு அதாவது பூமியில் புதைத்து விடவும். பின்பு எடுத்து நெல்லிக்கா கெந்தி ஒரு பலம் எடுத்து சிற கீரை சாற்றுல் அரைத்து தட்டுக்கு பூசி கவசமாக்கி கொஞ்சம் உணர்த்தி பானையில் அரை படி உப்பு போட்டு அதன் காசை பரப்பி அதன் மேல் அரை படி உப்பு கொட்டி அடுப்பேற்றி ஒரு ஜாதி விறகால் 3 ஜாமம் எரித்து பின்பு காசை எடுத்து பழச் சாறில் போட்டு வெய்யிலில் வைக்க மெழுகு ஆகும். சகல வியாதிக்கும் கடுகளவு பனை வெல்லத்தில் கொடுக்க குன்மம் முதலிய சகல வியாதிகளும் நீங்கும்.

124. சாதிலிங்க கட்டு.

மைல் துத்தம் பூ நீர் உப்பு, பழைய புளி இவைகள் வகைக்கு பலம் 1 இதுகளைச் சேர்த்து நன்றாக அரைத்து சுத்தித்த லிங்க கட்டிக்கு கவசம் செய்து 7 சீலை மண் செய்து 12 எருவில் புடம் போடவும். புடம் ஆறி எடுத்துக கொண்டு பார்த்தால் லிங்கம் கட்டிப் போகும். எல்லா வியாதிக்கும் ஆகும்.

125. குகை அல்லது மூசை செய்கிற பாகம்.

உமிக்கரி, களிமண்ணு இரும்பு சிட்டம், வெள்ளைக் கல்லு தூள் இவைகள் சமமாக கூட்டி இடித்து அரைத்து ஆட்டி பாலில் விக வைத்த சணம்பு நாறுங் கூட்டி 2 ஜாமம் அரைத்து குகை செய்துக் கொள்ளவும். கெட்டியான குகை ஆகும்.

126. உணர்ந்த மூலிகையில் சார் எடுக்க.

ஒரு மூலிகைக்கு 8 பலம் ஜலம் வார்த்து 2 பலம் ஆக காய்ச்சி வற்ற வைத்த கஷாயத்தை எடுத்துக் கொள்ளவும்.

127. சார் வாரா மூலிகையில் சார் எடுக்க.

கொஞ்சம் பசுவின் பால் விட்டு இடித்து பிழிந்து எடுத்துக் கொள்ளவும்.

128. லிங்க வெள்ளை பற்பம்.

குப்பி லிங்கக் கட்டி பலம் 1, தேசி நீரால் 4 ஜாம் சுருக்கு கொடுத்து வெள்ளை எருக்கன் பாலில் போட்டு 3 நாளைக்கு பின் எடுத்து இப் பூரா இலை அரைத்து கவசம் செய்து தேங்காய் பிரமாணம் கவசம் இருக்க வேண்டும். சீலை மண் 7-ம் செய்து 50 எருவில் புடம் இடவும். எடுத்துக் கொண்டு அதற்குற்ற அநுபானத்திலிட அரிசியடை சுரம் சன்னி காச சுவாசம் இருமலுக்கும் கொடுக்கலாம். ~~1-க்கு அரிசியடை கொடுக்க கூடாது~~.

129. நெல்லிக்காய் கெந்தி பற்பம்.

கெந்தி பலம் 1, ஆட்டின் கல்லில் அரைத்த பில்லை செய்து உணர்த்தி பெருகலம் பிலை அல்லது வட்டக் கன்னியிலையை பொதிந்து கட்டி 6 எருவில் புடமிடவும், பற்பம் அநுபானம் நெய் பனைவிடை பற்பம் கொடுக்க மேகங்கள் தீரும்.

130. நெல்லிக்காய் கெந்தி சுன்னம்.

வெள்ளை பிரம தண்டின் பாலில் கெந்தி கட்டியை பிரட்டி மேற்கண்ட இலையை அரைத்த பில்லை செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து ஒரு மூடி சீலை மண் செய்து 3 எருவில் புடமிட சுன்னம். மேகாதி ரோகங்களுக்கு தாக்க பகரி போகும்.

131. நெல்லிக்காய் கெந்தி பற்பம்.

குப்பமேனியிலையும் சுண்ணாம்பும் கூட்டி அரைத்த குகை செய்து கெந்தியை வைத்து மேலும் அதால் மூடி 3 சீலை மண் செய்து 7 எருவில் புடம் பற்பம். மேகாதிகளுக்கு பனைவிடை வெண்ணையில் தாக்க தீரும்.

132. நெல்லிக்காய் கெந்தி செந்தூரம்.

சிறுமண் குடுவையில் 1 பலம் கெந்தி போட்டு நிரைய பழச் சார் விட்டு வாய் மூடி 7 சீலை மண் செய்து சிறு எருவில் 10 புடமிட செந்தூரம். நெய்யில் கொடுக்க மேகங்கள் தீரும்.

133. நெல்லிக்காய் கெந்தி பற்பம்.

குப்பை மேனியிலை அரைத்து குகை செய்து கெந்தியை வைத்து அது வால் மூடி உணர்த்தி ஒரு கலையத்தில் நாயுருவி சாம்பல் பாதியிட்டு அதின் மேல் கவசம் செய்து வைத்து மேலும் சாம்பல் நிரைய கொட்டி அமுத்தி கலையம் வாய் மூடி சீலை மண் செய்து அடுப்பில் வைத்து 2 ஜாமம் எரித்த ஆறி எடுக்க பற்பம்.

134. வாலை ரச செந்தூரம்.

அவயம் வைத்த கோழி முட்டைகளுக்குள் வாலை ரசம் தோலர் 6 போட்டு கெந்தி 2 குன்றுமணி போட்டு கரிசலாங் கன்னி சார் விட்டு மேற்கண்ட முட்டை ஓடுகளால் மூடி ஒரு [illegible] பானையில் அரை படி உப்பு போட்டு நடுவில் முட்டையை வைத்து அதன் மேல் அரை படி உப்பு போட்டு மேல் பானை மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி 4 ஜாமம் காடாக்கினியாக எரிய விட்டு ஆறிய பின் பானை தனை படுக்க வைத்து கவசத்தை நீக்கி மேல் பானைக்குள்ளிருக்கும் பதங்கத்தையும் முட்டையிலிருக்கும் ரசத்தையும் ஒன்றாய் சேர்த்து எடுத்து ஒரு சீசாவில் போட்டு கல் காய்ச்சிட்டு சீலை மண் செய்து உணர்த்தி வாலுகை* பானையில் மண் கொட்டி நடுவில் சீசா வைத்து மேலும் மணல் போட்டு மூடி 8 ஜாமம் காடாக்கினியாய் எரிக்கவும். ஆறிய பின் எடுத்து மறுபடி ஒரு சீசாவில் போட்டு

போட்டு 2 குண்டு மணி எடை கெந்தி போட்டு மேல் கண்ட சீசாவிலும் 2 குண்டு மணி கெந்தி போட்டு எரிக்கவும். பின்பு சீசாவின் வாய்க்கு கல் கார்க்கிட்டு 7 சீலை மண் செய்து முன் போல் 8 ஜாமம் எரித்து எடுத்து பார்த்தால் திரு லட்சுமியின் திருவாயின் இதழில் வெத்திலை முதலிய தாம்பலம் போட்டு ஏறின சிகப்பு வர்ணம் எவ்விதம் பிரகாசிக்கிறதோ அது போன்று கண்டவர்க்கும் உண்டவர்க்கும் வலி நீங்கும்.

135. வாலை ரசசெந்தூரம்.

வாலை ரசம் பலம் 4, நெல்லிக் காய் கெந்தி பலம் 1, இரண்டுங் கூட்டி கல்வத்திலிட்டு சிறு செருப்படைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து சிறு சுண்டைக்காய் பிரமாணம் உருண்டைகள் செய்து நிழலிலுலர்த்தி சீசாவில் போட்டு கல் கார்க்கு மூடி 7 சீலை மண் செய்து உலர்த்தி பானையில் மணல் கொட்டி சீசா வைத்து மேலும் மணல் கொட்டி மணலுக்கு மேல் அரை படி உப்பு கொட்டி அதன் மேல் கவசம் செய்த சீசா வைத்து மேலும் உப்பை அரை படி கொட்டி சீசா மறையும் படியிருக்க வேண்டும். அதன் பின்பு மணல் கொட்டி அடுப்பேற்றி முதல் 1 ஜாமம் கமலாக்கினியாய் எரித்த பின்பு 11 ஜாமம் காடாக்கினியாய் எரித்து அப்படி சுடு அடுப்பின் மீது விட்டு விட வேண்டும். குளிர்ந்து ஆறின பின் கவசத்தை பிரித்து தான தர்மம் அன்னதானம் பூஜை பாத்திரா செய்து எடுத்து பார்த்தால் செவ்வலரி பூ போல் செந்நிறமான செந்தூரமாயிருக்கும். அதை பணவிடை எடுத்து பரங்கி பட்டைச் சூரணத்தில் பத்து கலந்து கொடுக்கவும். 7 நாள் குன்மம் சுரி மேகம், பவுத்திரம், முதலிய சக ரோகங்களும் கொடுக்கலாம், தாது கட்டும். ~~புளியிலை~~ [புளி ஆகாது]. பால் நெய் ஆகும்.

135. ரச சுண்ணம்.

வாலை ரசம் பலம் 2, செவ்வாழைக் கிழங்குடன் ஒரு முழ நீளமுள்ளதாய் கொண்டு வந்து குருத்தை ஒரு சாண் வெட்டி போட்டு குருத்திலிருந்து கிழங்கு வரையில் தமரிட்டு அதில் மேற்கண்ட ரசத்தை விட்டு நீ ~~சுவல்~~ பொற்றலை கையாந்த கரை சார் விட்டு மேற்கண்ட இலையால் மூடி முக்கால் கெஜம் குழி வெட்டி எரு முட்டை 4 அங்குலம் இடுக்கி ஒரு ஒடு கொஞ்சம் குழியுள்ளதாய் வைத்து அதன் மத்தியில் வாழைக் கட்டையை நிற்க வைத்து அடியிலிருந்து நுனி வரையில் எரு முட்டை அடுக்கி புடமிடவும். ஆறி பார்க்க ஓட்டில் சுன்னம் உட்கார்ந்திருக்கும். எடுத்து வைத்துக் கொண்டு ஜாதிக்காய், ஜாதி பத்திரி இரண்டும் சூரணித்து அதில் ஒரு குண்டு மணி அளவு சுன்னத்தை கலந்து திரிகடி சூரணம் சாப்பிடவும். அல்லது மேற்கண்ட சூரணத்தை பாலில் பிசைந்து பால் தண்ணீரில் சரியாய் கலந்து சட்டியில் ஊற்றி காய்ச்சி நுனி வடி கட்டி அதன் மேல் சூரணத்தை வைத்து மேலும் சட்டியை கவுத்தி செய்து எரித்து எடுத்து நிதம் நிழலில் உலர்த்தி திரிகடி சூரணத்தின் குன்றி எடை சுன்னத்தை வைத்து சாப்பிடவும். 10,11 நாள் போதும், 9 நாள் 9 வேளை. 10 வது நாள் எண்ணெய் ஸ்நானம் செய்து செந்தூர பஸ்பங்களுக்கு புளி சத்துருவானதால் அரவே கூடாதென பெரியோர் தடுத்திருப்பதால் என்று அறியவும். நெய், பால், கரி மரக்கரிகள் யாவும் ஆகும். இச்சுன்னத்தால் போகா நோயும் முண்டோ இல்லை. மேகத்தால் பிறந்த நோய்கள் முழுதும் தீரும். தாது கட்டும். வாழைக் கன்று ஒன்றரை முழம் நீளம் உள்ளதாயும் கை தொண்டையாகவும் தேங்காய் பிரமாணம் கிழங்கு வுள்ளதாயும் இருக்க வேண்டும். கன்றின் நுனியில் ஒரு ஜாண் அளவு வெட்டி எறிந்து விட்டு அத்துளிரின் வழியாக கிழங்கு வரையில் ஓட்டை யிருக்க வேண்டும். அதில் மேற்கண்டபடி செய்தால் செய்தால் ஆகும். கை கண்டது.

137. ரச பற்பம்.

வாலை ரசம் பலம் 3, வெள்ளருகு சாறால் 5 நாள் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஒரு மூடி சீலை மண் செய்து 5 எருவில் புடம் அரிசியெடை பற்பம் பனை வெல்லத்தில் கொடுக்கவும். 3 வேளை 6 வேளை காலை மாலையும் கொடுக்கலாம். சுரம், ஜன்னி, மேக வாய்வு குன்மம் முதலியவை தீரும்.

138. ரச பற்பம் இருமலுக்கு.

வாலை ரசம் வீ 1, கெந்தி விராகன் 1 பொடித்து இரசத்தை விட்டு கலந்து அரைத்தால்

கருத்து போகும். பின்பு கொடி வேலி சார் விட்டு அரைத்து எடுத்து முட்டை ஓட்டுக்குள் போட்டு நிரைய கொடி வேலி சார் விட்டு முட்டை ஓட்டால் வாய் மூடி 7 சீலை மண் செய்து 50 எருவில் புடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு ஒரு அரிசி யெடை நெய்யில் குழப்பி இரண்டு வேளை கொடுக்கவும். மேற்கண்ட அரைப்பில் முட்டை ஓடும் ஒரு விராகன் போட்டு அரைக்கவும்.

139. ரச பற்பம்.

காளிப் பிரட்டை யிலை ஒரு பிடி குகையில் பரித்து அரைத்து அதில் ஒரு பலம் சுத்தை விட்டு அரைத்து வில்லை செய்து உணர்த்தாமல் ஓட்டில் வைத்து ஓடு மூடி 7 சீலை மண் செய்து எருவில் (8) புடம் போட பற்பம். அரிசியெடை வெண்ணெயில் நெய்யில் தேனில் கொள்ளவும். இச்சா பத்தியம், அண்ட வாய்வு, மேக வாய்வு, வயிற்றின் கீழ் கட்டி யிருந்தால் உளுந்து மாவு கோதுமை மாவு வெண்ணை போலரைத்து பூசவும். கட்டி தட்டிப் போகும்.

140. ரச பற்பம் குஷ்ட நோய்க்கு.

பால் துத்தம் தோலா 1 வெற்றிலைச் சார் தோலா 1 காட்டாமணக்கு பால் தோலா 1 கூட்டி அரைத்து மூசை செய்து மேல் மூடியும் அதனுல் ஒன்ற செய்து உணர்த்தி அதில் வாலை ரசம் தோலா 1 வெற்றிலைச் சார் தோலா 1 இவ்விரண்டையும் அரைத்து அப்படியே மூசையுள் போட்டு மேல் மூடி வைத்து விட்டு பின்பு இரண்டு தோலா வாளப் பருப்பும் 2 தோலசிசுக்கும் சேர்த்து அரைத்து பாதி தூள் ஒரு சிறு கலயத்தில் போட்டுஅதில் மேற்கண்ட மூசையை வைத்து மேலும் பாதி தூளைப் போட்டு கலயத்திற்கும் வாய் மூடி சீலை (7) மண் செய்து அரை கெஜ புடம் போடவும். பிரித்து எடுத்து வைத்துக் கொண்டு இரண்டு அரிசியெடை பற்பத்தை நெய்யில் கலந்து பாதி காலை, பாதி மாலை யாக வுண்ணவும். 3 நாள் புளி தள்ளி கடும் பத்தியம். பால் நெய் காிகளும் ஆகும்.

141. ரச பற்பம்.

மிதி பாகல் கிழங்கவி சாரால் 1 பலம் ரசத்தை அரைத்து பில்லை செய்து உணர்த்தி ஓடு மூடி 7 சீலை மண் செய்து 6 எருவில் புடமிட பற்பம், அரிசியெடை நெய்யில் மேகத்திற்கு கொடுக்கவும்.

142. ரச பற்பம்.

ஊசி பாலைச் சாற்றால் 1 பல ரசத்தை 2 நாள் அரைத்து பில்லை செய்து உணர்த்தி மேற்கண்ட இலையை அரைத்து கவசம் செய்து 7 சீலை மண் செய்து உணர்த்தி 5 எருவில் புடமிட பற்பம். மேற்கண்ட பற்பங்களின் அநுபானம் மேற்கண்ட நோவுகள் தீரும்

143. ரச பற்பம் கற்பமாம்.

விஷ முஞ்சிலை வேருடன் கொண்டு வந்து இடித்து சார் பிழிந்து திப்பியை எடுத்து உணர்த்தி இடித்து சூரணித்து பலம் 4 கட்டி சுத்தி செய்த ரசம் பலம் 4 கட்டி மல்லிகை பூ சாரால் 5 ஜாமம் அரைத்து பீங்கானில் போட்டு நல்ல தேனை விட்டு குழப்பி வைக்கவும். இந்த கற்பம் தினம் தினம் ஒவ்வொரு குன்று மணி அளவு சாப்பிட்டு வந்தால் திரேகம் இரும்பாய் கற்பதேகம் ஆகும். பலமுண்டாம். புஷ்டியாம். மேனி அழகாயிருக்கும். வியாதி அணுகாது. சர்வ ரோகங்கள்தீரும்.

144. ரச பற்பம்.

ஒட்டன் பில் என்றும் நாய் பில் என்றும் சொல்லுவார்கள். அப்பில்லை கொண்டு வந்து இடித்து சார் பிழிந்து திப்பியை வேறாக எடு வைத்துக் கொண்டு உப்பு மேற்கண்ட சாரால் அரைத்து விளாங்காயளவு மூசை செய்து மேற்கண்ட திப்பியில் 1 பலம் ரசம் போட்டு வெண்ணை போல் அரைத்து உருண்டையை மூசையில் போட்டு உப்பு பில்லையால் மேல் மூடி மேற்கண்ட பில்லின் திப்பியால் கவசம் செய்து 8 எருவில் புடம் இட பற்பம். மேகம் 20-களும் அரிசியெடை. 7, 9 நாள் கொடுக்கவும். புளி இல்லை.

145. நவசார பற்பம்.

ஒர பலம் கட்டியான நவாசாரத்திற்கு இஞ்சி சாரால் வெடியுப்பை அரைத்து கவசம் செய்து மேற்கண்ட சாரால் வளையலுப்பை அரைத்து கவசம் செய்த 7 சீலை மண் செய்து 15 எருவில் படமிட பற்பம். பனை வெல்லத்தில் 4 அரிசியெடை கொடுக்க குன் மம். மகோதரம் தீரும்.

146. ரச பற்பம்.

வாலை ரசம் வீ 5 ஒரு ஓட்டில் போட்டு அடுப்பில் வைத்து தைவேளைச் சாரர் நொச்சிச் சார் சமம் கூட்டி ரசத்தின் மேல் விட்டு விட்டு கிளரி கொடுக்கவும். பற்பம் அரிசியெடை கொடுக்கவும். முன் போல் பத்தியம் முதலியவையாம்.

147. ஆங்கார சஞ்சீவி செந்தூரம்.

அயப் பொடி, எக்கு பொடி, செம்பு பொடி, பித்தளை பொடி, வெங்காரம் ஊசி காந்தம் மனோசிலை அரிதாரம் ரசம் கெந்தி திப்பிலி இடங்கலம் வகைக்கு பலம் ஒன்று, சோற்று கத்தாழை சோற்றை போட்டு 3 நாள் அரைத்து சிறு சிறு பில்லை செய்து உலர்த்தி தாளாக்கி சானச்சில் பரப்பி மறு சானுக்கு மூடி வாய்க்கு சீலை மண் செய்து அடுப் பேற்றி 2 நாள் இராப் பகல் ஒரு ஜாதி விறகால் எரித்து ஆறி செந்தூரத்தை எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். குன்றி எடை செந்தூரம் இஞ்சி சாறில் கொடுக்க குன்மம், முருங்கை பட்டை சாற்றிலிட வாதம் 80-ம் சுரம் ஜன்னி முதலியவை தீரும். குஷ்டமம்.

148 ஆறுமுக செந்தூரம்.

சீர் பெருகும் ஆறு முக செந்தூர வெர்மைதனைச் செப்புதற் கெளிதாகுமோ
ஜெகம் புகழும் ரசமைந்து பலமேழு காந்தமும் சொல்லு மொன்பது கெந்தியும்
பார் புகழும் வெங்காரம் நிரை எட்டு மதியுப்பு பாங்கான நாலு பலமே
பட்சமுடன் அரப் பொடியும் முச்சிதம தாகவே பனிரண்டு பலமதாகும்.

தார் பெருகும் கத்தாழை சோறு விட்டரைத்து நீர் தாளி தனில் மூடி வைத்துச்
சாந்தமாய் சீலை மண்சேறு மதின் மேல் செய்து தரித் தெரித்தெடு நாலு நாள்
வேர் கொண்ட செந்தூரமாவதைப் பு நிரம் ஆகுமே யதை எடுத்து
இயலான திரிகடுகு தேனிலோர் பணவிடை யினியதாய் கொடுத்தருளவே.

அருளவே கோடான கோடி வினை யோடிடும் அண்ட விரை வாதவுடனே
யாறு வகை மூலமும் நீரு மொரு குன்மமும் அரகூரிக்குள் வரகூரியனைத்தும்
பரிவான வெடி குலைகிரந்தியோடு தோஷமும் பத்து வித வாத ரணமும்
பாங்கான திரு கெர்ப்ப ரோகமும் சோகையும் பற்று குடல் வாத ரணமும்

பாங்கான திரு கெர்பப ரோக்மும் சோகையும் பற்று குடல் வாத ரணமும்
மருள் வாத பித்தமும் சய ரோக மரையாப்பு மதிசார கிராணியோடு
மண்டநோயும் கண்ட மாலை யொடு அடை வாளை மாணிபுற்று யோனி புற்று
அருள் மேக ரோகமும் சிலையொடு பவுத்திரம் சுரோணிதச் சுரச் சூலையும்.
தேராத நோய் பலதும் வராது புவி மீது திகழறு முக செந்தூரமாமே.

149. இப்பாட்டின் விபரமாவது.

ரசம் பலம் 5, காந்தம் பலம் 7, கெந்தி பலம் 9, வெங்காரம் பலம் 8, இந்துப்பு பலம் 4 அய அரப் பொடி பலம் 12 கற்றாழை சோறு விட்டு அரைப்பு 3 நாள் பின்பு காசு போல் பில்லை செய்து உலர்த்தி பெரிய சானச்சில் மணல் பரப்பி அதன் மேல் ஆவாம் குத்திரை பரப்பி மேற்கண்ட பில்லைகளை பரப்பி அதன் மேல் ஆலம் குத்திரைப் பரப்பி அதன் மேல் மணல்பரப்பி மேல் ஒரு சானுக்கை மூடி சீலை மண் 7 செய்து அடுப்பேற்றி ஒரு ஜாமம் எரித்து விட்டு இந்த படி நாலு நாள் 4 ஜாமம் எரித்து

5-வது நாள் கவசத்தை பிரித்து செந்தூரம் எடுத்து வைத்துக் கொண்டு மேற்கண்ட அநுபானங்களில் செந்தூரம் பணவிடை கொடுக்க மேற்கண்ட ரோகங்கள் தீரும். இதில் மதியுப்பு, என பாட்டிலிருக்க விபரத்தில் இந்துப்பு என யிருக்கிறது. தாழியில் வைத்து எரிக்கும்படி சொல்லியிருக்க விபரத்தில் சாளுக்கில் வைத்து எரிக்கும்படி எழுதி இருக்கிறது. இதை அறிந்து செய்யவும்.

150. காரிய செந்தூரம்.

ஒரு சேர் காரியம் விளக்கெண்ணெயில் 7 தரம் உருக்கி சாய்த்து மண் பானை ஓட்டில் வைத்து பச்சை நாயுருவி குச்சிகத்தையாகக் கட்டிக் கொண்டு இக்கத்தையால் வருத்துக் கொண்டு வந்தால் பற்பமாகும். இப்பற்பத்தை முள்ளில்லாத ஆனை கத்தாழைச் சாரால் அரைத்து வில்லை செய்து 11 எருவில் புடம் போட்டு எடுத்து மேற்கண்ட சாரால் அரைத்து பில்லை செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து 3 சீலை மண் செய்து 12 எருவில் புடம். இந்த படி மேற்கண்ட சாரால் அரைத்து ஒவ்வொரு புடத்திற்கு ஒவ்வொரு எருவு அதிகப்படுத்தி 27 புடம் போட்டு எடுத்து வைத்துக கொண்டு குன்றி எடை திரிகடுகு லேகியத்தில் கொள்ள நெய் வெண்ணெயில் 7 நாள் கொடுக்கவும். குஷ்டம் முதல் மேகங்கள் யாவும் அத்துப் போம். புளி, மீன், பெண் வைத்தியம். செ.வெ. அநுபவம்.

151. காரிய செந்தூரம்.

சுத்தி செய்த் கருவங்கம் பலம் 1 மண் ஓட்டி போட்டு உருக்கி துத்தியிலையை பொடி பொடியாய் நறுக்கி போட்டு துத்தி கொம்பால் கிளறிக் கொண்டு வர வேண்டும். கிளறும் குச்சி ஒரு முழம் அளவுள்ளதும் கனமுள்ளதும் ஆக இருப்பதும் தவிர 25 குச்சிகள் எரிந்து போக வேண்டும். ஒவ்வொரு குச்சிக்கும் துத்தியின் பச்சையிலையின் பொடி ஒரு பிடி 2 பிடி போட்டு போட வேண்டும். கடைசியில் ஒரு பிடி தழை போட்டு வருத்து ஆன பின் எடுத்து வைத்துக் கொண்டு அதற்கு சரி சமனிடை வாலை ரசம் சேர்த்து இரண்டையும் கல் வத்திட்டு வெள்ளை எருக்கன் பால் விட்டு அரைத்து பில்லை செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து 7 சீலை மண் செய்து 10 எருவில் புடமிடவும். இந்த படி இன்னும் 4 புடம் போட்டு எடுத்து வைத்துக கொண்டு அரிசியெடை செந்தூரம் பசும் வெண்ணெயில் கொடுக்கவும். மேக வியாதிகள் தீரும். தேன் கொடுத்தால் க்ஷய இருமல், இரைப்பு வியாதிகள் தீரும்.

152. கருவங்க செந்தூரம்.

சுத்தி செய்த கருவங்கத்தை ஓட்டி போட்டு உருக்கி வேளையிலையைப் போட்டு அதின் குச்சியை கத்தையாக கட்டி கிளறிக் கொண்டு 4 ஜாமம் வருக்கவும். குச்சி தீய்ந்து எரிந்து விட்டால் வேறு ஒன்று கட்டிக் கொள்ளவும். வேண்டுமளவு செய்து கொள்ளவும். பின்பு இது எடுத்து வாலை ரசத்தை எடைக்குஎடை நிறுத்தி போட்டு மேற்கண்ட வேளை சாரால் நய்ய அரைத்து வில்லை செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து சீலை மண் செய்து 10 எருவில் புடம் போட செந்தூரம் ஆகும். இன்னும் 3 அல்லது 2 பூடமும் போட்டால் சரியான செந்தூரமாம். அநேக வியாதிகளுக்குக் கொடுக்கலாம்.

153. காரிய பற்பம்.

4 பலம் காரியத்தை 7 தரம் பிரண்டை சாத்தில் உருக்கி சாய்த்து ராவி கல்வத்திட்டு பொடுதலைச் சாரால் வெண்ணெய் போல் அரைத்து வில்லை செய்து ஒடு மூடி 5 சீலை செய்து கெஜ புடமிட பற்பம். அரிசியெடை நெய், வெண்ணெயில் கொடுக்கவும். மேகம் 21-ம் தீரும்.

154. காரிய பற்பம்.

காரியம் பலம் 1 வட்டமாக 8 பில்லை காய் களாக்கி பச்சை மஞ்சளும் குப்பமேனியிலையும் சமம் கூட்டி அரைத்து கவசம் செய்து தனிதனி ஒவ்வொரு பில்லைக்கு கவசம் செய்து 10 காட்டெருவில் புடம் போடவும். இந்த படி 7 புடம் போட பற்பம். அரிசியெடை அநுபானங்களில் கொடுக்க மேகம் 21-ம் குஷ்டம், க்ஷயம், இருமல்,

குன்மம் 7, 7 நாள் கொடுக்க போதும். புளியில் லை.

155. வெள் வங்க பற்பம்.

ஒரு பெரிய பானையில் 5 பலம் வெடியுப்பு போட்டு பரப்பி அதன் மீது வெள்வங்கம் பலம் 4 உள்ளங்கை அகலமுள்ள தாயிருக்க வேண்டும். அதை வைத்து அதன் மீது 5 பலம் வெடியுப்பு போட்டு அதன் மீது குமரிச் சோறு 2 சேர் போட்டு மறு பானை மூடி வாய்க்கு கெட்டியாக சீலை மண் செய்து அடுப்பேற்றி பானையின் மீது பெரிய கல்லொன்று வைத்து 2 விறகால் ஒரு ஜாமம் 4 விறகால் 2 ஜாமம் காடாக்கினியாய் 2 ஜாமம் எரித்து அடுப்பு ஆறி எடுக்க பற்பமாம். தீரும் வியாதி மேக வெள்ளைக்கு 7 நாள் அரிசியெடை கொடுக்கவும். நெய், வெண்ணை அனுபானம் மேகங்களெல்லாம் மாறிப் போகும். வெ.10-க்கு பத்து சமம்) வெடியுப்பு சம்பந்தமானதால் எரிக்கும் போது ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். ஒரு சமயம் வெடித்தால் ஆள் பைசல் ஆகிவிடும். மறைவு முதலியவைக் கட்டிக் கொண்டு எரிக்க நலம். அடுப்புக்கு பின் சுவரும் சுவருக்குப் பின்னுல் எரிப்பவனும் அடுப்புக்கு நேராய் சுவரில் அடுப்புக்குற்ற பெரிய துவாரம் செய்து அத் துவாரத்திலிருந்து விறகு எரிக்கவும்.

156. கருவங்க பற்பம்.

இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய் மாட்டு கோமியம் இதுகள் ஒவ்வொன்றில் 21 தரம் உருக்கி சாய்த்து கலவை திரவத்தை 2, 3, தரம் புதிது புதியதாய் வார்த்து சேர்த்து உருக்கி அதில் சாய்த்து வரவும். இந்த படி சுத்தி செய்த கருவங்கம் பலம் 1 தகடு தட்டி அகலமாக்கி அலரி இலையை தேங்காய் அளவு அரைத்து கவசம் செய்து 7 சீலை மண் செய்து கெஜ புடமிட பற்பமாம். பணவிடை தேனில், நெய்யில், வெண்ணையில் அனுபானம். மேகம் சொரி சிரங்கு, கண்ட மாலை பவுத்திரம் இருமல் சூலைமேதி அதிசாரம் முதலியவை தீரும்.

157. நாக செந்தூரம்.

சுத்தி செய்த நாகமது தூலங்கும் பலங்கள் நான்காகும்
நத்தச் சட்டியிலிட்டு நவிலக் கேள்
நாழி வெடியுப்பு நல்லோமஞ் சுக்கு மஞ்சள்
வாரிப் பொடி செஞ்சிட்டு வருத்து விடு
வாடாதே நாயுருவி வகையுடனே தூள் செய்து
கூட வரு நால் ஜாமம் குங்குமம் போலாம் பழச் சார்
போட்டு நால் ஜாமமரைத்துப் போடு புடம் முழமே
போட்டெடுத்த செந்தூரம் போற்றும் பணவிடையாம்
குட்டித் திரிகடுகின் சூரணத்திலூட்டக் கேள்
குன்மம் பெரு வயிறு கவிசையொடு கட்டிகளும்
ஜன்மம் விட்டு ஓடும் பார் சதிகார பிணிகளிலே
மூலம் போம் மேக வகை இருவத்தி ஒன்றுடனே
காலுங் கை எரிவுகளும் கானுதோடும் வேல் வழியே
மேகத் தடிப்பு குஷ்டம் விந்து நஷ்டம் வெள்ளையோடு
பாகத்தில் போய் பதுங்கும் பார்.

மேற்கண்ட நாகத்தை வருத்து முடிந்த பின் கல்வத்திட்டு பழச் சார் விட்டு 4 ஜாமம் அரைத்து சிறு பில்லைகள் செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் 3 செய்து முழப் புடம் போட்டு மறுபடியும் புடம் ஒன்று அல்லது இரண்டு புடம் போட செந்தூரமாம்.

158. நாக செந்தூரம்.

சுத்தி செய்த நாகம் பலம் 4 ஐ ஒரு ஓட்டில் போட்டு அடுப்பேற்றி 4 ஜாமம் நாயுருவியை துடப்பம் போல் கட்டி வைத்துக் கொண்டு வருக்க பற்பம் ஆகும். அதை கல்வத்திட்டு மேனிச் சாரால் வெண்ணெய் போல் அரைத்து பில்லை செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து சீலை மண் செய்து முழப்புடம் போடவும். இந்தபடி மேற்கண்ட குப்ப மேனிச் சாரால் அரைத்து 5 புடம் போட திவ்வியமான செந்தூரமாம். குன்று மணி செந்தூரம் தேனில் தொண்ட மேகம்

21-ம

159. சண்டமாருத செந்தூரம்.

லிங்கம் 16, பூரம்8, வீரம் 4, கெந்தி 4 ரச செந்தூரம் 2 ஆடு தின்னு மூலிச் சாரால் மும் மூன்று நாள் அரைத்து சிறு பில்லை செய்து நிழல் உணர்த்தி குப்பியில் போட்டு கார்க்கு மூடி 7 சீலை மண் செய்து உணர்த்தி ஒரு பானையில் 4 விரல் கனம் மணல் பரப்பி குப்பி வைத்து குப்பியின் வாய் மட்டுக்கு மணல் கொட்டி அடுப்பேற்றி ஒரு ஜாமம் வரையிற் விறகு 2 இரண்டு ஜாமம் வரையில் விறகு 4 மூன்று ஜாமம் வரையில் விறகு 5, 4 வது ஜாமம் காடாக்கினியாய் நெருப்பு மூட்டி காலையில் நெருப்பு ஆறின பின் கவசத்தைப் பிரித்து சீசாவை எடுத்து வைத்துக் கொண்டு அரிசியெடை பனை வெல்லத்தில் கொடுக்க 7,14,21 நாள் தின்னவும். வாதம், குஷ்டம், மேகம் க்ரி மேகம் முடக்கு வாதம், சன்னி சீரம் முதலிய சர்வ ரோகங்களும் தீரும்.

160. கல்நண்டு பற்பம்.

கல் நண்டு ஓடு தேவையான அளவ அரிசியின் காடியில் ஒரு நாள் ஊரப் போட்டு எடுத்து ஒரு கலையத்தில் போட்டு நிரைய கரிசலாங் கண்ணி சார் விட்டு ஒடு மூடி சீலை மண் 5 செய்து கெஜபுடமிட சுன்னம். பணவிடை சுன்னத்தை முலைப் பாலில் கொடுத்து வர இரும்பல் போம். உஷ்ன இருமலுக்கு பாதாம் பருப்பை அரைத்துப் பால் எடுத்து அதில் கொடுத்து வரவும் தீரும். சூட்டால் வரும் சுரத்திகு தேனில்கொடுக்கவும். வயிறு ஜீக்கு சூட்டின் கிராணி வெள்ளை விழுகிறதற்கும் மேகப் புன் இரத்த மூத்திரம் ரேத்த காசம் சொரி சிரங்கு தீர. பசு வெண்ணெயில் கொடுக்கவும். இன்னும் பல ரோகங்கள் அனுபான மறிந்து கொடுத்தால் தீரும். கடலி இருக்கும் கல் நண்டும் நல்லதே. ஆற்று கல் நண்டுகள் ஆகும். சிறு நண்டுகள் ஆகாது.

161. முத்து பற்பம் சுவாச நோய்க்கு.

முத்து அல்லது முத்து சிப்பியை சுத்தி செய்து குடுவையில் போட்டு கொஞ்சம் சதுரகள்ளி பால் விட்டு வாய் மூடி வாய்க்கு சீலை மண் செய்து ஒழப் புடம் இட பற்பம். இதை இஞ்சி யின் தனிச் சாற்றுல் அரைத்து கடலை பிரமானம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு நோய் கண்டவுடனே காலை மாலை ஒரு மாத்திரை முழுங்கி குளிர்ந்த ஜலம் குடிக் கவும். பருப்பு கிச்சடி செத்து நெய் விட்டு சாப்பிடவும். காரம் முதலிய பதார்த்தங்கள் உதவாது. இந்த படி 3 நாள் சாப்பிட்டு விட்டு விட வேண்டும். மறு மாதம் 3 நாள் சாப்பிட்டு விடவும். 3 வது மாதமும் 3 நாள் சாப்பிடவும். படுக்கும் போது பனை வெல் லத்தில் வைத்து முழுங்கி குளிர்ந்த ஜலம் சாப்பிடவும்.

162. சங்கு பாஷான பற்பம் முசுச் இருமலுக்கு.

ஒரு பலம் சங்கு பாஷான கட்டியை ஆடு தின்னா பாளை சாரில் 9 நாள் உருப் போட்டு ரவியில் வைக்கவும். சார் வற்ற வற்ற புதிய சார் ஊள்ளிக் கொண்டு வரவும். 10-வது நாள் ஒரு குண்டாவில் நாயுருவி சாம்பல் ஒரு படி போட்டு அமுத்தி அதன் மேல் மேற்கண்ட கட்டியை வைத்து மேலும் ஒரு படி சாம்பல் கொட்டி அமுத்தி அடுப்பேற்றி 3 விறகால் ஒரு சாதி விறகால் எரித்து வரவும். அதிலிருந்து தூ வாசனை வந்தால் உடனே இறக்கி ஆற வைத்து எடுத்து சீசாவில் வைத்துக கொண்டு மூச்சுபிளைப்பு இருடல் வியாதிக்கு இரவ தூங்கும் போது பனை வெல்லத்தில் அரிசியெடை வைத்து உண்ணவும். சுரம் ஜன்னிக்கு முலைப் பாலில் கொடுக்கவும். இஞ்சி சார் ஆகும்.

163. தங்க செந்தூரம்.

ஒரு விராக்ன் தங்கத்தை விரல் அகலம் தகடு தட்டி நிமாக்கி 7 துண்டு கத்தரித்து வெள்ளருகு சாற்றில் துவைத்து மேற்கண்ட இலை விளாங்காயளவு அரைத்து இரு பிளப்பாக்கி ஒரு பிளப்பில் மேற்கண்ட தகடுகள் வைத்து அதாவது ஒன்றின் மேல் ஒன்றுக வைத்து மறு பிளப்பால் மூடி நன்றுக உருண்டை செய்து ஒரே சீலை செய்து கொஞ்சம் உணர்த்தி 7 எரு வில் புடம் போடவும். இந்த படி 3 புடம் போட்டு அரைத்து வைத்துக கொண்டு காச சுவாச இருமலுக்கு அரிசியெடை நெய்யில் கொடுக்கவும். தாது புஷ்டியுண்டாம்.

164. தங்க செந்தூரம்.

தங்க ரேக்கை நறுக்கி கல்வத்திட்டு சங்கன் கொளுந்து சாரால் வெண்ணெய் போல் அரைத்து வில்லை செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து சீலை மண் 3 செய்து முழப் புட மிடவும் இந்த படி 3 புடம் போட வேண்டும். 3-வது புடம் கெஜ புடம் போடவும். செந்தூரம் அரிசியெடை முன் போல் அநுபானத்திலிட அநேக வியாதிகள் நாசம் செய்யும்.

165. தங்க பற்பம்.

தங்கம் வீ 1 அரைக்கால் ருபாயிடை கனம் தகடாய் தட்டி செகப்பு முள்ளி கீரை தண்டை வெட்டி நார் உரித்து நீக்கி விட்டு உள் சோற்றையும் சுரண்டி நீக்கி விட்டு அரைத்து விளங்காய் பிரமாணம் செய்து இரு பிளப்பாய் ஆக்கி ஒரு பிளப்பின் நடுவில் அஞ்சனக்கல் தூள் போட்டு பரப்பி தகடு வைத்து மேலும் கொஞ்சம் அஞ்சனக் கல் தூள் போட்டு மறு பிளப்பை வைத்து மூடி சீலை மண் செய்து முழப் புடமிடவும். வெள்ளையாகும். நெய்யில் அரிசியெடை போட்டுக் கொடுக்கவும். 3 நாள் 3 வேளை காசு, சுவாச, இருமல் தீரும். தாது விர்த்தியுண்டாம்.

166. தங்க செந்தூரம்.

தங்க ராவு பொடியாவது ரேக்கையாவது மணல் போல் நருக்கி மஞ்தக்காளி சாரில் ஊரப் போட்டு மறு நாள் எடுத்து கல்வத்திட்டு அரைத்து பில்லை செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து சீலை மண் செய்து உணர்த்தி முழப் புட மிடவும். பற்பமாம். தேனில் அரிசியெடை கொள்ள காசம், சுவாசம், கசை முதலிய பல ரோகங்கள் தீரும்.

167. வெள்ளி பற்ப முறை.

பழைய ருபாய் வெள்ளியை தகடாய் செய்து எலுமிச்சன் சாரில் 120 தரம் காய்ச்சி தவைத்து வெட்டை யாக்கி மருதாணி பட்டை தேங்காய் அளவு அரைத்து கவசம் செய்து 3 சீலை மண் செய்து கெஜபுடம் இடவும் பற்பமாம். அரிசியெடை முன் பற்ப முறைகளில் உ உள்ளது போல் ஆகும்.

168. வெள்ளி பற்பம்.

வெள்ளி ராகு பொடியை கல்கோவை சாரால் 3 நாள் ஊர அரைத்து பில்லை செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து ஒரு மூடி சீலை மண் செய்து கெஜபுடமிட பற்பம். அரிசி யெடை நெய், தேன் வெண்ணை அநேக ரோகம் தீரும்.

169. வெள்ளி பற்பம்.

வெள்ளி தகட்டை காட்டு ததவளம் அரைத்து கவசம் செய்து 50 எருவில் புடம் போட்டு மேற்கண்ட தகட்டை பழச் சாற்றில் 30 தரம் காய்ச்சி தவைத்து வில்வக்காய் சோறும் வெள்ளை அலரி பூவும் சமம் சேர்த்து அரைத்து கவசம் செய்து 3 சீலை மண் செய்து 40 எருவில் புடம். இந்த படி 3 புடம் போட்டு எடுக்க பற்பம். முன் சொன்னது போல் பல வியாதிகள் தீரும். தாது விர்த்தி அதிகரிக்கும்.

170. வெள்ளி பற்பம்.

சிகப்பு முள்ளி கீரை சாற்றில் 30 தரம் சிவக்க காய்ச்சி தவைத்து மேற்கண்ட கீரையை அரைத்து கவசம் செய்து சீலை மண் 3 செய்து முழப்புடமிட பற்பம். மேற்கண்ட முள் கீரை செடி ஏக சமுலத்துடன் சுட்டு சாம்பலாக்கி தண்ணீரில் கலக்கி தெளிந்த பின் தெளி விருத்தி காய்ச்சி குழம்பு பதத்தில் பீங்கானில் ஊற்றி ரவில் வைத்து உணர்த் எடுத்து 2½ தோலா உப்பு போட்டில் ஓட்டில் போட்டு பரப்பி அதன் மேல் மேற்கண்ட பற்பம் மேற்கண்ட சாரால் அரைத்து பில்லை செய்து உணர்த்தி வைக்கவும். மேலும் இரண்டரை தோலா உப்பு போட்டு ஒரு மூடி சீலை மண் செய்து முழப்புடமிட சுன்னமாம். அதிக கார முடைய பர்ற சுன்னமாம். இது புலியைக் கண்ட ஆடு போல் அநேக ரோகங்கள் நடு நடுங்கி ஓடிப் போம்.

172. வெள்ளி பற்பம்.

வெள்ளை பிரம தண்டின் இலை சாரில் வெள்ளி தகட்டை சிவக்க காய்ச்சி 105 தரம் துவைத்து வெட்டையாக்கி மேற்கண்ட இலை அரைத்து கவசம் செய்து ஓட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் செய்து 150 எருவில் புடமிட பற்பமாம். இப்பற்பம் ஞுத நீர் வாங்கும். அநேக ரோகங்கள் நீங்கும். அரிசியெடை.

172. வெள்ளி பற்பம்.

வெள்ளை தாமரை இலை சாற்றில் 100 தரம் சிவக்க காய்ச்சி துவைத்து பொடியாக செய்து ராவி குட்டிபெலா பாலால் அரைத்து வில்லை செய்து உணர்த்தி புளியம் பட்டை சாம்பல் ஒரு ஓட்டில் போட்டு அதன் மேல் வில்லையை வைத்து மேலும் சாம்பல் கொஞ்சம் போட்டு ஓடு மூடி சீலை மண் செய்து உணர்த்தி கெஜபுடமிட பற்பம். காரமுறைய பற்பமாம். விஷ மேற்கண்ட அநுபானங்கள் தான்.

173. வெள்ளி பற்பம்.

வெள்ளை நீர் முள்ளியிலைச் சாறால் வெள்ளி ராகு பொடியை அரைத்து வில்லை செய்து உணர்த்தி ஓட்டில் வைத்து சீலை மண் செய்து கெஜபுடமிட பற்பம். மேற்கண்ட சாரில் 100 தரம் காய்ச்சி துவைத்தால் வெட்டையாம். அவ்வெட்டையை அப்படியே மேற்கண்ட இலை அரைத்து கவசம் செய்து புடமிட்டாலும் சரி, அல்லது ராவு பொடியாக மேற்கண்ட வெட்டையை செய்து அல்லது ஓடைத்து நசுக்கி தூள் செய்து மேற்கண்ட சாரால் அரைத்து வில்லை செய்து உணர்த்தி மேற்கண்ட இலையை கவசம் செய்து ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் 3 செய்து கெஜபுடம் பற்பம். முன போல்.

174. வெள்ளி பற்பங்கள் செய்யும் விவரங்கள்.

வெள்ளி தகட்டை சிவக்க காய்ச்சி அந்தந்த முறையிலுள்ள படியான இலை சார்களிலாவது பழச் சார்களிலாவது துவைக்க வேண்டும். அப்படி துவைக்க துவைக்க தகடுகளோ ருபாய்களோ வெட்டையாய் விடும். சரியான வெட்டையானல் தான் சீக்கிரம் ஒரு புடத்திலாவது 2 வது புடத்திலாவது 3 வது புடத்திலாவது பற்ப செந்தூரங்கள் ஆம். வெட்டையில்லாமல் ரூபாயோ தகடாகவோ வைத்து புடம் போட்டு பஸ்பமாக்குவது மூலிகைகளின் காரங்களை பொருந்தியது. துவைக்கும் சார்கள் 10 தரம் துவைத்த பின் ஊற்றிவிட வேண்டும். புதிய சார் வார்த்து வைத்துக் கொண்டு அதில் துவைக்க வேண்டும். அந்தந்த முறையிலுள்ள பச்சிலையின் சார் வார்த்து அரைக்க வேண்டும். வில்லை செய்து உணர்த்த வேண்டும். பச்சிலைகளை அரைத்து தேங்காயளவு முத்தையாக பிசுக்க வேண்டும். அதினுள் வைத்து உருண்டை பிடித்து சீலை மண் செய்து புடமிட வேண்டும். சரியாக பற்பம் ஆகா விட்டால் 1,2 புடம் அதிகமாய் வெண்ணை போல் அரைத்து புடமிட பஸ்பமாய் விடும். தவறாமல் அநுபோகிகள் எப்படியாவது செய்து முடித்துக் கொள்வார்கள். புடம் அதிகமாய் போடுவதால் பற்ச செந்தூரங்கள் மூலிகைகளின் சக்தி சேர்ந்து அதிக கார முண்டாகும். மேலும் எவ்வித விகற்பங்கள் இருப்பினும் நீங்கி அமிர்த குணங்கள் வுண்டாம். இந்த பற்பங்களில் ஞுதத்தை வெண்ணெய்யாகுவக்கும். நீர் வாங்குபவைகளுமுண்டு. நீர்வாங்கின வெள்ளியை பஸ்பமாகாது. செந்தூரமாவது செய்தால் மேற்கண்ட வெள்ளி பற்பங்கள் விட அதிக சிரேஷ்டமானதாகும் என்ற அறியவும்.

175. வெள்ளி மெழுகு.

வெள்ளி ராகு பொடி பலம் ½, உயர்ந்த லிங்கம் பலம் ½, இரண்டையும் ஒன்றாய் கல்வத்திலிட்டு முலைப் பாலால் 3 நாள் அரைத்து வில்லை செய்து நெருப்பில் நன்றாக வாட்டி நெருப்புக்கு படாமல் காட்டி பின் உணர்த்தி மறுபடியும் கல்வத்திட்டு முலைப்பாலில் 3 நாளாட்டி வில்லை செய்து இருப்பில் காட்டி வாட்டி உணர்த்தி கல்வத்திட்டு முலைப்பாலில் 3 நாள் அரைத்து வில்லை செய்து முன் போலவே நெருப்பில் வாட்டவும். இதே போல் 5 தரம் செய்து 5 தரம் வாட்டி எடுக்கவும். இத்துடன் ஒரு தோலா வாலை ரசம்

சேர்த்து முலைப் பாலில் 6 நாள் அரைத்து ஆயிரம் மாத்திரை செய்து தூளை சுத்தி கொளுத்தி ஆறிய பின் மறுபடியும் கல்வத்திலிட்டு முலைப் பாலில் அரைத்து ஆயிரம் மாத்திரை செய்து துணி சுத்தி கொளுத்தி விடவும். இந்த படி 5 தரம் செய்த பின்பு 10 பலம் வெள்ளை பூண்டு சார் எடுத்து அதில் சுத்தி செய்த வெள்ளி பாஷாணம் மொச்சக்கொட்டை அளவு தூள் செய்து போட்டு கலக்கி அதில் மேற்கண்ட மாத்திரைகளை அரைத்தூளாக்கி போட்டு கலக்கி அடுப்பின் மீது வைத்து நெருப்பின் அனலாலேயே பதமாக கிண்டி மெழுகு போல் வரும் பதத்தில் இறக்கி சீசாவில் வைத்துக் கொள்ளவும். அரிசியெடை மெழுகை வாயில் போட்டு ஜலம் விட்டு முழுங்கவும். சர்வ வியாதியும் போம். தாது கட்டும்.

176. தங்க மெழுகு.

முதல் தரமான பவள மணி ஒரு தோலா வாங்கி உத்தா மணி பால், 3 நாள் போட்டு பிரட்டி அப்படியே உலர்த்தி வைத்து வெள்ளெருக்கன் பாலால் 3 நாள் பிரட்டி உலர்த்தி முயல் இரத்தத்தால் 3 நாள் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து ஒரு மூடி சீலை மண் செய்து உலர்த்தி குழி வெட்டி கெஜபுட மிடவும். சுண்ணமாம். பின்பு குன்று மணி எடை தங்கம் மூசையில் போட்டு உருக்கி கண் விட்டு ஆடும் போது மேற்கண்ட சுண்ணத்தை கொடுத்து பிரண்டை தூண்டால் கிளறி கிளறி கொடுக்கவும். அப்போது மெழுகு ஆகும். அதை எடுத்துவைத்துக் கொண்டு இம்மெழுகை குன்றுமணி அளவு எடுத்து பாலில் போட்டு கொடுக்கவும். 7 நாள் சாப்பிட சகல ரோகங்களும் நீங்குவதும் தவிர தாது விர்த்தி அதிகமாகும்.

177. தங்க ரச பற்பம்.

தங்கமும், வாலை ரசமும் சமமாய் கூட்டி உப்பிலாங் கொடி சாராலரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து ஒரு மூடி 7 சீலை மண் செய்து முக்கால் கெஜ புடமிட பற்பம். அரிசியெடை பதாம் எண்ணெயில் கலக்கி கொடுக்கவும். இருமல் சுவாச காசம் ரத்த வாந்தி முதலியவைகளும் தீரும். தாது கட்டும்.

178. வெள்ளி பற்பம்.

ஒரு தோலா வெள்ளி தகட்டை பழச் சார் கொள்ளை வேக வைத்த சார் நல்லெண்ணெய் இந்த மூன்றிலும் தனித்தனி சாரில் 7 தரம் நெருப்பில் சிவக்க காய்ச்சி துவைக்கவும். ஒவ்வொன்றில் 7 தரம் காய்ச்சி துவைத்த பின் வெள்ளை சாட்டரணை வேரை அரைத்து கவசம் செய்து முழப் புடமிட பற்பம். முன் பற்பங்களின் அனுபானம்.

179. ஜாதிக்காய் பற்பம் இடுப்புவலி நீங்கும்.

ஜாதிக்காய் பலம் 4, நல்ல துளசியிலை தோலா 3 இதை இடித்து முட்டை ஓட்டுக்குள் போட்டு மேற்கண்ட முட்டைகளை தொப்பி போல் மூடி செம்மண்ணால் 3 சீலை மண் செய்து உலர்த்தி 30 எருவில் புடமிட பற்பம். கவசம் நீக்கி அரைத்து வைத்துக் கொண்டு பணவிடை பற்பம் வெண்ணெயில் கொடுக்க இடுப்பு வலி நீங்கும்.

180. தாளக பற்பம் இருமலுக்கு.

சுத்தி செய்த தாளகம் பலம் 10 சுத்தி செய்த அண்ட ஒடு பலம் இது இரண்டும் கூட்டி கல்வத்திட்டு பழச் சாரால் அரைத்து பில்லை செய்து உலர்த்தி 10 எருவில் புடம் மிட பற்பமாம். ஓட்டில் வைத்து ஒரு மூடி 7 சீலை மண் செய்து உலர்த்தி 10 எருவில் புடமிடவும். குன்றுமணி இடை தேன் அநுபானம் ஈளை இருமல் தீரும். காசமும் தீரும்.

181. தாளக பற்பம்.

புளியங் சாம்பல் ஒரு தோண்டியில் பாதி போட்டு அமுத்தி சுத்தி செய்த தாளகம் ஒரு கட்டியை வைத்து மேலும் சாம்பல் நிரைய கொட்டி அமுத்தி அடுப்பேற்றி ஒரு ஜாதி விறகால் எரித்து வரவும். தோண்டியை கை விரல்களால் தட்டி கொட்டி பார்த்தால் வெங்கல சப்தம் வந்தால் பதமே தோண்டியை இறக்கி ஆற வைத்து பிரித்து தாளகத்தை எடுத்து அரைத்து வைத்துக் கொண்டு அரிசியெடை தேனில் அல்லது வெத்திலை சாறில் கொடுக்க

கொடுக்க காச சுவாசம் முதலானது போகும். புளியில் லே. தோண்டி என்பது பட்டன படி 2 கொள்ளும்படியானதாகும்.

182. தாளக பற்பம்.

சுத்தி செய்த ஒரே கட்டி 2 பலம் தாளகத்தை சாணியை தேங்காய் போல் குகை செய்து பாதியில் புளியஞ் சாம்பல் போட்டு அமுத்தி தாளக கட்டியை வைத்து அதன் மேல் சாம்பல் கொட்டி நன்கு அமுத்தி அதன் மேல் மற்ற பாதிசனி குகையை பொருந்த வைத்து 7 சீலே மண் செய்து உடனே 60 எருவில் புடமிடவும் பஸ்பமாம். அரிசியெடை தேனில் வெத்திலை சாரில் கொடுக்க காசம் சுவாச காசம் சுரம் முதலியன தீரும்.

183. தாளக பற்பம்.

ஒரு சட்டியில் நாயுருவி சாம்பல் பாதி போட்டு அமுத்தி அதன் மேல் சுத்தி செய்த தாளக கட்டியை வைத்து மேலும் சாம்பல் கொட்டி அமுத்தி வாய்க்கு மேல் மூடி சீலே மண் செய்து கெஜபுடமிடவும். பற்பம் முன் போல் அநுபானம்-முன் முறைப்படி சட்டியில் வைக்கவும்.

184. தாளக சுன்னம்.

ஒரு கலயத்தில் புதிதான வெந்த சுண்ணக் கல் பாதி போட்டு மேல் தாளகத்தை வைத்து மேலும் சுண்ணக் கல் போட்டு பனங்கள்ளாவது தேசி நீராவது ஊற்றி கொதித்து அடங்கின பின் அடுப்பேற்றி சிறு தீயாய் ஒரு மணி நேரம் கொதித்த ஆன பின் சட்டியை இறக்கி ஆறின பின் தாளகத்தை எடுத்து சுடு நீரில் கழுவி எடுத்து முன் இச போல் கலயத்தில் சுண்ணக் கல் போட்டு தாளகம் வைத்து சுண்ணக் கல் கொட்டி மேற்கண்ட நீரால் நீற்றி விடவும். கொஞ்சம் அடுப்பிலும் வைத்து எரித்து சட்டியை இறக்கி ஆற வைத்து தாளகத்தை எடுத்து முன் மாதிரி செய்யவும். இந்த படி இந்த 7 தரம் செய்து சுடு நீரில் கழுவி உளர்த்தி எடுத்துக் கொள்ளவும். நல்ல சுத்தியாச்சுது. (கிளிஞ்சல் ஜயநீர்) உயிருடன் கிளிஞ்சல் கொண்டு ஒரு பீங்கான் தட்டில் ஒவ்வொரு கிளிஞ்சல் வாயிலும் கற்பூரம் பொடித்து போட்டு வைத்து விடவும். அதிலிருந்து நீர் வடிந்து இருக்கும். அந்நீரை சீசாவில் ஊற்றி வைத்துக் கொண்டு தாள கட்டிக்கு இந்நீரால் 4 ஜாமம் சுருக்கு கொடுக்கவும். பின்பு பொற்றலே கையாந்த கரை அறுத்து வந்து அரைத்து தேங்காயளவு எடுத்து அதில் நடுவல் தாளகத்தை வைத்து சீலே மண் 7 செய்து கொஞ்சம் மேல் பாகம் உளர்ந்த பின் ஒரு பள்ளம் தோண்டி அதில் 4 படி பச்சை நெல்லு உமி கொட்டி அதன் மேல் மேற்கண்ட கவசத்தை வைத்து அதன் மேல் 4 படி உமி கொட்டி அதன் மேல் நெருப்பு வைத்துவிடவும். இந்த உமி புடம் ஆறின பின் கவசத்தை பிரித்து தாளகத்தை பார்த்தால் பற்பமாயிருக்கும். அரிசியெடை எடுத்து நெய், தேன் வெண்ணெய் அநுபானங்களில் கொடுக்க காச, சுவாச இருமல் சுரம் முதலியவை நீங்கும். இது சுன்னமாகும். பாடு அதிகம் ஆனாலும் பாடுக்கு தக்க பலன் உண்டு. கை கண்டது.

185. தாளக பற்பம்.

சுத்தி செய்த ஒரே கட்டியான தாளம் ஒரு பலம் எடுத்து கமுதை நீரால் ஒரு ஜாமம் சுருக்கு கொடுத்து தவசு முருங்கை சாரில் ஒரு ஜாமம் சுருக்கு கொடுத்து பின் சுருக்கு கொடுத்த ஓட்டை சாய்த்து வைத்தால் தாளகத்தின் எண்ணை வடியும். தாளகத்தை எடுத்துக் கொண்டு குத்திரிலே அரைத்து கவசம் கட்டி சீலே மண் 3 செய்து சட்டியில் மணல் கொட்டி கவசம் வைத்துமேலும் மணல் கொட்டி அடுப்பேற்றி 10 நாழிகை வரையில் எரிக்க ஒரு ஜாதி விறகால் எரிக்கவும். அதாவது ஆவாரம் விறகால் எரிப்பது பகு நல்லது. அநுபானம் முன் முறைப்படியாம்.

186. தாளக கட்டு.

கால் தோலா தாளகத்தை 3 நாள் பனங் கள்ளில் ஊரப் போட்டெடுத்து கருவூமத்தின் காயுள் வைத்து 7 சீலே மண் செய்து 5 சிறிய எரு வில்புடம் போடவும். இன்னொரு

தரம் கையில் வைத்து படம் போடவும். கட்டுபட்டு போகும். அதை எடுத்து கல்

பனை வெல்லத்தில் போட்டு அரைத்து 6 குளிகை செய்து 6 நாள் 6 மாத்திரை கொடுக்கவும். மூச்சு இருமல் சுரம் தீரும்.

187. கோதந்தி அரிதார பற்பம்.

கோதந்தி அரிதாரம் பலம் 1 மாவே போலரைத்த வேப்பம்பூவிலை சாரால் அரைத்து அல்லது 2 தோலா சார் வார்த்து பிசைந்து ஒரு வில்லை செய்து உளர்த்தி மேற் கண்ட இலை அரைத்து 2 அடை செய்து ஒரு அடையில் மேற்கண்ட தாளக பில்லை வைத்து மேலும் மறு அடை வைத்து மூடி ஒட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் செய்து காடெருவில் உமியும் கலந்து முழப்புடமிட பற்பம் ஆகும். 2 அரிசியெடை தாமரை பூ சாற்றில் போட்டு கொடுக்க பழைய சுரம் இரத்த காசம் இருமல் சுவாச காசம் இரத்த மூலம். பெண்கள் மாதவிடைக்குப் பின் வருகிற ரத்த கிருச்சனமும் தீரும்.

188. தாளக பற்பம்.

அரசம் பட்டை சாம்பல் ஒரு சட்டியில் பாதி போட்டு அமுத்தி அதில் சுத்தி செய்த தாளகம் வைத்து மேலும் படி சாம்பல் போட்டு அமுத்தி 2 ஜாமம் எரித்து ஆறிய பின் தாளகத்தை எடுத்து குப்பமேனி இலை தேங்காய் அளவு அரைத்து அதனுள் வைத்து உருண்டையாய் பிடித்து சீலைமண் 7 செய்து முழப்புடமிட பற்பம். அரிசியெடை வெண்ணை நெய், தேன் முதலிய அநுபானம் மேற்கண்ட ரோகம் யாவும் தீரும். தாளகத்தை ஜய நீரால் சுருக்கு கொடுத்து கட்டி மேற்கண்ட தசும கவசம் செய்து புடம் போட்டுக் கொள்ளலாம்.

189. தாம்பிர பற்பம்.

ஒரு சான் நீளமும் ஒரு அடி சுற்றளவுள்ள புளியங்கட்டையை நடுவில் துளைத்து அதில் பாப்பார் முள்ளியிலை அரைத்து வைத்து அதினுள் சுத்தி செய்த பழைய காசை வைத்து அதன் மேல் மேற்கண்ட இலை அரைத்து வைத்து ஒட்டையை ஆப்படித்து பிசித்து 7 சீலை மண் செய்து கெஜ புடமிடவும். பின்பும் பெரு மரத்துப் பட்டையை பஞ்சு போல் நசுக்கி சுத்தி செய்த காசு வைத்து சீலை மண் செய்து கெஜபுடம் போட பற்பம். அரிசியெடை தேன், வெண்ணை, நெய் சகல ரோகங்களுக்கும் கொடுக்கத் தீரும்.

190. தாம்பிர ஜெய பற்பம்.

சுத்தி செய்த தாளகம் பலம் 1, மண்டைஓட்டின் தூள் பலம் 1, பழச்சாரால் அரைத்து குன்றிமணி அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு சுத்தி செய்த தாம்பிரம் பலம் 1 மூசையிலிட்டு உருக்கி மேற்கண்ட மாத்திரை ஒவ்வொன்றும் கொடுத்து கோவாடிக் கொண்டே மாத்திரைகள் முழுதும் உருக்கு முகத்தில் கொடுத்து விடவும். பின்பு மேற்கண்ட தாம் பிரத்தை எடுத்து கல்வத்திலிட்டு பொடித்து மை போலரைத்து வீரம் பலம் கால் பூ நீர் பலம் கால் கூட்டி வெள்ளெருக்கன் பாலால் அரைத்து வில்லை செய்து உளர்த்தி ஓட்டில் வைத்து ஒடு

மூடி சீலை மண் 7 செய்து முழப் புடமிடவும். அதை எடுத்து கல்வத்திலிட்டு விராகன் ஒன்று வாலை ரசம் விட்டு முலைப் பாலால் அரைத்து வில்லை செய்து உளர்த்தி ஒட்டில் வைத்து சீலை செய்து 34 எருவில் புடம் போட திவ்வியமான பற்பமாம். அரிசியெடை அரிசி கஞ்சியிலாவது வாழை பழத்திலாவது கரும்பின் சாராலாவது கொடுக்க குஷ்டம் முதல் சகல ரோகங்களும் தீரும்.

191. ஒரு தாம்பிர பற்பம்.

சுத்தியான தாம்பிர தகட்டுக்கு ஒரு தோலா காளகந்தகம் தேய்த்து விட்டு அரைத்து பூசி உளர்த்தி ஒட்டில் வைத்து சீலை மண் செய்து 50 எருவில் புடம் போட்டு எடுத்து பழச் சாரால் அரைத்து வில்லை செய்து உளர்த்தி ஒட்டில் வைத்து சீலை மண் செய்து 50 எருவில் புடம் போட திவ்வியமான பற்பம். இதை எடுத்து கல்வத்திலிட்டு வீரம் வீ 1, பூரம் வீ 1, போட்டு பழச்சாரலரைத்து பில்லை செய்து உளர்த்தி ஒட்டில் வைத்து சீலை மண் செய்து உளர்த்தி 34 எருவில் புடமிடவும். ஆக புடம் 5 ஆன பின் எடுத்து வைத்துக் கொண்டு அது

அநுபானங்களில் கொடுக்க சகல வியாதிகளும் தீரும். குருவும் ஆம்.

192. தாம்பிர பற்பம் குஷ்டம் தீர.

பழைய தட்டு எடுத்து வெள்ளை நீர் முள்ளியிலை அரைத்துக் கொண்டு வில்லை செய்து ஒரு வில்லையின் நடுவில் தட்டை வைத்து அதன் மேல் மறு வில்லையை வைத்து சுற்று ஓரம் சந்து இல்லாமல் பிடித்து சீலை மண் 5 செய்து முழப்புடமிடவும். கருப்பாயிருக்கும். அந்த கருப்பை நீக்கி விட்டு தகடு தட்டி பொடியாக நறுக்கி அல்லது ராவி மேற்கண்ட சாரில் 2 நாள் ஊரப் போட்டு மேற்கண்ட இலையை அரைத்து குகை செய்து அதில் போட்டு அத்தழையால் மூடி 7 சீலை மண் செய்து கெஜபுட மிடவும். வெண்மையான பற்பமாம். இதை அரிசியெடை 5 பலம் நெய்யில் கலக்கி கொடுக்கவும். 18 குஷ்ட ரோகமும் தீரும் வாழைப் பழத்தில் அரிசியெடை வைத்தால் கல் போலாகும். இது பரிக்ஷையாம். புளி இல்லை. நெய், பால் அதிகம் உண்ணவும். வெ.அரிசி எடை.

193. தாம்பிர பற்பம்.

பழைய தட்டை வெள் வேலன் பட்டை சாற்றில் 7 தரம் சிவக்க உருக காய்ச்சி தோய்க்கவும். பின்பு நேர் வாள பருப்பு தோலா 12, சேராங் கொட்டை தோலா 12 இரண்டும் நய்ய இடித்து உருண்டை பிடித்து அதன் உருண்டைக்குள் தாம்பிர தட்டை வைத்து அழுத்தமாய் உருண்டை பிடித்து அதன் மேல் 12 தோலா எடையில் வெள் வங்க கடால் கிண்ணம் 1 வேறு 12 தோலாவில் கிண்ணம் ஒன்று செய்து அக்கிண்ண மொன்றில் மேற்கண்ட உ உருண்டையை வைத்து சரியாய் அழுத்தி மறு கிண்ணம் மூடி வெண்மை பழமையான துணிகள் வீசை 1 மேற்கண்ட உருண்டைக்கு சுற்றிய பின்பு காற்றேறு யிடத்தில் பத்த வைத்து விடவும். ஆறிய பின் எடுத்து பார்க்க வெண்மையான தாம்பிர பற்பம். பிரமாணம் இம்பு, கேழ் வரகு. தீரும் வியாதி குஷ்டம் முதலியவை. அநுபானம் நெய் மேல் வேலைக்கும் ஆம்.

194. தாம்பிர பற்பம்.

பழைய காசை கொடி எட்டியிலை அரைத்து கவசம் செய்து 7 சீலை மண் செய்து கெஜபுடமிட பற்பம்.

195. தாம்பிர பற்பம்.

பழைய காசை புழச் சாரில் 21 தரம் சிவக்க காய்ச்சி தோய்த்து பின் குட்டி பிலா பாலில் 3 நாள் பிரட்டி சிறு பூனைப்பு தேங்காய் அளவு அரைத்து அதின் நடுவில் வைத்து சீலைமண் 5 செய்து கெஜபுடமிடவும் பற்பம். கடுக்காய் அளவு நெய்யில் கொடுக்க குஷ்டம் முதலிய யாவும் தீரும்.

196. தாம்பிரபற்பம்.

பழைய காசை சுத்தி செய்து வட்டமாக தகடு அடித்து வைத்துக் கொண்டு சுத்தி செய்த தகடு எடை அக்கராகாரம் வெள்ளை அலரி வேர் பட்டை தட்டு எடை 6 வெள்ளை குங்கிலியம் தட்டெடை 6 இவை எல்லாம் மேற்கண்ட கட்டி தூள் செய்து மண் அகலில் பாதி போட்டு அதன் மேல் மேற்கண்ட தகட்டை எடுத்து வைத்து அதன் மேல் மேற்கண்ட தூள் போட்டு அதன் மேல் அகலை மூடி வாய்க்கு சீலை மண் 7 செய்து உணர்த்திட கெஜபுடமிட பற்பம். மேற்கண்ட வியாதிகள் தீரும்.

197. தாம்பிர பற்பம்.

சுத்தி செய்த பழைய காசை ராவின தூள் தோலா 1 ஆடு தின்னா பாளை சாரில் ஒரு நாள் ஊர வைத்து பிறிபிலை சாரால் கரிசலை குப்பை மேனி சாரால் அரைத்து 4 ஜாமம் அரைக்கவும். பின்பு வில்லை செய்து உணர்த்தி பின்பு சுத்தி செய்த அண்ட ஒரு தோலா 6 மை போல் அரைத்து குகை செய்து மேல் மூடியும் செய்து குகைக்குள் வில்லையை வைத்து மேல் மூடியில் மூடி சீலைமண் செய்து அதன் மேல் புளியும் பிரண்டையும் சேர்த்து இடித்து அரைத்து கவசம் தேங்காய் அளவு செய்து அதன் மேல சீலை மண் 7-ம் செய்து உணர்த்தி கொஞ்சம் பின்பு கொல்லுலையில் வைத்து ஊதி எடுக்க பற்பம் இருக்கும். அதாவது குகை பழுக்க ஊத வேண்டும். அரிசியெடை பனைவெல்லம் க்ஷயம், குன்மம் இருமல் முதலியன தீரும்.

198. தாம்பிர பற்பம்.

மேற்கண்ட காசுக்கு உப்புலாங் கொடியை அரைத்து கவசம் செய்து சீலை மண் செய்து 34 எருவில் பற்பம்.

199. தாம்பிர பற்பம்.

ஒரு பழைய தம்பிடியை ரூபா வட்டம் தகடு தட்டி தேங்கா நீரில் 40 தரம் சிவக்க காய்ச்சி முவைத்து எடுத்து கரு நொச்சியிலை அரைத்து இரண்டு அகலுக்குள் அப்பி அகலுக்கு நடுவில் தகட்டை வைத்து மேல் அகல் மூடி சீலை மண் செய்து கெஜபுடமிட பற்பம். மேற் கண்ட. பச்சிலை விழுது சார் கொஞ்சம் தகட்டின் கீழும் மேலும் வைக்கவும். மேல் வேலைக் குமாம்.

200. பற்பம் சுன்னமாக்கும் வேலை.

எந்த பற்பத்தையம் எடைக்கு எடை சுத்தியான ரசம் அல்லது வாலை ரசம் சேர்த்து (செம்பேயிலை சார்) அதாவது ஊசி மல்லி சார் விட்டு அரைத்து வில்லை செய்து உணர்த்தி ஒட்டில் வைத்து ஒரு மூடி சீலை மண் 5 செய்து 20 எருவில் புடமிட சுன்னம் மேற்கண்ட இலையை யும் அரைத்து மேற்கண்ட பில்லைக்கு கவசம் செய்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து 30 எருவில் புடமிடவும். தாளக தாம்பிர வெள் வங்கம் கரு வங்கம் முதலிய எந்த பற்பமா னாலும் சரி மேற்கண்ட சாராலும் அரைத்து மேற்கண்ட இலையை அரைத்து கவசம் செய்து புடம் போட சுன்னமாம்.

201. அண்ட வாய்வு, பக்க சூலை இருமல் உப்பிசம் முதலியவைகள் தீர காரிய்ய பற்பம்.

காரியத்தை பிரண்டை சாத்தில் 3 தரம் உருக்கி சாய்த்து ராவின ஈள் தோலா 1 சுத்தி செய்த அண்ட ஓடு தோலா 1 பிரண்டை சாற்றால் 4 ஜாமம் மை போலரைத்து பில்லை செய்து உலர்த்தி ஒட்டில் வைத்து மேலோடு மூடி சீலை மண் செய்து கெஜபுடமிட பற்பம். பணவிடை தேனில் கொடுக்கவும். மேகம் 21ம் மேல்கண்ட நோவுகளும் தீரும்.

202. மாரடைப்பு சூலை சுரம் தீர பாஷாண பற்பம்.

படிக பாஷாணம் ஒரே கட்டி ஒரு பலம் கொண்டு வந்து சங்கன் குப்பி சாரில் 3 நாள் ஊரப் போட்டு மேற்கண்ட இலை அரைத்து தேங்காய் அளவு கவசம் செய்து 7 சீலை மண் செய்து முழப் புட மிடு எடுத்து பஸ்பமாயிருக்கும். அரிசியெடை நெய் வெண்ணெயில் கொள்ள மேற்கண்ட வியாதிகள் போம்.

203. மூர்தார் சிங்கி பற்பம்.

மூர்தார் சிங்கிக்கு கள்ளிப் முழுப்பை அரைத்து தேங்காய் அளவு கவசம் செய்து கெஜபுடமிட பற்பம். அரிசியெடை நெய்யில் கொள்ள மூலங்கள் மேகங்கள் முதலியவைகள் தீருவதோடு பசி எடுக்கும்.

204. மூர்தார் சிங்கி பற்பம்.

நாமதரிகரும்பின் சாரால் மூர்தார் சிங்கியை 4 ஜாமம் அரைத்து வில்லை செய்து உணர்த்தி ஒட்டில் வைத்து சீலை மண் செய்து 25 எருவில் புடம் இந்த படி புடம் 3 போட பற்பம்.

205. பவளச் சுன்னம்.

பவளத்தை பழச்சாரில் 3 நாள் ஊர வைத்து எடுத்து விளாங்காய். அளவு ஏலந்தை யிலை அரைத்து கவசம் செய்து சுண்ணம்பு சீலை 3 செய்து முழப்புட மிட்டு எடுத்து பார்த்தால் வெண்மையாய் இருக்கும். அதின் மேல் முலைப் பால் தெளித்தால்மலரும். எடுத்து வைத்துக் கொண்டு கொண்டு தேன், வெண்ணெய், நெய் இந்த அநுபானத்தில் கொடுக்க ஈளை, இருமல் மூச்சு சுரம் முதலியவைகள் தீரும்.

206. பவழ பற்பம்.

பழச் சாரில் ஊறப் போட்ட பவளத்தை பச்சை மஞ்சள் அரைத்து குகை செய்து அதில் வைத்து மூடி சீலைமண் செய்து முழப்புடமிடவும்.

207. பவழ பற்பம்.

முயல் இரத்தத்தில் அரைத்து முன் போல் புடமிட சுன்னமாம். இருமல், ஈளை, சுரம் தேனில் கொள்ளவும்.

208. சங்கு பற்பம்.

சங்கை துண்டு துண்டாக உடைத்து குக்குடபுடம் 3 போட்டு எடுத்த கல்வத்திலிட்டு நார்த்தங்காய் சாரிலும் புளிப்பு மாதளம் பழ சாரிலும் மும்மூன்று நாள் ஊறப் போட்டு உத்தாமணி இலை அரைத்து கவசம் செய்து சீலைமண் 3 செய்து 200 எருவில் கெஜபுடமிட பற்பம். தேனில் குன்டுமணி ½ எடை கொடுக்க நெஞ்சி நோவும், நீர் கட்டு, சோபை முதலியவை தீரும். நெய், வெண்ணெய், அனுபானம்.

209. கல்நார் பற்பம்.

நெல் கழனியில் முளைக்கும் வேள பச்சை என்னும் மூலிகை வாசனை உள்ளதாயிருக்கும். அது வெள்ளை சீரா செங்கழுனியிலை சாறால் கல் நாரை அரைத்து வில்லை செய்து ஓட்டில் வைத்து உளர்த்தி சீலை மண் செய்து 20 எருவில் புடம் மீட்டு எடுத்த பணவிடை வெண்ணெயில் கொடுக்க வெள்ளை மஞ்சா வெள்ளை துர்நாற்றம் முதலியவை தீரும்.

210. கல்நார் பற்பம்.

சீமை கல்நாரை பாலில் சுத்தி செய்து சோற்று கற்றாழையை பிளந்து அதில் வைத்து 1 சீலைமண் செய்து 50 எருவில் புடம் போட பற்பம். வாய்வு இருப்பு நோவு முதலியவை களுக்கு நெய் வெண்ணெயில் கொடுக்கவும்.

211. கல்நார் பற்பம்.

நாட்டு கல் நாரை பச்சை ஜலத்தால் அரைத்து வில்லை செய்து உளர்த்தி உத்தாமணி இலை அரைத்து இரண்டு அகலில் அப்பி மேற்கண்ட பில்லை வைத்து மேல் மூடி சீலை மண் செய்து 50 எருவில் புடம் போட்டு எடுத்த பணவிடை வெண்ணெயில் பிரமேகம், மேகங்கள் முதலியவை களுக்கும் வெள்ளைகளுக்கும் ஆகும்.

212. கல்நார் பற்பம்.

கல்நார் கட்டிகள் 4 தாமரை கிழங்கை அரைத்து கவசம் செய்து 7 சீலைமண் செய்து கெஜபுடம் போட நீரும் பணவிடை வெண்ணெயில் கொடுக்க மேகம் பிரமேகம் முதலியவைகள் தீரும்.

213. கல்நார் பற்பம்.

கல்நாரை வல்லாரை இலை அரைத்து கவசம் செய்து 50 எருவில் புடமிட பற்பம். முன் வியாதிகள் தீரும்.

214. கற்பூர சிலாசத்து சுன்னம்.

குளிர்ந்த ஜலத்தில் ஒரு நாள் ஊறப் போட்டு எடுத்து வாழைக் கிழங்கு பிளந்து உள் வைத்து கோழி பையால் கவசம் செய்து கெஜபுடம் போட சுன்னமாம். வெண்ணெயில் 2 குன்றி அளவு கொடுக்க மேகவெள்ளை முதலிய நோய்கள் தீரும். தாது கட்டும். வெண்ணெய், நெய், தேன் அனுபானம்.

215. சிலாசத்து கல்நார் மான் கொம்பு பற்பம்.

மான் கொம்பை சுண்ணம்பை பொசித்து 50 எருவில் புடம் சிலாசத்தும் கல்நாரும் சேர்த்து சோற்று கற்றாழையை பிளந்து அதில் வைத்து சீலை மண் செய்து முழப்புடம் போட்டு

மூன்றையும் ஒன்றாக சேர்த்து கல்வத்திட்டு பாலினால் அரைத்து பில்லை செய்து உணர்த்தி 20 எருவில் புடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு குப்பை மேனி சாரில் அரைத்துப் பில்லை செய்து உணர்த்தி 20 எருவில் புடம் போட்டு பணவிடை தேன், வெண்ணெய், நெய்யில் கொடுக்க முன் வியாதிகள் தீரும்.

216. சிங்கி பற்பம்.

நாராயிலையிலும், கொட்டை பாசியிலையிலும் அகத்தியிலையிலும் பற்பமாம். ஒவ்வொரு இலையையும் அரைத்து கவசம் செய்து ஓட்டில் வைத்து புடம் போட வேண்டும். இந்த படி முதல் கவிசம் செய்து புடம் போட்டு 2 வது மேற்கண்ட சார் விட்டு அரைத்து பில்லை செய்து ஓட்டில் வைத்து சீலைமண் செய்து 100 எருவில் புடம் 3 வதும் ∮ இதேமாதிரி புடம் போட திவ்வியமான பற்பமாகும். மூலிகையிலும் இதே மாதிரி புடம் போட நீரும் வெள்ளை மேகம் முதலிய குட்டின் வியாதிகள் தீரும்.

217. சிலாசத்து பற்பம்.

குளிர்ந்த ஜலத்தில் ஊரப் போட்டு மறுநாள் எடுத்து குப்பை மேனியிலை யாகிலும் கீழா நெல்லி யிலையாகிலும் அரைத்து கவசம் செய்து 3 சீலை மண் செய்து 20 எருவில் புடம் போட பற்பமாகும். நெய், தேன், வெண்ணெய் அநுபானம் காச்சல் குளிர் சூடு முதலியவைகள் தீரும்.

218. ரச கற்பூர பற்பம்.

பூரத்தை முலைப் பாலில் 10 நாள் ஊரப் போட்டு எடுத்து சுடு நீரில் கழுவி உணர்த்தி பப்பாளி காயிக்குள் வைத்து 7 சீலை மண் செய்து 15 எருவில் புடம் போடவும். எடுத்து மேற்கண்ட இலையின் சார் ஒரு கலயத்தில் விட்டு அதில் மேற்கண்ட சூரக கட்டியை வைத்து மேலும் கலயம் மூடி உளுந்து மாவால் கவசம் செய்து அடுப்பேற்றி ஒன்றரை ஜாமம் எரித்து விலாரி விறகால் எரித்து ஆற்றி எடுக்க பற்பமாம். அரிசியெடை வெண்ணெயில் கொடுக்க மேகம், வெள்ள சட்டயேப்பு நோய்க்கும் 7 நாள் கொடுக்கவும். புளி நீக்கவும்.

219. ரசகற்பூர பற்பம்.

முலைப் பாலில் சுத்தி செய்த பூரத்தை ஒரு கலயத்தில் போட்டு மறு நாள் * கலையம் மூடி சீலை மண் உளுந்து மாவால் 5 செய்து விலாரி விறகால் 10 நாழிகை எரித்த ஆறி எடுக்க பற்பம். செய்ய நீரால் கட்டியும் இநத முறை செய்யலாம். முன் சொன்ன வியாதிக்கும் வெள்ளை புள்ளி விழுந்தாலும் கொடுக்கவும்.

220. வாழைப்பழ பற்பம்.

அரைவாட்டாய் முழுத்த பழத்தை தோல் நீக்கி இரு வசமும் கொஞ்சம் குழித்து பிரண்டை இலையாவது முங்கிலையாவது கடத்தி சீலை மண் 7 செய்து முழப்புடம் மிட பற்பம். பணவிடை வெண்ணெயில் கொடுக்க வீரிய விருத்தியுண்டாகும்.

221. வாழைப்பழப் பற்பம்.

புளியங்களை வேரை நாலாக கிழித்து ஒரு பாதி பழத்தினுள் கடத்தி முன போல் புடமிட பற்பம். (இருவசமும்) என்றால் உள்ளும், புறமும் எனலாம். (கடத்தி என்பது) கிடத்தி என்றும் அதாவது வைத்து எனலாம். மேற்கண்ட தழையை உள் பாகத்திலும் புறபாகத்திலும் வைத்து கவசம் செய்து சீலைமண் 7-ம் செய்து முழப்புடமிட பற்பம். ஆம் மேல்கண்ட வியாதி தீரும்.

222. ஆமை யோட்டின் பற்பம்.

ஒரு பலம் காளகத்தை குப்ப மேனி சாரால் அரைத்து புடம் போடுகிற ஓட்டினுள் தடவி உணர்த்தி அதினுள் ஆமை ஓட்டை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி போட்டு பரப்பி மேல் ஒரு மூடி வாய்க்கு சீலை 7 செய்து உணர்த்தி உமியும் வரட்டியும் கலந்து முழப்புடமிட பற்பம். பணவிடை வெண்ணெயில் கொடுக்க மூல வியாதிகள் யாவும் தீரும்.

223. வாழைப்பழப் பற்பம்.

முக்கால் பழத்தை எலந்தை இலை அரைத்து கவசம் செய்து சீலைமண் 7 செய்து உளர்த்தி முழப்புடமிட பற்பம். பணவிடை தேனில் கொடுக்க உடல் துடிப்பு மாறும். வெண்ணெயில் கொடுக்க சீவு ரத்தம் மாறும்.

224. உப்பு சுன்னம்.

மரக்காணம் உப்பு சுத்த வெண்மையானதாய் எடுத்து கழுவி உளர்த்தி கல்வத்திலிட்டு முருங்கை இலை சாரால் அரைத்து பின்பு முலைப் பாலால் அரைத்து வில்லை செய்து உளர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி 5 சீலை மண் செய்து உளர்த்தி 34 எருவில் புடமிட சுன்னம். மஞ்சளுக்கு சிவக்கும். வயிறு சூலை குன்மம் யாவும் தீரும்.

225. சாதிலிங்க செந்தூரம்.

ஒரு சட்டியில் ஒரு பலம் குரோசாணி ஓமம் போட்டு அதின் மத்தியில் முலைப் பாலில் சுத்தி செய்த ஒரு வீ லிங்கம் வைத்து அதன் மேல் ஒரு பலம் மேற்கண்ட ஓமம் போட்டு சட்டியை மூடி 7 சீலை மண் செய்து அடுப்பில் வைத்து 1 நாழிகை எரித்து அடுப்பாறி எடுத்து வைத்துக் கொண்டு பணவிடை நெய்யில் கொடுக்க, கடுப்பு முதலிய பல ரோகங்கள் தீரும். தாது விர்த்தியுண்டாம்.

226. உப்பு பற்பம் குன்மம் தீர.

கருப்புப்பு சயிந்த லவணம் இந்துப்பு வளையலுப்பு கல்லுப்பு வகைக்கு பலம் 1 கற்பூர ரசலா சத்து பலம் 5 எல்லாம் ஒன்றாய் கட்டி குப்பமேனி சாரால் அரைத்து பில்லை செய்து உளர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் செய்து உளர்த்தி முழப்புடமிட்டு எடுத்துவைத்துக் கொண்டு பணவிடை தேனில் கொடுக்கவும். வெகு ரோகங்கள் தீரும்.

227. நீர் சுரப்பு, கை கால் சுரப்பு தளர் வாய்வு தீர படிகார பற்பம்.

படிகாரம் வெடியுப்பு சவுக்காரம் நவாச்சாரம் எல்லாம் ஒருமிடையாக கட்டி முருங்கை யிலைச் சாரால் அரைத்து வில்லை செய்து உளர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் 3 செய்து உளர்த்தி 5 எருவில் புடம் மிட பற்பமாம். குன்டு மணி எடை வெல்லத்தில் கொடுக்க மேற்கண்ட நோவு தீரும்.

228. படிகார பற்பம்.

சீனத்தை கொஞ்சம் வெண்ணெய் போட்டு அரைத்துஒரு சிறு செப்புக்குள் போட்டு வாய் மூடி சீலை மண் 3 செய்து 5 எருவில் புடமிட பற்பம். பணவிடை வெண்ணெயில் 2 வேளையும் கொடுக் வயிறு எரிவு, இரத்த மூத்திரம், மேகச் சூடு தனியும்.

229. வெடியுப்பு பற்பம்.

வேப்பன் கொழுந்தை அரைத்து 2 குகை செய்து ஒன்றில் வெடியுப்பு நிரைத்து மறு குகையால் மேல் மூடி சீலை மண் 7 செய்து 10 எருவில் படமிட பற்பம். பணவிடை பனை வெல்லத்தில் கொடுக்கவும். இருவேளையும். கவிசை, நீராம்பல், குன்மம் முதலியவை தீரும்.

230. சங்கு பற்பம்.

சங்கை துண்டுகளாக்கி 10 எருவில் 3 புடம் போட்டு பின்பு நார்த்தங்காய் சாறிலும் புளிப்பு மாதளை பழச் சாறிலும் மும்மூன்று நாள் ஊரப் போட்டு எடுத்து உத்தாமணியிலை அரைத் பொதிந்து கட்டி சீலை மண் 5 செய்து 200 எருவில் புடம் போட்டு எடுத்து அரிசியெடை பற்பம். வெண்ணெய் வெண்ணெயில் தேனில் கொடுக்க குன்மம், நெஞ்சு நோவு, நீர்கட்டு, சோகை முதலியன தீரும்.

231. சொர்ணம்.

இரசம், கெந்தி, வங்கம், நவாச்சாரம், வகைக்கு சரி எடையாய் எடுத்து பின்பு நவாச்சாரம் நீங்கலாக மற்ற மூன்று சரக்குகளும் சுத்தி செய்து வங்கம் உருகும் போது இரசத்தை விட்டு தொந்தித்து எடுத்து கல்வத்திலிட்டு கெந்தியும் சேர்த்து அரைக்க கருப் பாகும். அதனுடன் சாரத்தையும் சேர்த்து அரைக்க மை போல் அரைத்து குப்பியில் போ போட்டு குப்பி வாய்க்குள் ஒரு முழம் குச்சி போட்டு குப்பிக்கு சீலை மண் செய்து உளர்த்தி மேற்கண்ட மருந்துகள் போட வேண்டும். பின்பு ஒரு பானையில் 4 விரல் கனம் மணல் கொட்டி அதன் மேல் குப்பி வைத்து கழுத்து வரையில் மணல் கொட்டி காடாக்கினியாக அடுப்பேற்றி எரித்து வரும்போது குச்சி எடுத்தெடுத்து பார்த்துக் கொண்டு வர வேண்டும். மருந்து பொன் நிறம் கண்டாம் பதம் என நெருப்பு ஆற்றி குப்பி எடுத்து வைத்துக் கொண்டு தாது புஷ்ட லேகியங்களில் அரிசியெடை வைத்து சாப்பிடவும். தாது விர்த்தியுண்டாம். பல ரோகங்களுக்கு தகுந்த அநுபானங்களில் கொடுக்க தீரும்.

232. அன்ன பற்பம்.

கருப்புப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, லாகூர் உப்பு இந்நான்கும் வகைக்கு பலம் 2 ஓமம், திப்பிலி, நறுக்கு மூலம், சுக்கு, தாளிச பத்திரி மிளகு, வசம்பு கஸ்தூரி மஞ்சள், சீரகம், வால் மிளகு, கடுகு, சீந்தில் கொடி, அதிமதுரம், கடம்பல் புல்லின் பூ இவை கள் வகைக்கு பலம் 4 கருவேப்பிலை பலம் 4 இவைகள் எல்லாம் இடிக்க வேண்டியவைகளை இடித்து அரைக்க வேண்டியவைகளை அரைத்து எல்லாம் ஒன்றுக்கி வைத்துக் கொண்டு முக்கால் படி அரி வேகிற சட்டியில் அரைபடி அரிசி போட்டு அரிசி முக்கால் பாகம் வேகிற அளவு தண்ணீர் விட்டு வேக வைத்து சோறை ஒரு சிப்பில் கொண்டு வேறு ஒரு சட்டியில் அரை பாகம் சோற்றை போட்டு முன் மருந்து முழுதும் அதின் மேல் போட்டு பரப்பி அதன் மேல் மற்ற பாதி சோற்றை போட்டு வாய்க்கு சானக்கு மூடி அடுப்பேற்றி காடாக்கினியாய் எரித்து சட்டியுள் நெருப்பு எரிய பார்த்து கூடி எரிப்பை மாற்றி ஆற்றி எடுத்து வைத்துக் கொண்டு 3,4 குன்று மணி எடை தேன், இஞ்சி சார், பனைவெல்லம் இதிலொன்றில் அநுபானமாக கொடுக்க. சுக்கு, சுடு நீரிலும் இன்னும் பல வித அநுபானங் களிலும் கொடுக்கலாம். காச்சல், கிராணி குன்மம், ருசி கேடு, மந்தம் முதலிய அநேக ரோகங்களுக்கு கொடுக்கலாம். ~~வைத்தியன் புத்தி கர்மைக்கு பொருத்ததாகும்~~. பாலகர் களுக்கு வியாதிக்கு தகுந்தது போல் முலைப் பாலிலும் மற்ற கஷாயங்களிலும் கொடுக்கலாம். ~~அதிகம் எழுதல் விரியும் என அச்சி நிறுத்தப்பட்டது~~.

233. அன்ன பேதி செந்தூரம்.

அன்ன பேதியை நெல் கழனி வரம்பில் முளைக்கும் வேள பச்சை என்று சொல்லப் பட்ட வாசனையுள்ள செடி அது. வெள்ளை சீரா செங்கழனி என்றும் சொல்லுவார்கள். இதன் இலை சாறால் அரைத்து சிறு சிறு பில்லைகளாக செய்து உளர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் 3 செய்து 12 எருவில் புடம். இந்த படி 3புடம் மேற்கண்ட சாறால் அரைத்து போட்டு எடுத்து குன்று மணி எடை தேனிலும், நெய்யிலும் கொடுக்க குன்மம். போகும். சோபை நீங்கும். கடும் பத்தியம். பித்த வியாதிகள் யாவும் நீங்கும். திரிகடுகு, லேகியத்தில் கொடுத்தால் முன் வியாதிகள் தீரும். அன்ன பேதியை கரிசலாங் கண்ணி சாறால் அரைத்து முன் போல் 12 எருவில் புடம் போட்டு எடுத்து பணவிடை செந் தூரம். பித்த மயக்கம், நெஞ்சு பிடிப்பு, சோபை, தலை சுழற்றல், பித்தத்தால் வந்த வியாதிகளுக்கு பழச்சாறிலும், பனைவெல்லத்திலும் கொடுக்கலாம். நெய்யிலும் கொடுக்கலாம்.

234. அன்னபேதி செந்தூரம்.

ஒரு சேர் அன்ன பேதியை குப்பை மேனி சாறால் முன் முறைப்படி புடம் போட்டு எடுத்து முன் அநுபானம் படி கொடுக்க பித்தம் பித்த சுரம் முதலியவை தீரும்.

235. அன்னபேதி செந்தூரம்.

புளியயிலை யிடித்து குகை செய்து அதிலுள் பேதியை வைத்து சீலை மண் செய்து 50 எருவில் புடம் போட்டு எடுத்து பணவிடை செந்தூரம் பனைவெல்லத்தில் கொடுக்க மூக்கள் முட்டு ஆனபின் வருகிற இரத்தப் பிரமியத்திற்கு 2 நாள் கொடுக்கவும் பித்த ரோகங்களும் நீங்கும். கடும பத்தியம்.

236. மூர்தார் சிங்கியம்.

ஒரு கட்டியாக சிங்கியை வாங்கி வெள்ளாட்டின் பிச்சால் அரைத்து வில்லை செய்து ஊர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் 3 செய்து 30 எருவில் புடம் போட மியமாகும். மூலத்திற்கு மோதிரம் செய்யலாம். சிலமேல் வேலைக்கும் ஆகும்.

237. லாகூர் உப்பு பற்பம் பித்த குன்மம் தீர.

லாகர் உப்பு பலம் 2 குப்பை மேனி சாறால் அரைத்து பில்லை செய்து ஊர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் 3 செய்து 7 எருவில் புடம் போட பற்பம். பணவிடை வாயில் போட்டுக் கொண்டு வெந்நீர் கொள்ள* கொள்ள தீரும் குன்மங்களே.

238. சோடாஉப்பின் சுன்னம்.

நெருப்பு பெட்டியில் மிளகாயிலை பரப்பி அதில் சோடா உப்பை போட்டு மேலும் இலைகள் போட்டு சீலைமண் 7 செய்து ஊர்த்தி 4 எருவில் புடம் போடவும். மறுபடியும் ஒரு நெருப்பு பெட்டியில் வெத்திலையை கத்தரித்து போட்டு முன்போலவே புடம் போட்டு எடுத்து பணவிடை சுன்னத்தை நெய்யில் அல்லது பழச் சாறிலும் கொடுக்க வயிற்று நோவு தீரும். தேனில் கொடுக்க பசி தீவினை உண்டாகும்.

239. பலகரை பற்பம் பிளவைகள் தீர.

பெரிதும் முத்தினதுமான 1 பலம் கவடி என்னும் பலகரையை 6 மாத காடியில் போட்டு கலையை வாய்க்கு சீலை மண் செய்து முழப்புடமிட்டு எடுத்து குன்றி எடை நெய்யில் 7 நாள் அல்லது 14,15 நாள் கொடுக்க பிளவைகள் தீரும். புண்களும் நீங்கும்.

240. தலைவலிக்கு பற்பம்.

காட்டெருவில் வெள்ளெருக்கன் பால் போட்டு பிரட்டி பிசைந்து ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் செய்து 5 எருவில் புடம் போடவும். இந்த படி 5 புடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு அரிசியெடை மூக்கில் உறிஞ்சினால் தலைவலி நிற்கும். மேற்கண்ட பால் கிடைக்காவிடில் நாட்டு எருக்கன் பாலில் செய்துக் கொள்ளலாம்.

241. அஞ்சனக் கல் பற்பம் மேகம் 21-க்கு.

புளியாரைக் கீரை அரைத்து குகை செய்து அதற்குள் அஞ்சனக் கல் வைத்து மூடி 7 சீலை மண் செய்து கெஜபுடமிடவும். பற்பமாம். தேனில் அரிசியெடை கொள்ள தினம் ஒரு வேளை சாப்பிடவும். மேகம் 21-ம் தீரும்.

242. அஞ்சனக் கல் பற்பம்.

அஞ்சனக் கல்லை குலாபி நீரால் அரைத்து சிறு சிறு பில்லைகள் செய்து ஊர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் செய்து ஊர்த்தி 5 எருவில் புடம் போடவும். மேல் கண்ட நீரால் மேற்கண்ட முறைப்போல் 5 எரு புடம் ஒன்றுக்கு அதிகப்படுத்தி 5 புடம் போட போடவும். பின்பு எடுத்து உள்ளங்கையில் போட்டு நமிட்டி தேய்த்து பார்த்தால் சுண்ணும்பு போலிருந்தால் போதும். இல்லாதிருந்தால் இன்னும் ஒன்றிரண்டு புடம் போட்டு எடுத்துக் கொள்ளவும். அரிசியெடை எடுத்து வெண்ணெயில் கொடுக்க மேகம் 21-ம் பித்தம் 40-ம் தீரும். ஆள் திடம் பார்த்து 1 குன்றி 2 குன்றி அளவு வாயில் போட்டுக் கொண்டு கொஞ்சம் நீர் குடிக்கவும். பின்ன ஒரு வெத்திலை சுருட்டி தொண்டை வரையில் செலுத்தியிழுக்கவும். கோழை கட்டு கத்தரித்து விழும். வெள்ளை விழுகிற நோய்களுக்கு கொடுக்க குணமாம்.

243. வெள்ளை விழுகிற நோய்களுக்கு வெள் வங்க பற்பம்.

கீரிச் செடியின் பட்டையை வெட்டி பட்டு போல் இடித்த கோளிப்பையின் மீது பரப்பி அதன் மீது சுத்தி செய்த வெள் வங்க தகட்டை பொடியாக நறுக்கி போட்டு சுருட்டி சீலை மண் அதாவது கோளிப்பை மீது பூசி அரை கெஜபுடமிட பொரிந்து பற்பமாயிருக்கும். எடுத்து வைத்துக் கொண்டு குன்றியளவு 1,2 தேனில், வெண்ணெயில் கொள்ள பிரமேகம் மேகம் இடுப்பு வலி மேகச் சொறி, சிரங்கு முதலானதும் தீரும். இதை மறுபடி அன்ன முறை செய்தால் அரிசியெடை கொடுக்க மேகம் 21-ம் தீரும். தாதுக் கட்டும்.

244?? ரச பதங்கம் குஷ்டம் ரணம் தடிப்பு கிரந்தி ரணம் வாய் குலை மேகம் யாவும் தீரும்.

லிங்க ரசம் வி 1 ஒரு சட்டியில் 1 மானம் உப்பு போட்டு நடுவில் கொஞ்சம் பள்ளம் செய்து மை போல் அரைத் உப்பு கொஞ்சம் போட்டு குழித்து அதில் மேற்கண்ட ரசம் விட்டு அதன் மேல் துளசியிலை சிகப்பு பருத்தியிலை கோவையிலை, ஒவ்வொரு பிடி போட்டு அழுத்தி மேல் பானையில் கொடிவேலி தழைச் சார் பூசி உலர்த்தி மேல் மூடி சீலைமண் செய்து (7) அடுப்பேற்றி 2 ஜாமம் சிறு தீயாக எரித்து 2 ஜாமம் காடாக்கினியாக எரித்து ஆறிய சட்டியை எடுத்து சாய்த்து வைத்து தேங்காய் நாரினால் மேல் சட்டிக்குள் ளிருக்கும் பதங்கத்தை சுரண்டி எடுத்துப் பத்திரப்படுத்த ~~உள்ளிருக்கும் பதங்கத்தை~~ வும். பின்பு சுண்டைக்காய் அளவு பனை வெல்லத்தை சட்டியில் போட்டு பிரட்டி எடுத்துக் கொள் ளவும். சுண்டைக்காயளவு குளிகை செய்து அதாவது பனை வெல்லம் ஒரு எலுமிச்சங்காய் அளவில் பதங்கத்தை போட்டு பிரட்டி வைத்துக் கொண்டு மேல் கண்டபடி சுண்டைக்காயளவு 7 நாள் 7 வேளை கொடுக்கவும். பாலும், நெய்யும் சாப்பிடவும். தொண்டை நோவு கண்டால் மருந்தை நிறுத்திவிடவும். தொண்டை நோவு தீர்ந்த பின் மறுபடியும் கொடுக்கவும். முன் வியாதிகள் தீரும். எரிக்கும் போது மிடாவின் மீது ஈர துணியை நனைத்து போட்டு வரவும்.

245. சோகை தீர பற்பம் நீர் அதிகமாயிறங்கு.

இரும்பு ராகு பொடி பலம் கால் சிலாசத்து கல்நார், மனோசிலை, வெங்காரம் லிங்கம், சங்கு, பாஷாணம், படிகாரம், கெந்தகம் இந்த 8-ம் வகைக்கு கால் விராகன் வீதம் எடுத்து கட்டி மை போல் அரைத்து அரை பலம் வெடியுப்பை கரண்டியில் போட்டு உருக்கி அது உருகும் போது மேற்கண்ட தூளை போட்டு கிளறி பலகையின் மீது கொட்டவும். வில்லை யாகும். அதை எடுத்து அரைத்து வைத்துக் கொண்டு வீ தூளை நீர்முள்ளி கஷாயத்தில் போட்டு கொடுக்கவும். 7 நாள் 7 விராகன் கொடுத்தால் நீர் அதிகமாய் இறங்கும். அதியிருக்கும். சோகை பாண்டு முதலியவை முதலியவை தீரும். புளி, எண்ணெய், நெய் ஆகாது.

246. ரச செந்தூரம்
சர்வ மேகமும் வாய்வும் தீரும் வாய் பிடியாது.

ஒரு சிறு குடுவையில் அரைபலம் கெந்தி தூள் போட்டு அதன் மேல் ஒரு பலம் மயில் துத்த தூள் போட்டு அதன் மேல் அரை பலம் கெந்தியை போட்டு வாய்க்கு சரியாய் ஒரு வைத்து மூடி சீலை மண் செய்து (5) உலர்த்தி ஒரு பானையில் 4 விரல் உயர மணல் கொட்டி பரப்பி அதன் நடுவில் மேற்கண்ட கவசத்தை வைத்து மேலும் நிறைய மணல் கொட்டி வாய் மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி 4 ஜாமம் எரித்து எடுத்து வைத்துக் கொண்டு வாய்வு சீத ரோகங்களுக்கு அரிசியெடை தேனிலும் சுட்டு தேகிகளுக்கு நெய் யிலும் 7 நாள் கொடுக்கவும். தீரும் வியாதிகளாவன மேக வாய்வு, தனுர் வாய்வு, நாக வாய்வு, குதக வாய்வு, முடக்கு வாய்வு, மூர்ச்சை வாய்வு, மேகங்களும் தீரும். பத்தியம் பழம் புளி, பிஞ்சிகத்திரி, நெய், பால் தயிர், பருப்பு முருங்கை பிஞ்சு முதலியவைகள் ஆகும்.

247. பஞ்சபாண செந்தூரம்.

ஜாதிலிங்கமும், ரசகற்பூரமும், முலைப் பாலில் சுத்தி மனோசிலை கோமியத்தில்

கெந்தகம் பாலில் சுத்தி வெள்ளை பாஷாணம் அவுரியிலையும், மிளகும் கூட்டி கஷாயம் செய்து அதில் தோளாந்திரங் கட்டி எரித்து எடுத்துக் கொள்ளவும். ஊசி காந்தம், சுத்தி செய்து பின்பு இந்த சரக்குகள் 6-ம் கல்வத்திட்டு வகைக்கு பலம் போட்டு குப்பை மேனி பருத்தி வெத்தில், வெள்ளருகு வேலிப்பருத்தி, பொடுதலை, துளசி இந்த 7-திருசு களின் இலை சார் ஒவ்வொன்றில் 4 ஜாமம் அரைத்து ரூபாய் அளவு வில்லை செய்து உளர்த்தி ஒரு சாளுக்கில் வெத்திலை பரப்பி அதன் மேல் பில்லைகள் பரப்பி அதன் மேல் வெத்திலை பரப்பி அதன் மேல் மறு சாளுக்கு மூடி சீலைமண் வாய்க்கு கெட்டியாக 7 செய்து அடுப் பேற்றி தூவாரம் விரகால் 4 ஜாமம் எரித்து அடுப்பு தாளுகவே ஆறிய பின் கவசத்தைப் பிரித்து செந்தூரத்தை எடுத்துக் கொண்டு அநுபானம் ஜன்னி சுரம் இதகருக்கு தேன், முலைப்பால், இஞ்சி ரசம் இந்த மூன்றையும் கூட்டி அதில் மேற்கண்ட செந்தூரம் குன்றி அளவு கொடுக்கவும். கீழ் குறித்த வியாதிகள் அனைத்துக்கும் பனை வெல்லத்தில் ஒரு குன்றி எடை கொடுக்கவும். 1 மண்டலம் அரை மண்டலம் போதும். வாரத்திற்கு 2 நாள் நல்லெண்ணெய் ஸ்நானம் செய்யவும். மருந்து தின்று முடிந்த பின் மறு பத்தியம் கார்க்கவும். ஒரு வாரம் இருந்தால் போதும். புளி தள்ளவும். எலுமிச்சம் பழம் ஆகும். மருந்துக்கு முறிவு அவுரி வேர், மிளகு, திப்பிலி, அத்து பலை, இந் நான்கும் சேர்த்து கஷாயம் செய்து 3 நாள் கொடுக்கவும். தீரும் வியாதி ஜன்னி சுரம், க்ஷயம், கிரந்தி சூலை, குஷ்டம், பிளவை, பத்து ரோகம், கண்டமாலை, அரி கரப்பான், சொரி சிரங்கு, மேகம் வண்டுகடி, மேல், குழியாவே, அழுகண்ணி அரையாப்பு புண், கண்ணோசி, கன்னப் புத்து பவுத்திரம் மூல முளை காசம் சந்நிடிப்பு கீழ் சூலை தலைவலி வலி முதலியவைகள் தீரும்.

<u>248. சண்டமாருத குழம்பு எல்லா வியாதிகளுக்கும்.</u>

இரசம், ஜாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை, பூரம், கருநாவி, வெங்காரம் கௌரி வகைக்கு 1க்கு வீ 2, எடுத்து தனித்தனி சரக்கு ஒவ்வொன்றையும் கரந்தையிலை சாரால் ஒவ்வொர் ஜாமம் சுருக்கு கொடுத்து எடுத்து சுத்தி செய்த வாளப்பருப்பு வீ 16 வால் மிளகு, குரோசானி, ஓமம், திப்பிலி, அரத்தை, கடுக்காய், தடுதால், நெல்லிக்காய், கிராம்பு, கடுகு, சுக்கு, ரோசனி இரு பெருங்காயம், கஸ்தூரி மஞ்சள், ஆனை திப்பிலி, திப்பிலி, மூலம் சிறு நாகப்பூ, இந்துப்பு, கோஷ்டம், வாய்விளங்கம், ஜாதிக்காய், இவைகள் 19 திருசையம் வகை 1 க்கு 4 வீ எடுத்து தூள் செய்து மை போலரைத்து எடுத்து வைத்து விட்டு மேற்கண்ட 8 சரக்குகளையும் கல்வத்திலிட்டு மை போலரைத்து எடுத்து வைத்து விட்டு வாளத்தை கல்வத்திட்டு மை போலரைத்து எடுத்து மற்ற மருந்துகள் எல்லாம் ஒன்றுங் கூடக் கலந்து ஒரு மணி நேரம் யாவும் வுரவாகும்படி அரைத்து பின்பு திருகள்ளி பாலில் ஒரு ஜாமம் அரைத்து பின்பு சிவதை வேரும், வேலிப் பருத்தியும் சமமாக எடுத்து கஷாயமிட்டு இக்கஷாயத்தால்ல 12-ஜாமம் விடாமலரைத்து எடுத்து இரும்பு டப்பியில் வைத்துக் கொண்டு அநுபானம் <u>ஜீசத்திற்கு</u> அரைத்தையும் சுக்கும் கஷாயமிட்டு குழம்பில் ஒரு குன்றி அளவு காலை ஒரு வேளை கொடுக்க தீரும்.

<u>ஜன்னி தோஷம் தீர</u> அரத்தை, சுக்கு, கிராம்பு, திப்பிலி, இஞ்சி, வாய் விளங் கம், லவுங்கப்பட்டை, வெள்ளை காட்டாமணக்கு வேர், வெண்நொச்சி வேர், சமம் கூட்டி கஷாயமிட்டு குன்றி எடை குழம்பு போட்டு கொடுக்க.

<u>இருமலுக்கு.</u> கடுக்காய் கஷாயத்திலும் குன்றி குழம்பு கொடுக்க தீரும்.

<u>வாதம் ஜீரம் தீர</u>:- தழுதாளை, வெண்ணொச்சி இதன் இலை சாற்றில் குன்றி எடை குழம்பு கொடுக்கத் தீரும்.

<u>க்ஷய இருமலுக்கு:</u>- தூதுவளையிலை, கண்டங் கத்திரி இலை, ஆடாதோடை யிலை சித்தரத்தை, சிறு காஞ்சொரி, திப்பிலி, கடுக்காய் சமம் கூட்டி இடித்து சட்டியில் போட்டு கஷாயமிட்டு குன்றி அளவு கொடுக்கத் தீரும்..

<u>காமாலை சோகைக்கு:</u>- எலுமிச்சன் சார், வெள்ளாட்டின் கோமியம், கரிசாலை மிளகு கூட்டி கஷாயம் செய்து அதில் குன்றியளவு கொடுக்கத் தீரும்.

மகோதரம் பெருவயிறு, நீராம்பல் சோகை கௌசை உளை மாந்தம் வீக்கம் பீலிகைக்கு:- நீர்முள்ளி சாரில் நவாச்சாரம் ஒரு குன்றி எடையும் குழம்பு குன்றி எடையும் சேர்ந்து கொடுக்கத் தீரும்.

பெருவியாதி தீர:- பூரவசன் பட்டை, பேய் குமட்டி வேர், சீரகம், மிளகு, சமம் கூட்டி கஷாயமாக்கிகுன்றி குழம்பு கொடுக்கத் தீரும்.

பித்த பயம் தீர:- கொத்தமல்லி, மொட்டுகொத்தான், சீரகம் சமம் கூட்டி கஷாயமாக்கி குன்றி அளவு கொடுக்கத் தீரும்.

கிரந்தி அரையாப்பு, கரப்பான் சூலைக்கு:- கரந்தையிலை சாற்றில் குன்றி அளவு குழம்பு இகொடுக்கத் தீரும்.

விரைவாதம் அண்ட வாதம் தீர:- எருக்கன் பூ சாரில் குன்றி அளவு குழம்பு கொடுக்கத் தீரும்.

வாய்வுகளுக்கு:- வேளை நொச்சி வேலிப் பருத்தி வெத்திலை அவுரி இந்த இலை சாரில் சுக்கு நாள் போட்டு குன்றி அளவு போட்டு குழம்பு கொடுக்கத் தீரும்.

கரப்பான் குஷ்டத்திற்கு:- அமுக்கிரங் கிழங்கு, பரங்கி பட்டை, சிவனார் வேம்பு இவைகள் நாள் செய்து இந்த நாளில் குன்றியிடை குழம்பு கூட்டி கொடுக்கத் தீரும்.

மேகம் 21-க்கும் அத்தி பட்டை சாற்றில் குன்றியளவு கொடுக்கத் தீரும்.

கெர்ப நோய்க்கும் கிருமிக்கும்:- பாலையிலை சாறு அல்லது பங்கம் பாளை சாரில் குன்றி அளவு கொடுக்கவும்.

கரப்பானுக்கு:- கரந்தை சாரில் குன்றி அளவு கொடுக்க.

சோகைக்கு:- குமரிச் சாற்றில் குன்றி அளவு கொடுக்க.

எலிகடிக்கு.:- முருங்கை பட்டை சார், வேளைச் சார், வெள்ளுள்ளி கூட்டி குழம்பு குன்றி அளவு கொடுக்கவும்.

மற்றுமுள்ள விஷத்திற்கு:- ஆடாதோடை சாரிலிடவும்.

விரியனுக்கு:- அவிஞ்சி சார் வாகைச் சார் இதிலிட.

வாதம் பக்ஷவாதம் தீர இளம் பிள்ளை வாதம் தீர:- கருவாகை வேம்பு கோவை பிரண்டை இலுப்பை புல்லுருவி, சார்களில் கொடுக்க குன்றி மணி கொடுக்க தீரும். எதற்கும் குன்று மணி எடை போதுமே.

249. வீரக் குழம்பு.

குன்ம நோய் தீர கை கண்டது.

வீரம், இரச கற்பூரம், சித்தாமணக்கு, முத்து பருப்பு, பொரித்த வெங்காரம் ஜாதிலிங்கம் நவாசாரம் கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி முன் திரவ்சை சுத்தி செய்து எல்லா திரவ்களும் சரி சமன் எடை சேர்த்து தேன் விட்டு மை போலரைத்து வைத்துக கொள்ளவும். ஒரு பொழுது ஒரு குன்றி எடை விழுங்க வைக்கவும். குன்மம் சமிக்கும். நல்ல மருந்து.

250. வெள்ளி பற்பம்.

முத்தி கழற்சியிலை இடித்து சார் பிழிந்து அதில் பழைய ரூபாயை தகடு தட்டி கரியில் வைத்து சிவக்க காய்ச்சி தூவைக்க வேண்டும். 21 தரம் இது போல் தூவைக்க வேண்டும். அதாவது தகடு நன்றாய் வெட்டை ஆயிவிட வேண்டும். அரைகுறையான வெட்டையை புட்டு வைத்தால் பஸ்பமாகாது. எத்தனை தரமாகிலும் வெட்கட செய்து மேற்கண்ட இலையை தேங்காயளவு அரைத்து முக்கால் கெஜபுடம் போட்டு எருத்து கல்வத்திலிட்டு 10 தோலா ரசத்தை விட்டு உத்தாமணி சார் விட்டு அரைத்து உருண்டை செய்து செங்கல் லை துளைத்து அதில் வைத்து மேலும் செங்கல்லால் மூடி 7 சீலைமண் செய்து கொல்லன் உலையில் வைத்து கால் மணி நேரம் ஊதி எடுக்க பற்பமாயிருக்கும். இதை எடுத்து வைத்துக் கொண்டு அரிசியெடை நெய்யில் கொடுக்க காசம், சுவாச காசம், வாய்வு அண்ட வாய்வு, இருமல் முதலியவை தீரும். தாது கட்டும்.

251. சருவ பஸ்பமும் செய்யும் முறை.

ஆவணி மாசம் பெய்கிற மழை தண்ணீரை மண் தூசி படாமல் பிடித்த சீசாக்களில் ஊற்றி வைத்துக் கொண்டு. ஒரு கலயத்தில் தாளகம் வைத்து அதன் மேல் 4 அங்குலம் ஜலம் நிற்கும்படியாய் சீசாவில் உள்ள மழை நீரை ஊற்றி வாய் மூடி சீலை மண் 7 செய்து அடுப்பேற்றி 2 ஜாமம் 3 விறகால் எரிவு போட பற்பம். வெண்மையாய் இருக்கும் இந்த படி தாளகம் பாஷாணம் கெந்திலிங்கம் வீரம், பூரம் முதலிய சகல சரக்குகளையும் நீற்றும் கெந்தகத்தையும் முன்போல் சீலை செய்து அடுப்பின் மீது வைத்து அகலில் திரி போட்டு கொளுத்தி விளக்கெண்ணெய் ஊற்றி இத்தீபத்தால் 12 ஜாமம் எரிக்க பஸ்பமாம். வெண்மையாயிருக்கும். இந்தபடி எல்லா பஸ்பங்களும் செய்து நோவுக்கேற்ற பற்பம் கொடுத்து நிவர்த்திக்கலாம். அந்த குணம் கொடுக்கும்.

252. கல்நார் பற்பம்.

துளசி நாட்ட பெரு முட்டையிலை இடித்து அரைத்து கல் நாரக்கு கவசம் செய்து முழுப்புடம் போட பஸ்பம். பாரிச வாய்வுக்கு குன்றி அளவு பசு வெண்ணெயில் கொடுக்கவும். பாரிச வாய்வு இடுப்பு சூலையும் தீரும்.

253. கட்டிக் கல் நார் பற்பம்.

மருதாணியிலை அரைத்து மேற்கண்ட கல்நாருக்கு கவசம் செய்து 37 எருவில் புடம் போட பற்பம். மூலைப் பாலில் 1 ஜாமம் சுருக்கு கொடுக்கவும். குரு வெள்ளை எரிச்சல் முதலியவை நீங்கும்.

254. தாளக பற்பம்.

சுண்ணாம்பில் 1 தரம் சுத்தி செய்த தாளக கட்டியை பூவரசன் பட்டை சாம்பல் 2 படி ஒரு சட்டியில் பாதி போட்டு தாளகத்தை வைத்து மேலும் சாம்பல் கொட்டி அழுத்தி அடுப்பேற்றி 4 ஜாமம் எரிக்க பற்பம். அரிசியெடை மிளகு கஷாயம் வெத்திலை சார்களில் கொடுக்க இரும்பல், காச சுவாசம் சுரம் நீங்கும்.

255. கெம்பு பற்பம்.
மூச்சு இருமலுக்கும் எத்த இருமலுக்கும் கை கண்டது.

ரசகற்பூரத்தை கலயத்தில் போட்டு கட்டி மறைய சதுர கள்ளி பால் விட்டு அடுப்பில் வைத்து எரிக்கவும். சிறு நெருப்பால் எரிவிட பால் வற்றி கட்டி மலரும். உடன் எடுத்து அரிசியெடை பனைவெல்லம் நெய், வெண்ணெய், தேன் அநுபானம் 3 நாள் 7 நாள், 7 வேளை.

256. தாளக பற்பம்.

சுத்தி செய்த தாளகம் பலம் 1தும்பையிலை அரைத்து கவசம் செய்து 5 எருவில் புடம் அரிசியெடை தேன் மிளகு, கஷாயம் வெத்திலைச் சார் இதுகளில் கொடுக்கத் தீரும்.

257. நாக பற்பம்.
தீராத கிராணி தீர கை கண்டது.

சுத்தி செய்த நாகத்தை உருக்கி அரள் செய்து 1 தோலா கரண்டியில் போட்டு உத்தாமணி ரசமும் நீரும் கலந்து ஒரு நாள் சூரிய புடம் வைத்து நீரை நீக்கி மறு உத்தாமணி சார் வார்த்து கரண்டியை சீலைமண் செய்து (5) உலகத்தில் வைத்து ஊதி எடுக்க பற்பம். குன்றிஎடை தேன், நெய், வெண்ணெயில் கொடுக்க. காலை, மாலை 2 வேளையும். தீராத கிராணி தீரும்,

258. வெள்ளி பற்பம்.

சதாப்புயிலை சாறில் 21 தரம் ரூபாயை சிவக்க காய்ச்சி தவைத்து மேற்கண்ட இலையை அரைத்து கவசம் செய்து 50 எருவில் புடம் இட பற்பம். அரிசியெடை நெய்யில்

தாதுவிர்த்தியாம். இன்னும் பல நோவுகளுக்கு அநுபானங்களில் கொடுக்க தீரும்.

259. வெள்ளி பற்பம்.

வெள்ளை எருக்கன் பால் வெள்ளை குன்றியிலை இரண்டும் அரைத்து ருபாய்க்கு கவசம் செய்து உணர்த்தி மறுபடியும் தடவி உலர்த்தி கவசமாக்கி அரசன் பட்டை இடித்த அளாக்கி கவசம் செய்து 6 வீசை விராட்டியில் புடம். இந்த படி 2 புடத்தில் பற்பமாகும்.

260. வெள்ளி பற்பம்.

வெள்ளை பிரம தண்டின் இலைச் சாரில் 121 தரம் சிவக்க காய்ச்சி தலைத்து ருபாய்க்கு சதாப்புயிலை அரைத்து 1 கவசம் செய்து சீலைமண் செய்து ஒன்றரை வீசை எருவில் புடமிட பற்பம். இந்தபடி 3 தரம் புடம் போட நல்ல பற்பம். ஆம். அரிசிபொடை நெய், தேன், வெண்ணெய். குஷ்டம் பெருவியாதி, இருமல், மூச்சு. மேகவீரிய குரைவு நீங்கும்.

261. சரக்குகள் நீற்ற ஒரு ஐயநீர்.

கம்பி உப்பு தோலா 4 செம்மண்ணிலிருந்து எடுத்து மோரில் போட்டதை மண் கலக்கிய பின் எடுத்து கழுவின பூ நாகம் தோலா 4 இரண்டும் அரைத்து பீங்கான் கோப்பையில் போட்டு பனியில் வைக்க நீர் இறங்கும். அல்லது தண்ணீர் ஓரம் ஜவுக்கில் ஈரமான இடம் மணலிலாவது புதைத்து வைத்தால் மறு நாள் எடுக்க நீர் இறங்கி இருக்கும். அதை சீசாவில் ஊற்றிக் கொண்டு மறுபடியும் வைத்து மண் மூடி விடவும். இதே மாதிரி தினம் ஊறும் நீரை ஊற்றிக் கொள்ள வேண்டும். இந்த ஐய நீரைக் கொண்டு சரக்குகளை சுருக்கு 2, 3 ஜலம் ஜாமம் கொடுத்தும் அல்லது ஐய நீரில் அரைத்து நெருப்பு பீங்கானில் வைத்து அடுப்பேற்றி வருத்து நீர் சுண்டின பின் மேற்கண்ட ஐயநீர் கொஞ்சம் விட்டு வருத்து சுண்டின பின் கொஞ்சம் வார்த்து வருத்து சுண்டின பின் கொஞ்சம் நெருப்பில் போட்டு பார்க்க புகையாமலிருந்தால் கட்டாய் விட்டதென எடுத்துக் கொள்ளவும். நெருப்பக்கு நிற்கிற வரையில் சுருக்கு கொடுத்தோ பீங்கானில் அரைத்த போட்டு ஐயநீர் விட்டு பாகப்படுத்தியோ செய்துக் கொள்ள வேண்டும். 3 அல்லது 4 ஜாமத்தில் கட்டு பட்டு விடும். செய்பாகம் கை பாகத்தை பொருத்தது.

262. ரச செந்தூரம்.

புத்து மண்ணை அரைத்து வாய் பொருந்தும் படி 2 மூசை செய்து 2 பலம் நெல்லிக்காய் கெந்தியை குமரிச் சார் விட்டு அரைத்து 2 பங்கு பாகம் செய்துக் கொண்டு பழச்சாறால் விடத்தலை கிரந்தியிலை அரைத்து 2 பாகம் செய்து வைத்துக் கொண்டு வாலை ரசம் ஒரு பலம் எடுத்து பின்பு மூசைகளில் ஒரு பகுதி கெந்தியை உள் தடவி அதன்மேல் ஒரு மருதாணியை தடவி அதன் மேல் ரசத்தை விட்டு மேலும் மறு மூசையில் கெந்தியையும் பின்பு தழையும் பூசி மூசையை மூடி சீலை மண் 7 செய்து உலர்த்தி ஒரு ஜான் பள்ளம் வெட்டி அதில் பாதி பச்சை உமி போட்டு மூசை வைத்து அதன் மேல் 4 வரட்டி நாள் செய்து போட்டு அதன் மேல் நிரைய உமி கொட்டி நெருப்பு கட்டி ஒன்று வைத்து எரிந்து ஆறிய பின் எடுக்க செந்தூரமாகி இருக்கும். இம்முறை தப்பாது.

263. ரச செந்தூரம்.

வாலை ரசம் பலம் 1, மிதிபாகல் சமூலம் செகப்பு நாயுருவியிலையும் அரைத்து சார் பிழிந்து மேற்கண்ட ரசத்திற்கு ஒரு ஜாமம் சுருக்கு கொடுத்து பின்பு மிதிபாகல் கிழங்கு பெரியதாயிருப்பதில் தமரிட்டு குடைந்து அதில் மேற்கண்ட ரசத்தை விட்டு அக கிழங்கு தூளால் திணித்து மூடி 5 சீலை மண் செய்து முன் முறை போல் பள்ளம் வெட்டி உமி புடம் போட்டு ஜாக்கிரதையாய் எடுத்துக் கொள்ளவும். சர்வ வியாதிக்கும் ஆகும்.

~~264. ரச செந்தூரம்.~~

264. ரச செந்தூரம்.

பெருந் தும்மட்டிக் காய் சாரால் 4 பல ரசத்தை அரைத்து மேற்கண்ட காயினுள் மேற்கண்ட ரசத்தை செலுத்தி சீலைமண் 7 செய்து உடன் லேசான 10 எருவில் புடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு ஐவிரலி கொடியின் வேரைப் பிடுங்கி குழித்தைலம் இறக்கி மேற்கண்ட ரச பஸ்பத்தை மேற்கண்ட தைலத்தால் பிசைந்து உருண்டையாக்கி நன்றாக உலர்த்தி பின்பு உளுந்து மாவால் 5 சீலை செய்து உலர்த்தி எடுத்து வாய் வட்டமுள்ள சீசாவுக்குள் தைலம் கொஞ்சம் தடவி அதற்குள் மேற்கண்ட உருண்டையை வைத்து மாவுக்கல் கார்க்கு போட்டு 5 சீலைமண் செய்து ஒரு பானையில் 4 விறற்கடை மணல் கொட்டி அதன் மேல் மேற்கண்ட சீசாவை வைத்து அதன் மேல் மணல் நிரைய கொட்டி ஒருமுடி சீலை மண் செய்து 200 எருவில் புடம் போடவும். குழி வெட்டி அதில் எருவடுக்கி பானை வைத்து புடம் போடவும் செந்தூரமாகும். அரிசியெடை வெண்ணெய், நெய் முதலிய அநுபானங்களில் கொடுக்க சகல வியாதிக்கும் கொடுக்கலாம். ஐவிரலிக்கு கொரண்டி என்றும் பெயர்.

265. ரச செந்தூரம்.

ஒரு சேர் ரசத்தை வர்லையாக்கி குழிவோட்டி ஊற்றி நண்டின் சாரால் 3 ஜாமம் சுருக்கு கொடுத்து எடுத்து 200 கருப்பு வெத்திலை நய்ய அரைத்து ரசத்திற்கு கவசம் செய்து ஒரு பானையில் 4 விரகடை மணல் கொட்டி கவசத்தை வைத்து மேலும் நிரைய மணல் கொட்டி சானைக்கு பானை வாய்க்கு மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி 4 ஜாமம் எரிக்க செந்தூரமாம். காடாக்கினியாய் எரிக்கவும். மேலோட்டிலும் ரசம் வெண்மையாய் பிடித்திருக்கும். உசாராய் எடுத்து சுரண்டி எடுத்துக் கொள்ளவும்.

266. தாம்பிர செந்தூரம்.

தாம்பிர ராகு பொடியை பழச்சாரில் 9 நாள் ஊரப் போட்டு மேற்கண்ட சாறை 2,3 தரம் ஊற்றி விட்டு புதிய சார் ஒன்றரை அங்குலம் தேங்கியிருக்க வேண்டும். அப்படியாக விட்டு பின்பு சுடு ஜலத்தால் கழுவி கல்வத்திலிட்டு ஆடு தின்னு பாளை சாரால் 3 நாள் அரைத்து பில்லை தட்டி உலர்த்தி ஓட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் செய்து முழப்புடமிடவும். இம்மாதிரி 7 புடம் போட செந்தூரமாம். வெண்ணெய் முதலியவை அநுபானம். அரிசிஎளவு குஷ்டம், கிராணி குன்மம் வாய்வு முதலிய எல்லா வியாதிக்கும் கொடுக்க தீரும்.

267. வெள்ளி பற்பம்.

சன்ன தூளாக சிறு அரத்தில் ராவின சரிகை வெள்ளி ராகு பொடி தோலா 1 வெள்ளை பாஷாணம் தோலா கால் கூட்டி அரைத்து ஆலாம் பால் விட்டு நய்ய அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் செய்து உலர்த்தி 125 எருவில் புடம் போட நீரும் நீராமல் போனால் மறுபுடம் இரு போட பற்பமாய்விடும். பல ரோகங்கள் தீரும்.

268. பழைய ரூபா பற்பம்.

சர்வ பற்பமும் செய்ய ஐயநீராகும்.

சிறு பிள்ளைகள் சிறு நீர் ஒரு சட்டி நிரைய பிடித்து குழி தோண்டி அதில் அப்படியே 15 நாள் வைத்து பின்பு அதில் புதிய தழை தேங்காய் அளவு அரைத்த விழுதை போட்டு கலக்கி வைத்து விட்டு அதில் சுண்ணாம்பு கல் கொஞ்சம் போட்டு மூடி வைத்துக் கொண்டு தனக்கு வேண்டும் போது இந்த ஐயநீரில் ஒரு ரூபாயை 11 தரம் சிவக்க காய்ச்சி தோய்த்து கவதும்பை இலையும் குப்பை மேனியிலையும் சேர்த்து அரைத்து பொதிந்து 7 சீலைமண் செய்து குழிவெட்டி உமி, புளியம் பொருக்கு எருவுகள் போட்டு கவசம் வைத்து மேலும் மேற்கண்ட நீர் கலந்து போட்டு கெஜபுடம் போடவும் பற்பம் ஆகும். பச்சை பயிர் செய்து அதில் அரிசியெடை வைத்து தின்னவும். வெண்ணெயிலும் உண்ணலாம். திரேகம் கெட்டியாகும். இது போல் தாம்பிரம், தங்கம் முதலியவைகளும்

செய்துக் கொள்ளலாம், ரச பாஷாண லிங்கம் பூரம் வீரம் முதலியவைகளையும் ஓட்டில் வைத்து சுருக்கு 4 ஜாமம் கொடுத்து கட்டிக் கொள்ளலாம். இச்செயநீரால் அரைத்து நெருப்பு பீங்கான் தட்டில் போட்டு செயநீர் ஊற்றி சிறுநெருப்பால் எரித்து கிளறி வற்ற வைத்து சுண்டின பின் கொஞ்ச செயநீர் விடவும் சுண்டிப்பதுமாய் 2 அல்லது 3 ஜாமம் வருத்தால் கட்டு பட்டு போம். நெருப்பில் கடுகளவு போட்டு புகைந்தால் மறுபடியும் நீர் விட்டு வருத்து சுண்டித்து வரவும். இப்படி சோதனை பார்த்து புகையாதிருக்கும் வரையில் ஜெயநீர் விட்டு சுண்டவைத்து எடுத்துக் கொள்ளலாம். அநுபோகிகளுக்கு அதிகம் சொல்ல தேவையில்லை.

269. சக்தி லிங்க மெழுகு.

வெள்ளாட்டு கோமியம் அரை படி ஒரு பலம் லிங்க கட்டி அதில் போட்டு சிறு தீயாக எரித்து கொழும்பு பாகமில் இறக்கி இக் கொழும்பை லிங்கக் கட்டிக்கு கவசம் செய்து சிறு குடுவையில் போட்டு சதுர கள்ளி பால் நிறைய விட்டு ஒரு சீலை மண் நன்குகசெய்து உளர்த்தி ஒரு பானையில் அரைபடி மணல் கொட்டி அதன் மேல் கவசம் வைத்து 18மணி நேரம் வரையில் கமலாக்கினியாக எரித்து பார்க்க மெழுகாயிருக்கும். இந்தமெழுகை சர்வ சுரத்திற்கும் சன்னிக்கும் வாய்வுக்கும்தேன் இஞ்சி சார் முலைப் பாலிலும் அரிசியெடை கொடுக்கவும்.

270. வெள்ளி பற்பம்.

வெள்ளி தகட்டை மேல் கண்ட முறைப்படி செய்த ஜயநீரில் சிவக்க காய்ச்சி 11 தரம் தவைத்து எடுத்து தேங்காயளவு கரி வேலம் இலைஅரைத்து 2 பாகம் செய்து ஒரு பாகம் அடையாக தட்டி அதின் மத்தியில் கிராம்பை தூள் செய்து மூன்றரை தோலா போட்டு தகடு வைத்து மேலும் மூன்றரை தோலகிராம்பு தூள் போட்டு அதன் மேல் மற்ற பாதி அரைத்த விழுதை வைத்து நன்குக மூடி 7 சீலை மண் செய்து கெஜபுடமிடவும் பற்பம் ஆகும். அரிசியெடை முலைப் பாலில் கொடுக்க தாது புஷ்டியுண்டாகும். மற்ற வியாதிகளுக்கும் அரிசி எடை போதும்.

271. ரச பற்பம்.

4 அங்குல நீள குருத்தும் தேங்காய் அளவு கிழங்கு உள்ளதாய் வாழைக் கிழங்கு கொண்டு வந்த குருத்து பக்கத்திலிருந்து அரை கிழங்கு வரையில் குடைந்து அதில் சுத்தி செய்த ரசம் 4 பலம் அதில் விட்டு அதின் மேல் குப்பமணி சார் விட்டு அத்தழைய அரைத்து அதன் வாய் மூடி சீலை மண் செய்து ஒரு ஓட்டில் வைத்து 250 எருவில் புடம் போட ஓட்டில் பூத்து பற்பமாயிருக்கும். எடுத்து வைத்துக் கொண்டு அரிசியெடை வெண்ணெயில் கொடுக்க மேக வாய்வு முதலிய ரோகங்களுக்கு 3 நாள் கொடுக்க மேக வாய்வு முதலியன போகும். இது மேல் வேலைக்கும் ஆகும். இதை காகிதத்தில் மடித்து வைத்தால் காகிதம் நனைந்து விடும். வாலை ரசத்தால் செய்வது மிகவும் சிரேஷ்டமானது. இதை ரச உப்பு என சொல்வதற்கு யாதொரு ஆட்சேபனையில்லை. ரசமுப்பு செய்வது அருமையாகும். இந்த ரசமுப்பை சகல மருந்துகளுக்கும் குருவாய் கொஞ்சம் போட்டு செய்துக் கொண்டால் அதிக கார வீர குணங்கள் காணலாம். சன்னம் எனவும் சொல்லலாம். மஞ்சளுக்கு சிவக்கிறது. இம்முறை மிகக அருமை பெருமை பெற்ற பகந் கொண்ட கை கண்ட முறை.

272. கெந்தி பற்பம்.

கொஞ்சம் பெரிய குழிவுள்ள புதிய சட்டியில் மத்தி என்னும் மதுரமரபட்டை சாம்பல் போட்டு பரப்பி அதன் மேல் நடுவில் 4 பலம் கெந்தியை அமுர்தசலை கெந்தியைப் பரப்பி அடுப்பேற்றி எரிக்கவும். கெந்தி உருகி வரும் போது மேற்கண்ட சாம்பலை கொஞ்சம் கொஞ்சமாக தூவிவில் போதும். அப்படியே இறக்கி வைத்துக் கொண்டு ஆறிய பின் இவ்வுருக்கின கெந்தியை ஒருபல மெடுத்து குப்பமேனியிலை அரைத்து 2 பாகம் செய்து ஒரு பாகத்தை குகைகாய செய்து மேற்கண்ட சாம்பல் கொட்டி அதன் மேல் மேற்கண்ட கெந்தியை வைத்து மேலும் சாம்பல் கொட்டி மற்ற பாதி அரைத்த தழையைக் கொண்டு

மூடி சீலை மண் செய்து 7 எருவில் புடமிட பற்பம். குன்றி அளவு தேனில் கொள்ள சுரம் முதலிய நோவுகள் தீரும்.

273. கெந்தி பற்பம்.

முன்போல் சாம்பலில் உருக்கி உருண்டை செய்து உருட்டி எடுத்து சிறு சின்னியிலை அரைத்து கவசம் செய்து சீலைமண் செய்து 15 எருவில் புடம் போடவும். குன்றி அளவ வெண்ணெயில் கொடுகக மேக வியாதி தீரும்.

274. தாளக பற்பம்.

இருமல் வியாதிக்கு கை கண்டது.

தாளகத்தை பனங் கள்ளு சுண்ணாம்பு கல்லில் நாளித்து சுத்தி செய்ததை கரிசாலை 3 நாள் ஊரப் போட்டு எடுத்த ஒரு குருவையில் போட்டு மேலும் ஒரு குருவை மூடி சீலைமண் செய்து அடுப்பேற்றி 2 விறகால் ஒரு ஜாமமும் 4 விறகால் ஒரு ஜாமமும் எரித்து ஆறவிட்டு கவசத்தை பிரித்து மேல் சட்டியில் ஏறி இருக்கும் பதங்கத்தை சுரண்டி எடுத்துக் கொண்டு அரிசி யெடை தேனில் கொடுக்க இருமல் இளைப்பு இளைப்பு தீரும். லேகியங்களிலும் கொடுக்கலாம். சுக்கு, மிளகு, திப்பிலி சமமாய் சேர்த்தரைத்த தேனி விட்டு பிசைந்து பதங்க சுரண்டிய மேல் சட்டியுள் போட்டு பிரட்டி எடுத்துக் கொண்டு சுண்டைக்காயளவு கொடுக்க மேற்கண்ட ரோகங்கள் தீரும் அல்லது பதங்க மேல் சட்டியில் எருக்கன் பால் கொஞ்சம் ஊற்றி வெள்ளை ஊமத்தை துணி துண்டை கை அகலம் போட்டு பிரட்டி எடுத்து ஊமத்தை கொஞ்சம் துணியை சுங்கானில் போட்டு புகை பிடிக்க முழுங்க மேல்கண்ட இளைப்பு இருமல் உடனே நிற்கும். இதற்கு ஆன லேகியம் பின்னால் எழுதலாம்.

275 தாளக பற்பம்.

ஒரு பானையில் அல்லது மதுர மரப்பட்டை இடித்த தூள் செய்து அரை படி போட்டு சுத்தி செய்த தாளகம் வைத்து மேலும் அரைப்படி பட்டை தூள் கொட்டி அழுத்தி சீலை மண் செய்து அடுப்பேற்றி 4 விறகால் 1ஜாமம் எரித்து ஆற விட்டு எடுக்க பற்பம், மேற்கண்ட நோவுகள் தீரும்.

276. கெந்தியை கட்டிக் கொள்ள.

ஒரு பானையில் மதுரப் பட்டை சாம்பல் ஒன்றரை படி போட்டு தேவையான அளவு சுத்தி செய்த கெந்தியை வைத்து மேலும் ஒன்றரை படி சாம்பல் கொட்டி அழுத்தி அடுப்பேற்றி 2 விறகால் ஒரு ஜாமம் எரித்து ஆற விட்டு எடுத்துக் கொள்ளவும். கட்டிப் போச்சுது. இதை பற்பம் செய்ய வேண்டுமானால் தேவையான அளவு மேற்கண்ட கெந்திக் கொடிவேலியிலை அரைத்து கவசம் செய்து 7 சீலை மண் செய்து 35 அல்லது 50 எருவில் புடமிட பற்பமாகும். காச்சல் மேகங்கள் தீரும். அநுபானம் நெய், தேன் வெண்ணெய்.

277. தாளக செந்தூரம் கை கண்டது.

தாளகம் பலம் 4, சிறு சிறு துண்டுகளாக நறுக்கி மோரில் 3 நாளும் பழச் சாரில் 3 நாளும் சாம்பல் பசனிக்காய் சாரில் 3 நாளும் ஊரப் போட்டு எடுத்த நன்றாய் அரைத்த ஊமத்தை முருக்கன் ப சாரில் 3 நாள் ஊரப் போட்டு மேற்கண்ட சாரால் அரைத்து குமரிச் சாறு ஒரு நாள் ஊரப் போட்டு மேற்கண்ட சாரில் அரைத்து பில்லை செய்து ஊமத்தை முருக்கன் பட்டையை தூள் செய்து ஒரு அகலில் போட்டு அதன் மேல் மேற்கண்ட பில்லையை வைத்து மேலும் தூள் போட்டு அகல மூடி சீலை மண் 7 செய்து 10 எருவில் புடமிட்டு எடுத்த சாம்பல் பூசனிக்காய் சாரால் அரைத்து ஊமத்தை பழச்சாரால் அரைத்த ஊமத்தை முருக்கன் பட்டை தூள் போட்டு சீலை மண் செய்து 5 அல்லது 7 எருவில் புடமிட பற்பமாம். செந்தூரமாம். பனைவிட்ட வெங்காயச் சாரில் 1. மண்டலம் காலை, மாலை கொள்ள குஷ்டம், போகும். பசுவின் பாலில் மண்டலம்

கொள்ள கருஞ் குஷ்டம் போம், சயிக்கும் இஞ்சி சாரில் க்ஷயம், தீரும். தேனில் க்ஷயகாசம் போம். சோபை, காமாலை முதலியவை போம். கை கண்டது.

278. கல்நார் பற்பம்.

அரை தலைவலி தீரும்.

கல்நாரை ஊமத்தை இலைப் பாலில் ஒரு மணி நேரம் சுருக்கு கொடுத்து சிகப்பு மணத்தக்காளி இலை அரைத்து கவசம் செய்து 3சீலை மண் செய்து 40 எருவில் புடமிட பற்பம். பணவிடை வாயில் போட்டுக் கொண்டு சுடு சோறும் பகலின் தயிரும் கூட்டி உண்ணவும். பின்பு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தலை முழுகவும். தலை முழுகும் எண்ணெயாவது பச்சப் பத்திரி தைலம் தான் பின்வரும்.

279. வெள்ளி பற்பம்.

ரூபாயை தகடு தட்டி திருகு கள்ளி பாலில் 21 தரம் அல்லது வெட்டையாகிற வரையில் சிவக்க காய்ச்சி முலைத்து வெள்ளை பிரம தண்டின் இலை அரைத்து கவசம் செய்து 7 சீலை மண் செய்து 20 எருவில் புடமிட பற்பமாம்.

280. வெள்ளி பற்பம்.

பழைய அக்ஷமுள்ள ரூபாயை முள்ளு கீரை சாற்றில் 40 தரம் சிவக்க காய்ச்சி அணைக்க அதன் மேல் ஒரு தோலா வால் ரசத்தை வெள்ளெருக்கன் பாலால் அரைத்து தடவி கவசம் செய்து உலர்த்தி அதன் மேல் காட்டு கத்திரி அல்லது வெள்ளை பூவுள்ள கண்டங் கத்திரியின் காயை இடித்தரைத்து கவசம் செய்து அதன் மேல் 7 சீலைமண்செய்து கெஜபுடம் போ போட்டால் பற்பமாயிருக்கும். அரிசியெடை.

281. வாலைரச கெந்தி செந்தூரம்.

2 தோலா கெந்தியை வெற்றிலை சாறால் அரைத்து 2 குகை செய்து அதினுள் 1 தோலா வாலை ரசம் விட்டு மேற்கண்ட மறு மூசையை மூடி மண்ணால் அது கொள்ளும் படியாய் 2 மூசை செய்து அதற்குள் மேற்கண்ட கெந்தக மூசை உருண்டையை வைத்து பொருந்த சீலை மண் செய்து உலர்த்தி ஒரு சட்டியில் மணல் கொட்டி மணலுக்குள் வைத்து 4 ஜாமம் எரிக்க செந்தூரமாம். அரிசியெடை பசு வெண்ணெயில் கொடுக்க வாய்வு காச்சல், கிரணி மேகம் சர்வத்துக்கும் கொடுக்கத் தீரும்.

282. காந்த செந்தூரம்.

காந்தம் தோலா 1 சாரம் தோலா 1¼, வெடியுப்பு தோலா 1 எக்கு தோலா முக்கால் கெந்தகம் தோலா அரை கூட்டி பழச்சாறால் 4 ஜாமம் மை போலரைத்து பில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து 5 சீலை மண் செய்து 50 எருவில் புடம் போட செந்தூரமாம். அநுபானம் பனை வெல்லம், அளவு குன்றி எடை வாய்வு முட்டு வாய்வு வீக்கம் பாண்டலம் காமாலை முதலிய ரோகங்கள் தீரும்.

283. சலாசத்து சுண்ணம்.

பளிங்கு கண்ணாடி போன்றிருக்கும் சலாசத்து வி 1 ஒரு கலாய் பாத்திரத்தில் போட்டு கோவையிலைச் சார் முழுக விட்டு 3 நாள் ஊறின பின்னெடுத்து ஓட்டில் வைத்து சீலைமண் செய்து முழப்புடமிடவும். பின்பு சிகப்பு பருத்தியிலைச் சாரில் 3 நாள் ஊறப் போட்டு முன் போல் புடம் போட்ட பின் சங்கன் யிலைச் சாரில் 3 நாள் ஊறப் போட்டு எடுத்து முன் போல் புடமிட்டு பின்பு மேற்கண்ட சார் ஒரு குழியுள்ள ஓட்டில் ஊற்றி மேற் கண்ட பற்பத்தை ஊறப் போட்டு 3 வது நாள் மறு ஓட்டால் மூடி சீலை மண் செய்து கெஜபுடமிட்டு எடுத்துக் கொண்டு கண்ட அண்ட நோய்களுக்கெல்லாம் குன்றியிடை தேனில் வெண்ணெய், நெய் முதலிய அநுபானங்களில் கொடுக்க தீரும். சுரம் முதலியனவும் தீரும்.

284. சலாசத்து பற்பம்.

இருமல் காச்சல் குளிர் சுரம் மூச்சு மேகச் சூடு வெள்ளை பிரமேகம் சுருக்கு முதலியன தீர.

சலாசத்தை அப்புக் கோவையிலை சாரில் 7 நாள் ஊரப் போட்டு மேற்கண்ட இலை 4 பலம் அரைத்து கவசம் செய்து சீலைமண் செய்து 40 எருவில் புடமிட பற்பம். மேற்கண்ட அனுபானம் மேற்கண்ட நோவுகள் தீரும்.

285. லிங்கமெழுகு கை கண்டது.

3 மண்ணுங்கட்டி அடுப்பு வைத்து அதன் மேல் ஒரு ஒன்ற வைத்து அதன் மேல் உயர்ந்த உலர்ந்த லிங்கம் வைத்து சிற தீபா எரித்து கலப்பைக் கிழங்கு அல்லது கார்த்திகை கிழங்கு அல்லது கண்ணேவு கிழங்கு அல்லது நாவிக்கிழங்கு)என்ற பெயர். இதன் சார் இடித்து பிழிந்துக் கொண்டு இதனுல் சுருக்கு கொடுத்தவிக் விடாமல் 4 ஜாமம் சுருக்கு கொடுத்து கடுகளவு நெருப்பில் போட்டு பார்க்க புகைந்தால் இன்னொரு ஜாமம் சுருக்கு கொடுத்து கொஞ்சம் நெருப்பில் போட்டு சோதித்து பார்க்கவும். மேற்கண்ட சாற்றை கரண்டியில் மொண்டு சொட்டிக் கொண்டு வந்தால் மெழுகு ஆகும். எடுத்து வைத்துக் கொண்டு மெழுகு 1, செம்பு 1, வெள்ளி 1 இரண்டையும் சேர்த்து உருகும் போது மேற்கண்ட மெழுகை கொடுத்து கோலாடி கொடுக்கவும். வயது 8½. அநேக வியாதிக்கும் கை கண்டது.

286. நாகரச செந்தூரம் (சுலோகம்)

நாகரச கெந்தகம் யேமரச மர்த்தனம்
பால ரவிசம்பனம் லோகபரி பாலனம்.

287. பாஷாண சுன்னம்.

நாயுருவி சாம்பல் படி 2 கரியுப்பு படி அரை ஒரு சட்டியில் பாதி சாம்பல் கொட்டி பரப்பி அதன் மேல் கால் படி உப்ப கொட்டி நடுவில் வெள்ளை பாஷாணத்தை வைத்து அதமரைய கால்படி உப்ப கொட்டி அதன் மேல் மறுபடியும் சாம்பல் கொட்டி அமுத்தி ஒடு மூடி சீலைமண் செய்து அடுப்பேற்றி 3 விரல் கனம் உள்ள விறகு தீ கொண்டு 2 ஜாமம் எரித்து ஆரவிட்டு கவசம் பிரித்து பார். வெள்ளையாய் பூத்து இருக்கும். எடுத்துக் கொண்டு கால் அரிசி எடை வெண்ணெய், தேனில், நெய்யில் அனுபானம் ஆக கொள்ள தாது கட்டி சிராவக வியாதிகள் யாவும் தீரும்.

288. லிங்க மெழுகு கை கண்டது,

லிங்க கட்டிக்கு சிவகரந்தை சாரால் 4 ஜாமம் சுருக்கு கொடுத்து பின் கெருடன் கிழங்கு சாரால் 4 ஜாமம் சுருக்கு கொடுத்து இக்கட்டிக் க 4-ல 1 பக்கம் சூதம் சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு வெள்ளியின் பேரிலும் தாம்பிரத்தின் பேரிலும் கொடுக்க வயது 7. கை கண்டது என் தீர்த்தமலை வைத்திய சுப்பன் முறையில் இருக்கிறது.

289. ரச செந்தூரம் கை கண்டது.

கெந்தகம் பலம் 2 கொடிவேலி வேர் தூள் பண்ணி வெத்திலைச் சாரால் அரைத்து 2 குகை செய்து ஒன்றில் கொஞ்சம் மேற்கண்ட சார் விட்டு அதில் ஒரு பலம் சூதம் விட்டு மேற்கண்ட மற குகையால் மூடி சந்துவாய் தெரியாமல் சீலைமண் 7 செய்து ஒரு சட்டியில் மாவு நாலங்குலம் கொட்டி குகை வைத்து அதன் மேலும் மாவு கொடி அடுப் பேற்றி 4 ஜாமம் எரிக்க செந்தூரம். (தீர்த்த மலை வைத்திய சுப்பன்)

290. துருசு சுன்னம் கை கண்டது.

காரியத்தை உருக்கி அதில் ஐந்து தரம் துருசை துவைத்து எடுத்து பூனீர ஜலம் விட்டு அரைத்து மேற்கண்ட துருசு கட்டிக் கவசம் செய்து ஒரு சட்டியில் வைத்து அடுப்பேற்றி எரிக்கவும். தீபாக்கினியாக எரிக்கவும். இந்த படி 5 தரம் எரிக்கவும். (தீர்த்தமலை சுப்பன் முறை).

291. தாம்பிர சுன்னம்.

கழுதை குசத்தி மாமிசத்தில் தாம்பிரத்தை வைத்து சீலை மண் செய்து கெஜபுடம் போட சுன்னம். கை கண்டது. (தீர்த்தமலை வைத்திய சுப்பன் முறை)

292. பாஷாண சுன்னம்.

வேகாத தலை மண்டை கொண்டு வந்து இடித்து தூள் செய்து அரைத்து 2 குகை செய்து அதில் வெள்ளை பாஷாணம் வைத்து அதால் மேலும் மூடி ஓட்டில் வைத்து ஓடு மூடி சந்தில்லாமல் சீலைமண் 6 செய்து குக்குட புடம் போட சுன்னம் 1. மீயம் 6 கொடுக்க சுத்தமாகும்.

293. வெள்ளீய நல்ல முறை.

4 பலம் வெள்ளீயத்திற்கு மேல் 4 வீசை பச்சை கற்பூரத்தை எருக்கன் பால் விட்டு 4 ஜாமம் அரைத்து மேல் பூசி கவசம் செய்து காய வைத்து சீலைமண் 7 செய்து உணர்த்தி 100 விரட்டியில் புடம் போட்டு எடுத்துப் பார்க்க வயது ஒன்பது. ஆணிக் கொக்கும் எடையும் குறைவுபடாது. கை கண்டது.

294. ரச சுன்னம்.

கத்தாழைப் பூவைக் கொண்டு வந்து இடித்து சார் பிழிந்து சட்டியில் சக்கையை வைத்து பின்பு 10 விராகன் ரசத்தை கல்வத்திலிட்டு கையான் தகரை சார் விட்டு 2 விராகன் கஸ்தூரி முதல் ரகம் உடையதும் போட்டு மேற்கண்ட சாரரால் 1 நாழிகை அரைத்துப் பார்த்தால் தழும்பாயிருக்கும். அதை யெடுத்து முத்த தேங்காயை துவாரம் செய்து அதில் போட்டு ஆப்பு கட்டியாக அடித்து சீலைமண் செய்து மேல் கண்ட சட்டியில் வைத்து மேலும் மேற்கண்ட கத்தாழை பூவை இடித்து சார் பிழிந்து ஊற்றி விட்டு சக்கையை மாத்திரம் தேங்காய் தெரியாமல் மூடி அமுத்தி மேல் சட்டி மூடி சீலை மண் சந்து வாய் தெரியாமல் செய்து 100 எருவில் புடம் போட சுன்னமாம் எடுத்துக் கொண்டு 10 வீ தாம்பிரத்தை உருக்கி பணவிடை சுன்னம் கொடுக்க வயது பத்து சரியாயிருக்கும். கை கண்டது.

295. ரச பஸ்பம்.

சுத்தி செய்த ரசம் தோலா 2 வெள்ளெருக்கன் பால் பலம் ஒன்றரை அரை அடிவு உயரமும் 4 அங்குல குறுக்களவுள்ளதும் திருகல்வுள்ள மரை மேல் மூடிவுள்ளதும் தாம்பிர டப்பா 1 மேற்கண்ட ரசத்தை மேற்கண்ட பாலால் அரைத்து செலுத்தி விட வேண்டும். ஒரு நாளில்ல அல்லது தினம் கொஞ்சம் கொஞ்சமாக பால் விட்டு அரைக்க வெண்ணெயாகும். இவ்வெண்ணெயை வில்வ பழத்தை உடைந்து சோற்றை எடுத்து விட்டு அதிநுள் போட்டு மேற்கண்ட சக்கையால் அதன் சோற்றால் மூடி திணித்து அதன் ஓட்டால் துவாரத்தை ஆப்பைப் போல் பிசுவாய் அடைத்து சரிபடுத்திப் பின் மேற்கண்ட தாம்பிரடப்பாவுக்குள் நடுவில் நிற்க வைத்து டப்பா நிரைய முக்கால் பழத்திற்கு கொஞ்சம் அதிகமாகவே பழுத்த வாழைப்பழம் உரித்து ஈசு தோலை எரிந்து விட்டு பழ சுளையை நிரைய போட்டு அமுத்தி மேல் மூடியால் மூடி திருகி விட்டு விட வேண்டும். பின்பு டப்பாவின் மேல் உளுந்து மாவால் கவசம் ஒரு அரை அங்குலம் கனம் கவசம் செய்து விட்டு பின்ப 1 முழ அகல குழி தோண்டி முக்கால் முழ ஆழம் இருக்க வேண்டும். வரட்டியை அடுக்கி கவசம் வைத்து மேலும் அடுக்கி நெருப்பு வைக்கவும், சுன்னம் ஆகும். ரசத்தை நீர் வாங்கும் பெரு வியாதி முதல் எல்லாம் நீங்கும். இதை மேல் வேலைக்குப் உபயோகப்படுத்தலாம். 2 தோலா வெள் வங்கத்தை உருக்கி குன்றி அளவு சுன்னத்தை எடுத்து நிமிட்டி தூவிக் கொண்டு கிளரிக் கொண்டே வந்தால் நீர் வாங்கி கட்டியாயிருக்கும். குன்றியிடை போதுமா.

296. பொன்னரி தார பற்பம்.

பொன்னரி தாரம் தோலா 5 ஒரு சட்டியில் எருக்கன் தழையை போட்டு அமுத்தி நடுவில் மேற்கண்ட தாரத்தை வைத்து அதன் மேல் மேற்கண்ட தழை நிரைய் அமுத்தி சட்டி வாய் ஒரு ஓட்டால் மூடி சந்து இல்லாமல் சீலைமண் செய்து 4 ஜாமம் அடுப்பேற்றி ஒரு ஜாதி விறகால் எரித்து சட்டி ஆறின பின் எடுக்க பற்பம் அல்லது உருகி வட்டு போலிருக்கும் அதை எடுத்து அதற்கு சரி எடை அரிசி திப்பிலி போட்டு 16 ஜாமம் கை விடாமல் அரைத்து எடுத்து சீசாவில் பத்திரப்படுத்தவும். பூஜை பாத்திரமா செய்து

பின் காலரை அளவு சீரு கல்கண்டு நறுக்கி அதில் அரிசியெடை வைத்து சாப்பிடவும். வியாதி தீரும் வரையில் சாப்பிடவும். தீரும் வியாதி அஷ்காசம், சிலேத்மரோகம், -96-ம் ரத்த காசம் முதலியனவும் சுரம் 64-ம் தீரும். ஆகாரம் சாப்பிடவும். பசி அதிகமாகும். கை கண்டது. (சேலம் செவ்வா பேட்டை அப்துல் காதர் சாயவு.

297. ரசமணி.

வர்த்தி தகட்டை பிளிப்பிலை ரசத்தில் 3 நாள் ஊர வைத்து களிம்பு போக கழுவி கல்வத்திலிட்டு பாதரசம் விட்டு கொஞ்சம் ஜலம் விட்டு நேக அரைக்க வெண்ணெயாகும். கொஞ்சம் நீர் இருக்கும் போதே உருண்டை செய்து துவார மிட்டு வெய்யிலில் உலர்த்த கட்டியாய் விடும். நூல் கோர்த்து மணியை இடுப்பில் கட்டிக் கொண்டால் அதிலுள்ள குணம் தெரியும். (சேலம் செவ்வாபேட்டை அப்துல்வஉறாப் சாயபு.)

298. சூத ராஜ்ய கள அவுஷத செந்தூரம்.

5-பலம் உலர்ந்த லிங்கத்தை பழச்சாரால் அரைத்து பில்லை செய்து சட்டியில் வைத்து மேல் சட்டியிறுள் சாட்டறணையிலை பால் பூசி பின்பு மேற்கண்ட சட்டியின் மேல் கவுத்தி மூடி சீலை மண் 5 செய்து அடுப்பேற்றி சட்டிமேல் ஈர துணியை போட்டு காடாக்கினியாய் 2 ஜாமம் எரித்து ஆற்றி மேல் சட்டியிலிருக்கும் பதங்கத்தை சுரண்டி எடுத்து பீங்கான் கோப்பையில் போட்டு மத்திக்க ரசம் வரும். பின்பு ஆமணக்கன் வேர் பட்டை வெள்ளூமத்தன் வேர் பட்டை, கொடிவேலி வேர் பட்டை இம்மூன்றையும் அரைத்து வட்டமாக கிண்ணி போல் செய்து பின்பு மேற்கண்ட பதங்க சட்டியில் இடித்து அரைத்த உப்பு அரை வாசி போட்டு அதன் மேல் மேற்கண்ட கிண்ணி வைத்ததை வைத்து அதில் ரசத்தை விட்டு அதன் மேல் உப்பு கொட்டி அதாவது முக்கால் சட்டி உப்பு இருக்க வேண்டும். பின்பு மேல் சட்டி மூடி வாய்க்கு 7 சீலை மண் செய்து காலை 6 மணிக்கு அடுப்பேற்றி மாலை 6 மணி வரையில் கூடாக்கினியாக எரித்து அடுப்பு ஆறின பின் மறு நாட் காலை சட்டியை சாய வைத்து உஷாராக சீலை பிரித்து மேல் சட்டியிலிருக்கும் பதங்கத்தை தேங்காய் நாரால் சுரண்டி திடைத்து எடுத்துக் கொண்டு பின்பு ஒரு பெரிய லிம்படை சீசாவிலாவது அல்லது அடி கூராகவும் கனமாகவும் உள்ள சீசாவிலாவது அல்லது கங்கா ஜல குப்பியாவது எடுத்து 7 சீலை மண் செய்து அதில் மேற்கண்ட பதங்கத்தை கொட்டி பலப்பக் கல்லால் வாய்க்கு கார்க்கு சந்தில்லாமல் அடைத்து சீலைமண் செய்து பின்பு ஒரு சட்டியில் 4 விரல் கனம் மணல் கொட்டி அதன் மீது மேற்கண்ட சீசாவைத்து சீசாவின் கழுத்தளவு மணல் கொட்டி அடுப்பேற்றி 8 ஜாமம் காடாக்கினியாய் எரித்து வருவதும், தவிர சீசா வாய்க்கு ஈர துணி அல்லது குமரி சோற்றி பொட்டணம் கட்டி ஒத்திக் கொண்டே வரவும். தீர்ந்தது. காலை சீசாவை எடுத்து கவசம் பிரித்து சீசாவை ஒடைத்து செந்தூரம் எடுத்து வைத்துக் கொண்டு 10 பெருக்கு சாப்பாடு போட்டு தான தர்மம் செய்து அரிசியெடை போதும். சாக போறவன் நாக்கு விழுந்து பேச முடியாத கஷ்டத்திலிருக்குமவன் நாக்கில் கொஞ்சம் தடவினால் தெளிவு வந்து பேசி விட்டு சாவான். இம் மருந்து தனி ரசத்தால் செந்தூரமாவதால் இதன் பெருமை வாயினால் சொல்ல முடியாது. அநேக கஷ்ட ரோகங்கள் யாவும் தீரும். வைத்தியனுக்கு இந்தஒரு மருந்து போதும். குப்பி செந்தூரம் செய்ய அநுபோகம் வேண்டும். மற்ற அநுபோக மில்லாதவர் செய்வாரானால் சீசா உடைந்து சுக்குல் சுக்குலாகி சிதறி அடித்து கொன்று விடும். தெரிந்தவர்களை கொண்டும் செய்யும் போது பார்த்து தெரிந்து கொள்வது நலம் .

299. சூதமேம மாம்.

100 வருஷம் சென்ற வில்வ மரத்தின் சேகை மெல்லின தூளாக அரைத்து வில்வக் கொழுந்தின் சாராலரைத்து மேல் மூடியுடன் குகை செய்து அதில் சுத்தி செய்த ரசம் வார்த்து மேல் மூடியால் மூடி கவசம் செய்து ஓட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் 7 செய்து 10 எருவில் புடம் போட்டு எடுக்க ஏம்மாம். விற்கலாம். கம்பி குளிகை மணிகள் செய்து மார்பில் போடலாம். குண்டலம் வளையல் பண்ணலாம். சோதியாம்.

300. தாளக மெழுகு.

சுத்தி செய்த தாளகத்தை அப்பிர தகட்டில் வைத்து செப்பு நெருஞ்சில் சாரில் சுருக்கு தாக்க மெழுகு ஆகும். குன்றி அளவு தேனில் கொள்ள சுவாச காசம் இரும்பல் க்ஷயம், சுரம் முதலியவை நீங்கும். அநுபானமறிந்து கொடுக்க அநேக வியாதிகள் தீரும். 5 நாள் 3 நாள் அதற்கு மேல் கொடுக்க கூடாது. நீலிவேரும், மிளகும் சேர்த்து கஷாயம். செய்து குடித்து வரவும். 3 நாள் புளி, உப்பு மட்டுபடுத்தவும். கடைசியில் பத்தியம் முறித்து விடவும்.

****

முற்றும்

****

சு.சக்22.8.62.

